IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 10 ♦ ISSUE - 197 ♦ FRIDAY 05 JULY 2013

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

Krishna Fancy & Video
• இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
• பார்ட்டி டெக்கரேசன்
• மணப்பெண் அலங்காரம்
• தென் இந்திய மலர்கள்
• டெய்லரிங், போன்கார்ட்
• பேக்ஸ் – ஜெராக்ஸ்
• விமான டிக்கெட்டு
• ஆடியோ – வீடியோ
• (தமிழ் – மலையாளம்)
• செய்தித்தாள்கள் (தமிழ்–மலையாளம்)
மல்லிகைப் பூ Special Offer 80p Only
Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07725869630

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.uk

Jr financial accountants
Certified financial accountants
Are you keen for success your business?
Our professional services include help and advice with:
• Accounts preparation & certification
• Book keeping services
• Payroll
• VAT returns
• Self assessment tax return services
• Business start ups & Business plans
• Company formation
• Business Financial advice
To take advantage of our free initial consultation, just contact us - JR Financial Accountants
4th Floor – Office No 4 | Cygnet House | 12-14 Sydenham Road | Croydon|CR0 2EE
T: 078 2864 1404 / 020 3730 4797
E: contact@jrfa.co.uk W: www.jrfa.co.uk

• தொழில் முறை விசா
• நிரந்தர விசா
• வதிவுரிமை விண்ணப்பங்கள்
• குடும்ப விசா
• ஐரோப்பிய குடும்ப விசா
• நிரந்தர குடியுரிமை விசா
• செங்கன் விசா
• Tier -2 Sponsorship License (For Employers)
• சுற்றுலா விசா & Spouse Visa from Srilanka
OISC F 201200490
மேலும் பல சட்ட ரீதியான சேவைகளை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்....
Contact: V Prabhakaran
T : 020 3489 9838 / M : 07530 623 862
www.aceimmigration.co.uk
ACE IMMIGRATION SERVICES
Suite - Front F, Second Floor, 31-33, College Road, Harrow, HA1 1EJ
Tel: 020 3489 9838 / 075 3062 3862

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
Summer Specials....
£50 off consultations in June
10% off all treatments during July and August
HSFC offers specialist treatment in all areas of assisted reproduction (including IVC, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

Call us today and claim back your PPI
Fees From 15% No upfront or Appeal Fee*
Largest ppi claim £25,000 refunded through us
ACCIDENT?
WE PROVIDE A COMPLETE ACCIDENT MANAGEMENT SOLUTION
CLAIMSmatters
RECOVERY | REPLACEMENT VEHICLE | REPAIR | 100% NO-WIN-NO -FEE
08000 842 472 | 020 8933 0305 | www.claimsmatters.com

ஒசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

C1, B1 & B2 Test

Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு	£ 150 .00 மட்டுமே * Including Everything	Certificate only in six days	இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

West London
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072

Arumpukal Marriage Brokers

Tel : 020 8682 1057

Mob: 07889 930 130 I Fax : 020 8682 1057

E.Mail : arumpugall@gmail.com

GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்

எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

07983 589 993
07723 467 012

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

UK COOL AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

BUILDING WORK
Roofing
Extension

MOVING & DEVILERY

UK COOL & SHOP FITTING LTD

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

Shoptek .co.uk

A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ

USED SHOP SHELVING



NEW SHOP SHELVING

Suppliers of New and Used Shop Shelving
From our Cash & Carry Warehouse

Shoptek .co.uk Tel: 01455 221512
Email: info@shoptek.co.uk

பூனைக்கு மணி

ஆசிரியருக்கு..

சாந்தி சச்சிதானந்தம் அவர்களின் கட்டுரையை ஆரம்பத்திலிருந்து கடைசி வரி வரை வாசித்தேன். சிந்திக்கத் தூண்டிய கருத்துக்கள் இருப்பினும், இறுதியில் அவர் கூறும் புதிய அணுகு முறை எதுவாக இருக்கும் என்பதில் குழப்பம். பூனைக்கு மணி கட்டுவது யார்?

- உமா மகாலிங்கம்.

காதர் வாத்தியின் தமாசு!

ஜீரிவி தொலைக்காட்சி வெளிச்சம் நிகழ்சியில் நாச்சியப்பன் மாநாட்டில் தான் கலந்துகொண்டது பற்றிக் குறிப் பிட்ட அதன் நிலைய ஆய்வாளர் காதர் மாஸ்டர், எதிர்க் கருத்துக் கொண்ட வின்ஸ்ரன் சேர்ச்சிலும், ஜோசப் ஸ்ராலினும் கூட்டு வைத்ததை உதாரணமாக எடுத்தார். ரஷ்சியத் தலைவரும் பிரித்தானிய ஏகாதிபத்தி யத்தின்பிரதமரும்ஏற்படுத்தியமுலோ பாய நகர்வினை, உள்ளூர் ஆண்டிப் பண்டாரங்கள் டெல்லிக்கு திருவோடு ஏந்திச் சென்ற சம்பவத்துடன் ஒப்பிட் டாரே 'ஆய்வாளர்' அங்கேதான் அவரது 'திறமை' வெளிப்பட்டது.

- இணுவை ரங்கன்

ஊரைச் சுத்தி உலையில் போட்டவர்கள்.

'ஈழத்தில் போர் ஆரம்பித்த பின்பு, அவசர கால நிதி என்று திரட்டினார் கள். உணர்ச்சிவசப்பட்ட மக்கள் வங்கி களில் கடன் வாங்கி பல பத்தா யிரம் பவுண்ட்ஸ்களையும், யூரோக் களையும், டொலர்களையும் கொட்டிக் கொடுத்தார்கள். வீடுகளை அடகு வைத்துக் கொடுத்தவர்கள் எல்லாம் இப்போது வட்டி கட்டிக்கொண்டு அலைகிறார்கள். ஆனால், வசூலித் தவர்கள் வசதியாக வாழ்கிறார்கள்.' இப்படி ஆனந்த விகடனுக்கு பேட்டி கொடுத்திருக்கிறவர் வேறுயாருமில்லை நாச்சியப்பன் - திறிஸ்ரார்ஸ் மாநாட்டு புகழ் சத்தியசீலன். பென்சஸ் இலும், லெக்சஸ் இலும் பவனிவரும் சில 'வெண்புறா' க்களை அல்லது அதன் நிதிப்பொறுப்பாளர் மில்லியனர் கே.பி ரெஜியைஇவ்வாறு குறிப்பிடு கிறார் என நினைக்கிறேன். அவ்வாறு இல்லை என்றால் யார் யார் ஊரார் பணத்தைச் சுருட்டி வசதியாக வாழ்கி றார்கள் என்று சத்தியசீலன் வெளிப் படையாக அம்பலப்படுத்துவாரா?

- கௌரி

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால்...

1) இந்தியா குதூகலிக்கும். 2) 'மைனசிற்கு' மேல் தீர்வென்று ஒன்று முன்வைக்கப்படமாட்டாது. 3) ஜெனீவா மௌனிக்கும். 4) பொது நலவாய மாநாடு சிறப்புற நடக்கும். 5) வடக்கு கிழக்கு இணைப்பதற் கான கேள்வி எழவே வாய்ப்பில்லாது போகும். 6) தமிழ் அரசியல் நீர்த்துப் போகும். 7) வேட்பாளராகுவதற்காய் தமிழ்ச் சனம் அடிபடும்.8) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடும்.9) சிலரின் 'பென்ஸ்' கனவு நனவாகும். 10) சிலரின் முகத்திரை கிழியும்.

- அருமைத்துரை ஜசிகரன்

மைதானத்தில் ஓடினவரை பிடிக்க இன்ரபோல் வருமாம்

கார்டிப் மைதானத்தில் தேசியக் கொடியுடன் ஓடியவரை பிடிக்க கொழும்பு நீதவான் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்று ஒரு தமிழ் வெப்சைற்றில செய்தி போட்டிருக்கினம். இங்க புலிக்கொடி பிடிக்க அனுமதி இருக்கு. அதோட ஒருத்தர் மைதானத்துக்குள்ள ஓடினால் அவருக்கு Pitch invasion அடிக் கோணும். அதவிட்டுவிட்டு Interpolல கூப்பிடினம்! யப்பா முடியேல!!!

- சுஜி

பெண்கள் படும்பாடு

யூன் 7 ஆம் திகதி ஒருபேப்பரில் சுகி அவர்கள் எழுதிய பெண்கள் படும் பாடுஎன்றகட்டுரையில்,தமிழீழத்தில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமை கள் தொடர்பாகக் கூறும்போது, அங்கு நடக்கும் விடயங்கள் தொடர் பாக யார் கவனிக்கின்றார்கள்?, யார் பதிவுசெய்கின்றார்கள்?யார் அறிக்கை விடுகின்றார்கள் என்று கேள்விகளை எழுப்பி, எமது பெண்களுக்கு நடக்கும் கொடுமைகளை வெளிக்கொணர தொடர்ந்து குரல் கொடுக்கவைப்பது எப்படி என கவலையுடன் கருத்து வெளியிட்டிருந்தார்.

- மாதினி சுபராம் (Facebook வாயிலாக)

தண்ணிக் குடும்பம்

சிறிலங்கா அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் நிறைவெறி யில், பறக்கும் விமானத்தில் கதவை திறக்க முயற்சி செய்ததாக செய்தி வந்தது. ஆனால் கிரிக்கெட் வீரரான தனது மகன் பிரித்தானிய விமானத் தில் கதவைத் திறக்க முயற்சித்தமை யானதுஒருசின்னவிடயமாகும்என்று சிறிலங்கா அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சொல்லியிருக்கிறார்.

அப்பன் தண்ணியடிச்சிட்டு மாடியி லலிருந்துவிழுந்தான்...மகன் வானத் தில் இருந்து விழப்பார்த்தான்....

- தர்மன்

பா.ம.க இராமதாசுக்கு இருதயம் உள்ளதா?

பாட்டாளி மக்கள் கட்சியின் எதிர்ப் பினால், திவ்யா - இளவரசன் என்ற சாதி மாறுபட்ட இருவரது காதல், கொலைகளிலும் தற்கொலைகளி லும் முடிவடைந்திருக்கிறது. இப் போது இளவரசனும் மரணமடைந்து விட்டார். அது கொலையா தற் கொலையா என்று தெரியவில்லை.

எனக்கு ஒரு கேள்வி உண்டு. ராம தாஸ்க்கு சிகிச்சையளித்த மருத்துவர் களை சந்தித்து அந்தக் கேள்வியை கேட்க விரும்புகிறேன்.. நிச்சயமாக ராமதாஸ்க்கு இதயம் இருந்ததை நீங்கள் பார்த்தீர்களா... ?

- பாலா

கூட்டமைப்பின் உருப்படியான ஒரு முடிவு

முகிந்த அமைக்கிற பாராளுமன் றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள் ளப்போவதில்லை என்று கூட்டமைப்பு ஏகமனதாக முடிவெடுத்திருக்காம். இப்பிடியான விசயங்கள் அடிக்கடி நடக்கிறதில்லை என்றபடியால் கூட்ட மைப்பு ஆட்களை பாராட்டலாம்.

ஆனால், இப்பிடித்தான் செய்யோ ணும் எண்டு டெல்லி தெற்கு மண்டலம் சொல்லிச்சுதா? அங்கிள் சாம் சொன்னாரா என்பதுதான் தெரியேல்ல.

- அருந்ததி

பயங்கரவாத நாடுகள் பட்டியலில் 19ம் இடம்

இந்த உலகத்திலையே பயங்கர மான நாடுகள் பட்டியலில் பத்தொன் பதாம் இடத்திலை சிறிலங்கா இருக் காம். ஆனால் இந்த லட்சணத்திலை அங்கை ஒரு பிரச்சினையும் இல்லை எண்டு சிலர் சொல்லித்திரிகிறார்கள்.

- டானியல்

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com

யாருக்காகவும் எதற்காகவும் விடுதலைப்போராட்டம் நிற்காது!

விடுதலைப்போராட்டம் முடிந்து விட்டது என்று கேணல் ராம் கூறியதாக இணையங்களில் செய்தி கிடக்கிறது. இதே ராம்தான் மே 18 இற்கு பிறகு காடு களுக்குள் இருந்து பயிற்சி எடுக்கிறோம், விரைவில் போராடுவோம் என்றும் கூறினார். அவர் அற்புதமான ஒரு போராளி. கேபியின் துரோகத்தால் வீழ்த்தப் பட்டு இன்று சிங்கள சித்திரவதை முகாமிலிருந்து சிங்களத்தின் தேவைக்கேற்ப பேச வேண்டிய சூழல்.. அவரை நாம் விடுவோம். அவர் இப்பதானே வெளியே வந்திருக்கிறார். பின்பு இது குறித்து எல்லாம் ஆறுதலாக பார்ப்போம்.

ஆனால் அவர் சொல்லும் கூற்றை மட்டும் இப்போது அலசுவோம். இலக்கை அடையாமல் எந்த மக்கள் போராட்டமும் முடிவுக்கு வராது. மே 18 இற்கு பிறகு தமிழ் மக்களுக்கு நாடு தேவையில்லை. அவர்களை அவர்கள் நிலத்தில் விட்டாலே காணும். எல்லாவற்றையும் நிறுத்தி விடலாம். ஆனால் என்ன நடந்தது? என்ன நடக்குது?

அவர் சொல்ல வருவது ஆயுதப்போராட்டத்தை இனி முன்னெடுக்க முடியாது என்ற ஒரு அர்த்தத்தில்தான். ஆனால் அதில் பாதிதான் உண்மை. அதாவது இனி சிங்களத்தை நாம் முன்பு போன்று ஒரு மரபுவழி இராணுவமாக எதிர் கொள்ள முடியாது என்பதே உண்மை.

ஆயுத போராட்டத்திலுள்ள பாவ புண்ணியங்களை தள்ளிவைத்துவிட்டு புலி களின் பின்னடவை உலக இராணுவ வல்லுனர்கள் அலசியிருக்கிறார்கள். அவர்கள் புலிகள் விட்ட தவறாக குறிப்பிடுவது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அரசியல் தவறையும் அடுத்து மரபுவழி இராணுவமாக உரு வாகியதையும்.. அதாவது தொழில் நுட்ப ரீதியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் வளர்ச்சியடையாமல் ஒரு அங்கீகரிக்கப்படாத இராணுவம் மரபுவழியாக தொடாந்து இயங்க முடியாது என்பது அவர்கள் வாதம்.

அதாவது அரசுக்கு ஒரு அங்கீகாரத்துடன் தொடர்ச்சியான ஒரு ஆயுத தளபாட வழங்கல் - நவீன தொழில் நுட்ப வழங்கல்கள் (பல்குழல் எறிகணைகள், கிபிர் யுத்த விமானங்கள் குறிப்பாக செய்மதி உதவி) இருக்கும். சட்ட விரோதமாக இயங்கும் ஒரு அமைப்புக்கு அது சாத்தியமில்லை. மனித வளத்தை மட்டும் நம்பி போராட முடியாது. ஆனாலும் புலிகள் அதையும் மீறி போராடியதை ஒரு நம்ப முடியாத அதிசயமாகவே பதிவு செய்கிறார்கள். அவர்கள் குறிப்பிடும் முக்கியமான பகுதி இதுதான். புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிந்தவுடன் புலிகள் கெரில்லா போராட்ட முறைகளை வகுத்து அணிகளை பரப்பியிருக்க வேண்டும் என்பது அவர்கள் வாதம். உலகின் தலைசிறந்த கெரில்லா இரணுவம் என்பதுடன் தற்கொலைத்தாக்குதல்களின் அதியுச்ச பயனை சாத்தியப்படுத்திய ஒரு அமைப்பு என்ற அடிப்படையில் அவர்கள் இதை முன்வைக்கிறார்கள்.

இனி நாம் விடயத்திற்கு வருவோம். தற்போது கேணல் ராம் மட்டுமல்ல பலர் சொல்லும் மரபுவழி இராணுவ கட்டமைப்பையே நாம் இழந்திருக்கிறோம். ஏனென்றால் எமக்கு ஆளணியும் இல்லை தொழில்நுட்ப வழங்கலும் இல்லை. ஆனால் உலகின் தலைசிறந்த கெரில்லா போராட்ட அமைப்பு என்பதுடன் பயிற்சி - துணிவு - தந்திரம் மிக்க தற்கெலைப்படையணி என்ற கட்டமைப்பை நாம் இன்னும் இழக்கவில்லை. அது செயற்பாட்டில் இல்லையே ஒழிய உறங்கு நிலையில் அப்படியே இருக்கிறது. அல்லது அதை எம்மால் வளர்க்க முடியும். கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து புலிகள் சாத்தியமான பலவற்றை அலசிக் கொண்டிருக்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதிடப்படவேண்டிய இக்கட்டுக்குள் தள்ளியதும் படைவலுச்சமநிலையை புலிகள் பக்கம் திருப்பியதுமான ஒரு தாக்குதல் தான் கட்டுநாயக்கா விமான நிலைய தாக்குதல். வெறும் 14 போராளிகள் அதை சாதித்து காட்டினார்கள்..

உண்மையில் ஆயுத போராட்டத்திற்கான தேவை தற்போது இல்லை. தேவைப் பட்டால் சில நூறு போராளிகளுடன் 48 - 72 மணிநேர இடைவெளிகளில் சிறீலங் காவின் இராணுவ பொருண்மிய கேந்திர நிலைகளை தாக்கி அழித்து முடக்க செய்யலாம். அதற்கு தேவைபல்லாயிரக்கணக்கான போராளிகள் அல்ல. கட்டு நாயக்காவிற்குள் அநுராதபுரத்திற்குள் புகுந்த போராளிகளை போன்ற 100 போராளிகள்தான். எவ்வளவு பொருத்தம் இதை எழுதும் இந்த தருணத்தில் வரலாற்றை படைத்து சாதித்து காட்டிய கரும்புலிகள் நினைவு நாளில் நாம் இருக்கிறோம்.

சாதித்த வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம். திருப்பி சாதிப்பது எமக்கு ஒன்றும் கடினம் அல்ல.எனவே யாருக்காகவும் எதற்காகவும் விடுதலைப் போராட்டம் நிற்காது. அதுதொடர்ந்துகொண்டுதான் இருக்கும். அறவழியிலோ தேவைப்பட்டால் ஆயுத வழியிலோ..

கிருஸ்ணா

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400
➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain
➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test
▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre
National Centres
BIRMINGHAM 7 Washington Street Birmingham B1 1JR 01216339919
SHEFFIELD Sorby House 42 Spital Hill, Sheffield S4 7LG 01143034303
LEICESTER Imperial House St Nicholas Circle, Leicester LE1 4LF 01163260248
LUTON 169 A, Dunstable Road Luton. Beds – LU1 1BW 01582723123
SLOUGH 18-24 Stoke Road Slough, Berkshire SL2 5AG 01753722056
NEWCASTLE 51-52 Victoria Avenue Whitley Bay,Tyne & Wear Newcastle Upon Tyne – NE26 2BA 01912525265
FREE INITIAL ASSESMENT
London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JULY 05, 2013, ISSUE 197

விட்டுக் கொடுப்புகள் எதுவரை?

ஈழத்தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக மிகவும் பலவீனமான நிலைக்கு சென்றி ருக்கிறார்கள் என்பதனை ஏற்றுக்கொள்பவர்கள், இது எதிர்பார்க்காத ஒரு நிலமை என்று கூறிவிடமுடியாது. ஏனெனில், தமிழ்மக்களுக்கு அரசியல் பலத்தைப் பெற்றுக் கொடுத்த விடுதலைப்புலிகள் களத்தில் இன்று இல்லை. அவர்கள் முன்னெடுத்த ஆயுதப்போராட்டம் மட்டுமே தமிழ் மக்களுக்கு பாதுகாப்பினையும் அரசியல் பலத் தினையும் பெற்றுக்கொடுத்தது.

இலங்கைத் தீவில் துரித கதியில் நடைபெறும் கட்டமைப்பு ரீதியான இன வழிப்பு நடவடிக்கைகள், தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்ற நிலையிலி ருந்து சிறுபான்மை இனம் என்ற நிலைக்கு குறுக்கிவிடும் அபாயத்தைக் கொண்டிருக் கின்றன. அதனை கட்டுப்படுத்த அல்லது பதில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலேயே தமிழ் அரசியல் தரப்புகள் உள்ளன. இதில் அவர்களது இயலாமை யையிட்டு குற்றம்சொல்வதில் எதுவித நியாயமும் இருக்க முடியாது. ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் எதுவும் நடைபெறாததுபோன்று, சிங்கள தேசியக் கட்சிக ளுடன் இணைந்து ஜனநாயகத்தையும், இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தப் போகிறோம் எனப் பேசிவருவது வேடிக்கையாக உள்ளது.

இன்னொருபுறத்தில், இந்தியாவின் உதவியுடன் தமிழ்மக்களின் அரசியல் உரிமை களைபெற்றுக்கொள்ளலாம் என்றநம்பிக்கை சிலதமிழ் அரசியல்தரப்புகளிடமிருந்து தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களில் ஒருபகுதியினர் தமிழ் மக்கள் மீதான கரிசனையில் இந்தியா உதவும் என்றும், மற்றயவர்கள் பிராந்திய மூலோபாய நலன் கருதி தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் என நம்புகிறார்கள். இந்தியா இவர்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்து வருகிறது.

ஆனால்,'சிறப்புத் தூதுவரை நியமிக்கிறார்கள்','பாதுகாப்பு ஆலோசகரை கொழும் புக்கு பேச்சு வார்த்தைக்கு அனுப்புகிறார்கள்' என்ற பரபரப்புச் செய்திகளுக்கு மாத்திரம் குறைவிருப்பதாகத் தெரியவில்லை.

இன்னொரு தரப்பினர், பிராந்தியத்தில் முக்கியமான ஒரு நாடு என்ற வகையில் அதனுடன் இராசதந்திர உறவு வைத்திருக்க வேண்டும் எனக் கருத்து வெளியிடு கிறார்கள்.

மக்கள் பலத்தை ஒருங்கிணைக்க முடியாத இச்சிறு குழுக்கள் வல்லரசுகளுடன் இராசதந்திர உறவுகளை வளர்ப்பார்களா அல்லது அவற்றுக்கு ஏவலாளிகளாக மாறுவார்களா என்பதனை நாம் அனுமானித்துக் கொள்ள முடியும்.

ஒரு பேப்பர்

வணக்கம் !

ம்ம் ஒம்பது, பத்து. பத்து முடியேல்லை.. ஒம்பது முடிஞ்சு பத்து நடக்குது....

*நம்பவும் முடியாமல் இருக்குது. ஆனால் எண்ணினால் சரியாத்தான் இருக்கு. கணக்கிலை விண்ணன்களான இரவியண்ணை மாதிரி ஆட்களை கேட்டாலும் சரியெண்டுதான் சொல்லியினம். **ஒரு பேப்பர்** தொடங்கி ஒம்பது வருசம் முடிஞ்சிட்டுது. இதுக்காக ஒரு கேக் வெட்டி கொண்டாடுவம் எண்டால் " ஒரு கத்திரிக்காயும் வேண்டாம். மனுசர் படுகிற பாட்டிலை கேக்கும் மண்ணாங்கட்டியும். பேசாம அலுவலை பாருங்கோ" எண்டு சொல்லிறார் பார்த்திபன்...*

*நாங்கள் படிக்க விரும்பிற ஒரு பேப்பர் எப்படியிருக்க வேணும் அதையே **ஒரு பேப்பர்** ராக வெளியிடத் தொடங்கினம். ஊடகம் நடாத்தி அனுபவம் இல்லை. ஏன் எங்களிலை கன ஆட்கள் முந்திப்பிந்தி எழுதியும் இல்லை. பேப்பர் படித்த அனுபவத்திலையும், பார்த்து வெறுத்துப் போன விசயங்களை விட்டு விட்டு நாங்கள் விரும்பினதை போட்டு அடித்த பேப்பர் இன்றைக்கு 197 பேப்பரை தொட்டு பத்தாவது வருசத்துக்குள்ளை காலடி எடுத்து வைக்கிறது. அப்போதிருந்த பதட்டம் இப்பவும் இருக்குது, எதுவும் மாறவில்லை. ஆனாலும் பேப்பரிலை மாற்றமிருக்கிறதாக சிலர் சொல்கிறார்கள்.*

***ஒரு பேப்பர்** பற்றி வந்த வசவுகள் அதிகம். இப்பவும் வருகிறது. முதலாவது பேப்பர் வெளிவந்த அடுத்த நாள் ஒரு கட்டு பேப்பருடன் ஒரு தமிழ்ப்பாடசாலை நிகழ்ச்சிக்கு போயிருந்தம். பேப்பரை பாத்திட்டு ஒரு பெரியவர் சொன்னார் "மஞ்சள் பேப்பர் போல இருக்கு". அவருக்கு காமாளை நோய் இருந்ததோ தெரியேல்லை அதுதான் எங்களுக்கு கிடைச்ச முதல் விமர்சனம். தனக்கு பட்டதை நெத்திக்கு நேரை சொன்ன அவரை பாராட்டுறம். அவரைப்போலவே எங்களுக்கு பட்டதை **ஒரு பேப்பர்** ல சொல்லிறம் அது சரியாகத்தான் இருக்க வேண்டும் எண்டோ அதுக்கு வேறான கருத்துகளை நீங்கள் வைச்சிருக்கக் கூடாது எண்டோ நாங்கள் எண்டைக்கும் நினைச்சதில்லை. உங்கடை கருத்துகளை தெரிவிக்கும் ஒரு களம்தான் **ஒரு பேப்பர்** .*

***ஒரு பேப்பர்** ல் பிரசுரிக்கப்படும் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எங்களோடை கோபப்பட்டிருக்கிறார்கள். போனடிச்சு திட்டியிருக்கிறார்கள், வழிதெருவிலை கண்டு சொல்லியிருக்கிறார்கள். சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டியிருக்கிறார்கள். ஆனால் அடிதடியில் இறங்கப்போவதாக ஆரும் சண்டித்தனம் காட்டவில்லை என்ற குறையை இந்த வருசம் ஒருவர் நிறைவேற்றி இருக்கிறார். ஒரு சமூகத்திலை எல்லாவிதமான ஆக்களும் இருப்பார்கள் எண்டதாலை இதுகளைப் பற்றி நாங்கள் அலட்டிக் கொள்ளவில்லை.*

*இத்தனை காலம் **ஒரு பேப்பர்** வருகிறதெண்டால் அதுக்கு பக்கபலமாய் ஆரோ இருக்கினம் எண்டு நீங்கள் நினைக்கலாம். அது மெய்தான். அவர்கள் ஆர் எண்டு 5ம் பக்கத்திலை போட்டிருக்கிறம். அவையள் மட்டுமில்லை பாலாண்ணை, உமா மகாலிங்கம், மட்டைக்கிளப்பான், மாசிலாமணி, இதயச்சந்திரன், வேல் தர்மா, ஜெயபாலன், மீரா அக்கா எண்டு பட்டியல் நீளும். இவையள் எல்லாருக்கும் மேலாக வாசகர்களாகிய நீங்கள்.*

எங்களுடைய விளம்பரதாரர்களுக்கும் குறிப்பாக நிரு நிறுவனத்திற்கும் நன்றி.

[மயூரன் வழமைபோலை புறூப் றீடிங் பாக்க வேண்டாம் :)]

அடுத்த பேப்பரிலை சந்திப்பம்...

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

Defining response

'Tamil Guardian' editorial

The attack on Tamil 'Boycott Sri Lankan Cricket' campaigners by Sri Lankan cricket fans at the Oval on June 17th was truly shocking. What began as Sri Lankan fans shouting and spitting at activists, swelled into anti-Tamil taunting followed by physical assaults, where Tamil activists were punched and kicked by a mob. This attack was not alcohol fuelled sporting hooliganism; nor was it pro-government Sri Lankans attacking anti-government activists - as the attackers' taunting made clear, the activists were targeted solely because of their Eelam Tamil identity, not for their campaigning. The attack was racially motivated violence by ordinary Sri Lankans against Eelam Tamils on the streets of London.

The presence of British police was undoubtedly central to curtailing the mob's attack. Nonetheless, it is deeply concerning that racist hostility was allowed to escalate into physical attacks. Video footage bears testament to the inadequacy of the police response, which left a greatly outnumbered handful of Tamils to protect themselves. Sadly, this failure to protect reinforces the prevailing Tamil assertion that the Eelam Tamil nation will never be safe, till it can protect itself. Although the resultant Tamil outrage was understandable, reports of reprisal attacks and 'revenge' calls by Tamil mobsters are abhorrent. Mindless, racist, reactionary vigilantism has no place in the Tamil resistance against Sri Lankan oppression. By contrast, the defiant but dignified response of the assaulted Tamil activists, who continued their campaign whilst insisting on calm and condemning 'revenge' violence, together with other notable Tamil community voices, was admirable. It is crucial however that the British Tamil community's denunciation of 'revenge' is not undermined by the police's failure to bring those responsible to justice.

> That parts of the international press and NGOs effectively endorse this disturbing logic, by advocating to peaceful Tamil protesters to avoid holding Tamil Eelam flags, is deplorable.

Every nation has chauvinists. To define a nation on its bad apples would be unjust, yet how a nation responds to its chauvinists, is defining. Quite apart from the entirely predictable attempts by the Sri Lankan ministers and Sinhala press, to justify and even legitimise the attack, by criminalising the Tamils as 'terrorists', the response by the wider Sinhala public is alarming. As the attack unfolded hoards of Sri Lankan cricket fans cheered, chanting "we won the war". Meanwhile, the video of the attack has prompted a barrage of anti-Tamil hate speech as well as congratulatory messages across social media networks. Crucially, the failure of Sri Lankan cricket players to condemn the racist actions of their fans is indefensible. Though the captain was compelled in an interview to concede the violence was "unfortunate", the team's spokesperson reportedly asserted that Tamils had got the medicine they deserved - an endorsement that is tantamount to the incitement of further violence. It is wryly apt that nothing so tangibly demonstrates why Tamil activists call on the UK to boycott Sri Lankan cricket, than the Sri Lankan response to this incident.

Contrary to the rhetoric spouted by ministers and numerous cricket players acting as country ambassadors, the incident exposes the fallacy of an inclusive 'Sri Lankan' identity. In Sri Lanka, anyone of any ethnicity can be embraced as 'Sri Lankan' if they accept (and dare not challenge) the supremacy of Sinhala Buddhism across the entirety of the island. Thus, any talented Tamil who abide by this, will be lauded as a national figure; but any Tamil who dares challenge it, however peacefully, becomes a legitimate target of the state. Sinhala mobs attacking Tamils who call for independence – a desire shared by other nations across the world, including Scotland – thereby becomes not only understandable, or justifiable, but commendable. That parts of the international press and NGOs effectively endorse this disturbing logic, by advocating to peaceful Tamil protesters to avoid holding Tamil Eelam flags, is deplorable.

> Sadly, this failure to protect reinforces the prevailing Tamil assertion that the Eelam Tamil nation will never be safe, till it can protect itself.

The Oval incident was shocking, but not surprising. The attack was merely an extension of the ethnic conflict on the island: a Tamil attempt to peacefully resist the oppression and genocide of the nation in the North-East, is met with violence by state forces or Sinhala mobs. Just as the prevailing Sinhala response is once again indifference or even triumphalism, the Tamil response is defiance and a renewed resolve to resist. Indeed, Tamil youths who arrived at the Oval as 'Sri Lankan Tamils' wanting to support their cricket team, left as Eelam Tamils wanting to support the boycott activists. Ultimately, the incident underscores the very basis of the Tamil call for independence, that amidst Sinhala-Buddhist hegemony, the Tamil nation's security cannot be guaranteed. Thus the enduring dynamic central to the ethnic conflict, of oppression and Tamil resistance against it, lives on.

Killing the Tamils Idea of Homeland… No Way!

By: Nadarajah Balasubramaniam (PFLT)

The Economist, the authoritative weekly news magazine focussing on international politics and business, in its issue of December 5th-11th 1998, carried on page 86 an article titled "Sri Lanka : Civil war without end". It had a sub heading too, "Tamil Tiger rebels and government troops, fight on. And on."

On page 89 of this highly reputed magazine, the writer says, "Mr. Praphakaran is only 44 and seemingly as vigorous as when he threw a bomb at the age of 18. Killing him now would not be likely to end the fighting: you can't kill the Tamil's idea of homeland.

The UPA government of India stupidly decided to get rid of the most loved, brilliant and popular rebel force, the LTTE and its supporters in Vanni, at any cost. The subsequent developments show that India and the UK and the USA were prepared not only to ignore or support genocide in war but also prepared for the ensuing structural genocide.

> Our plea for peace and negotiated settlement has been systematically rejected by the belligerent and intransigent attitude of the Delhi government.

By 2007 a full-scale, the so called counter-insurgency was developing, initially in the eastern region and finally in the LTTE's heartland, in the North East of the island. In May 2007 Sri Lanka military forces finally defeated the LTTE's fighting force. Naturally the shift in government policy and the military success of the counter insurgency took most analysts by surprise. A few only expected such a rapid shift in strategy, and most expected that the LTTE would be able to resist renewed military action.

But this didn't happen. International concern on human rights violations, threat to the media, the state of lawlessness including killings and abductions, and other issues have been mere formalities and have been never been translated into action. The general attitude seems to be to hope for an early end to the conflict by the elimination of the LTTE as a fighting force, so that the imperialist countries can get on with furthering their interests in this island of strategic interest. Irrespective of how the war ends and the conflict continues in other forms, the 'international community' has little to offer to the victims. But it is high-time these forces realized that an independent nation for Tamils is the urgent need of the day and also the only and true justice for the victims.

People's China not an enemy of Tamils

But the truth is that the above arguments were specially created by Indian apologists, for the consumption of Tamils and other Asian citizens. Let us see some of the whistleblower, Wiki leaks revealing, to get an idea of the Indian nasty games.

Quote 207268, 5/15/2009 13:42, 09NEWDELHI996, Embassy New Delhi, CONFIDENTIAL,

"Turning to next steps after the conflict had ended; Menon said the Sri Lankan government had reassured India that the government would focus on implementation of the 13th Amendment Plus as soon as possible. Menon was sceptical. Noting that he would present the proposal to the next Foreign Minister after formation of the new Indian government, he suggested it would be useful for India to convoke an international conference -- noting that India, the Co-Chairs and China should attend -- to look at the post-conflict landscape."

Ref: http://www.thehindu.com/news/the-india-cables/the-cables/article1546009.ece

Menon expressly included China in the grouping, arguing that best results from Sri Lanka could be expected when the West, India and China all worked together. Otherwise, Sri Lanka would find ways to play its international interlocutors off against each other. Tamils should remember that the above message was sent on 15th May, 2009, just 3 days before the end of the war, the genocide of Vanni Tamils, a team work of Sri Lanka, India aided by the UK and the USA.

The stupid RAW and the war criminals Shiv Shanker Menon and M.K.Narayanan were dancing with Gothbaya brothers on the morning of 19th May 2009, stupidly thinking that they had completed the job of finishing the Tigers and closed the chapter with an military canvas hospital, 25 000 aluminium sheets, and some food for the displaced people who survived the genocide.

LTTE, in 1989, a useful review

While going through my collection of books and magazines I accidently came across the article, "LTTE Appeals for UN Mediation" in the magazine, "Tamil International" of 15th February 1989. I am happily reproducing it mainly for the benefit for the "Thamil Young Generation". I am really excited to visualize the outcome!

Quote: "In an appeal made in the headquarters of Eelam, the LTTE has requested the UN Commission on Human Rights, presently in session, to persuade the Government of India to withdraw its troops and the UN to help in finding a negotiated political settlement for the ethnic conflict.

It has submitted that a grave and a dangerous situation has developed in the North- Eastern region of Sri Lanka as a consequence of continuous occupation, repression and terrorisation by the Indian armed forces and under the cover of 'peace keeping' operations the forces continue to engage themselves in a ruthless and brutal war against innocent civilian masses causing intolerable suffering to the Tamil people.

In total violation of all norms and principles of human rights the Indian army of occupation has been carrying out a vicious campaign of persecution and terror in the form of mass arrests, imprisonment, torture, rape and extrajudicial executions. In recent months alone, hundreds of innocent people have been senselessly murdered and thousands have been rounded up and held in custody in various army camps. Some of these army camps have been turned into torture chambers and innocent people are being subjected to the worst forms of inhuman cruelties.

The Indian military atrocities in the Tamil homeland are further aggravated by the terrorism of the Indian backed Tamil armed groups (EPRLF, ENDLF and TELO) who have in recent months unleashed a campaign of violence, murder, and terror in Tamil areas with the active connivance of the Indian military authorities. These military groups have exterminated more than two-hundred prominent Tamil citizens; Tamil political leaders, citizen committee members, priests, social workers, university lecturers and trade union leaders have been killed in cold blood for having been critical of the Indo-Sri Lanka agreement and being sympathetic to the policies of our movement.

The government of India, in collusion with the Sri Lankan regime, has clamped down on all sources of information in a deliberate attempt to hide from the international community various crimes and atrocities committed by the Indian army and its quisling armed groups. Both the governments have imposed rigorous censorship on the local media and have refused permission to fact finding missions from international human rights organisations. Having effectively suppressing the freedom of press and other democratic institutions in Sri Lanka, both governments have been utilising the state owned media and diplomatic services to carry out a massive disinformation campaign to distort the reality of the actual situation and to mislead the world community.

Our plea for peace and negotiated settlement has been systematically rejected by the belligerent and intransigent attitude of the Delhi government. The Tamil people are now convinced that the Indian administration aggressive hegemonic designs in the region with the purpose of consolidating its strategic and geopolitical ambitions rather than to secure the interests of the Tamils."

"Black Tigers Day"

July 5th is commemorated annually as "Black Tigers Day". On that day, Vasanthan, a son of a banker, drove a small truck laden with explosives into a Sri Lanka Army camp in Nelliady Madhya Maha Vidyalayam, Karaveddy in Jaffna peninsula, killing himself and 40 Sri Lankan soldiers. Vasanthan volunteered to sacrifice his life in order for LTTE to win.

Now it is appropriate to see what one of the distinguished journalists in Colombo, Tisaranee Gunasekara says about the Black Tigers, when she wrote about the devastating commando- style assault on the SLAF base at Anuradhapura in late October 2007. She wrote, "Unlike the Islamic suicide bombers they engage in their bloody quest, not in expectation of any heavenly rewards in after-life, but for a self-made God who, in reality, is an unprepossessing looking rewards in after-life, but for a self-made God who, in reality, is an unprepossessing looking man. Their fanaticism therefore is of a different order than the fanaticism of a religious fighter. The Japanese Kamikaze pilots were motivated by veneration for their Emperor, who was seen as God incarnate, a linear descendent of the Sun Goddess. The Black Tiger phenomenon is thus incomparable. While the Black Tigers are fanatics to the point of animalistic, they are also committed, courageous and efficient, beyond the bounds of humanity. This totality needs to be comprehended rather than parts of it." The truth is that unlike the bogus propaganda of the Sri Lanka government, the so called Black Tigers, the darlings of Tamils never attacked civilians but military formations, like gun boats, army units in compact and of course rarely Tamils who are incorrigible traitors.

A U.S. author says Western states influenced by Israel have lost all sense of morality and are behaving in a criminal way that is dangerous to world peace. The Tamils have the sacred duty to tell the world specifying that the world has lost all sense of morality being influenced by Sonia Congress of India and that is dangerous to world peace.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

தேசத்துரோகத்தின் முதல் அங்கம் இந்திய இலங்கை ஒப்பந்தம் !!!

மௌலி
(ஒரு பேப்பருக்காக)

தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி முன்னர் கூப்பாடு போட்டவர்களில் சிலர் இப்போது 13 ஆம் திருத்த சட்டத்தை அமுல் படுத்துமாறு இந்தியாவுக்கு காவடி எடுக்கிறார் கள். பதின் மூன்றாம் சட்டத்தை ஆரம்பப்புள்ளி யாக எடுப்பதாக அவர்கள் சர்வதேச அரங்கிலும் வந்துசொல்கிறார்கள். இந்தச்சிலருக்குள் தமிழீழ சுதந்திர சாசனத்தை முரசறைகிற சிலரும் அடக்கம். உலகத் தமிழர் பேரவையும் அதில் அங்கம் வகிக் கிற கனேடிய தமிழ் கொங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் கொங்கிரஸ் போன்ற அமைப்பைச் சேர்ந்த வர்களும் இப்போது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்று சொல்லவே தயங்குகிறார்கள். இது வொன்றும் கற்பனையான தகவல்கள் அல்ல, அண்மையில் ஜேர்மனியில் Berghof Foundation அனுசரணையில் நடைபெற்ற தமிழ் அமைப்பு களின் சந்திப்பில் பேசப்பட்டவையே இவை. தமிழ் அமைப்புகள் இணைந்து ஒரு பொதுப்பிர கடனத்தை ஏற்படுத்த நடந்த பேச்சுவார்த்தையில் பரிமாறப்பட்ட கருத்துகளைப் பார்த்தால் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே இருக்கிறது.

யானையைப் பார்த்த குருடர் போல் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது 13 ஆம் திருத்த சட்டம் தான் என்ற அறியாமை பரவலாக இருக்கின் றது. இந்த பின்னணியில் இக்கட்டுரை இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றிதாக அமைகின்றது. தமிழீழ அரசியலுடன் தொடர்புடைய ஊடகவிய லாளர்கள் உட்பட அரசியல் ஆர்வலர்கள் பலரிடம் தொடர்பு கொண்டு இந்திய இலங்கை ஒப்பந் தத்தை படித்திருக்கின்றீர்களா? அதன் பிரதியை எங்கே பார்க்கலாம் எனக் கேட்டேன். எனக்கு கிடைத்த பதில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பார்க்கவில்லை. அதன் பிரதிஎங்கே இருக்கின்றது என்பது தெரியாது என்பது தான். இது சாதாரண மக்கள் மத்தியில் இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிய அடிப்படை புரிதல் எவ்வாறு இருக்கும் என் பதை ஊகிக்க போதுமானதாக இருந்தது.

இதுதான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிப்போரின் நிலையும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை படிக்காமல் அதனை ஆதரிக்கின் றோம் அதில் விஷயம் இருக்கின்றது என்போரை எடுப்பார் கைப்பிள்ளைகள் அல்லது எஜமான் சொல்வதற்கு ஆமாம் போடும் கைக்கூலிகள் என் றல்லாமல் வேறெப்படி அழைக்க முடியும்? உண்மையை சொல்லி விடுகின்றேன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் முழுமையான பிரதியை நானும் இன்றுவரை பார்க்கவில்லை. ஆனால் அதிர்ஷ்ட வசமாக ராஜிவ் காந்தியும் ஜெயவர்த்த னாவும் ஒப்பமிட்ட ஆவண பிரதியை ஐக்கிய நாடுகள் சபையின் http://peacemaker.un.org/srilanka-indolankaaccord87 என்ற இணைப்பில் இருந்து பெற முடிந்தது. அதனை ஆதாரமாக வைத்தே இந்த கட்டுரை வரையப்படுகின்றது.

இந்த ஐந்து பக்க ஆவணத்தைப் (கூடவே இணைப்பாக இன்னொரு பக்கம்) படித்து அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை அறிய அதிக நேரம் எடுக்காது. அதனை அரசியல் ஆர்வலர்களும் ஊடகவியலாளர்களும் முதலில் செய்ய வேண்டும் எனக் கோருகின்றேன். இது இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழீழத்திற்கு செய்த துரோகத்தை புரிந்து கொள்ள மிக முக்கியமான ஆவணமா கும். அந்த ஆவணத்தின் முதலாவது பகுதியின் உபபிரிவு ஒன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது .

I.I Desiring to preserve the unity, sovereignty and territorial integrity of Sri Lanka: சிறீலங்காவின் ஒன்றுபட்ட இறையாண்மையைபேணுவது

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் 1983 முதல் ஆயிரமாயிரம் போராளிகளை தமிழீழ இலட்சியத்துக்காக பயிற்சி பெற உதவிகளை வழங்கிய இந்தியா, அந்த இலட்சியத்துக்காக பல ஆயிரம் பேர் பலியாக காரணமாக இருந்த இந்தியா, நான்கு ஆண்டுகளுக்குள் (1987 இல்) குத்துக் கரணம் அடித்து சிறீலங்காவின் ஒன்றுபட்ட இறை யாண்மையை பாதுகாத்துக் கொள்ள உடன் படிக்கை செய்ததன் மூலம் தனது முதுகில் குத்தும் துரோகத்தை இந்திய இலங்கை ஒப்பந் தம் மூலம் இந்தியா ஆரம்பிக்கின்றது .

போராளிகளுக்கு பயிற்சிகொடுக்கும் பொழுதே இந்த துரோக திட்டம் இந்தியாவிடம் இருந்ததா? தமிழீழம் உருவாக இந்தியா உண்மையில் விரும் பித்தான் பயிற்சியை வழங்கியதா? இந்திய முகாம் களில் பயிற்சி வழங்கும் பொழுதே இந்த துரோகத் திட்டத்துக்காக பயிற்சி முகாமில் அனைத்து போராளிகளினதும் தனித்தனியான படங்கள் அவர் களின் உண்மையான பெயர் முகவரிகளை இந்தியா சேகரித்தது இந்த துரோகத்தை நிறைவேற்றத் தானா? சிந்திக்க வேண்டிய விடயம் இது.

நிற்க, ஜெயவர்த்தனாவும் ராஜீவ் காந்தியும் கைச்சாத்திட்ட ஒப்பந்தந்தின் உபபிரிவு 2.16 2.16 b) The Indian navy/coast guard will cooperate with the Sri Lankan navy in preventing Tamil militant activities from affecting Sri Lanka. இந்தியக் கடலோர காவல் படையும், கடற்படையும் சிறீலங்காவுக்கு எதிராக செயல்படும் தமிழ் போராளிகளின் செயல்பாடு களை நிர்மூலமாக்க சிறீலங்காவுடன் ஒத்துழைக் கும் எனத் தெரிவிக்கின்றது .

ஒருபுறம் தமிழீழ இலட்சியத்துக்காக பயிற்சி களை வழங்கிய இந்தியா மறு புறம் அவர்களை அழிக்க ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த துரோகத்தால் ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர் களும் பொதுமக்களும் கொல்லப்பட்டார்கள். இதுதான் இந்தியா செய்த அதி உச்ச துரோகத் தின் ஆரம்பமாகும். இதனை புரிந்து கொள்ளாத சதிகாரர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என ஏமாற்ற முனைகின்றார்கள் .

இந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் என்ற இந் தியத் துரோகம் குமரப்பா, புலேந்திரன் கைது, கடலில் வைத்து கிட்டு கொலை ஊடாக இறுதியில் முள்ளி வாய்க்காலில் இந்திய உதவி, சர்வதேச விசாரணைக்கு முட்டுக்கட்டை என நீண்டு சென்று கொண்டிருக்கின்றது. இந்த துரோகத்துக்கு பிராயச் சித்தம் செய்யாதவரை இந்தியாவை தமிழ் மக்கள் நம்ப முடியாது .

இதற்கு இந்திய ஏஜண்டுகள் பலர் உதவினார் கள். சிலர் உறங்கு நிலை உளவாளிகளாக செயல் பட்டிருக்கின்றார்களா எனச் சந்தேகிக்க கூடிய வாறு அணமைக்கால சம்பவங்கள் சுட்டி நிற்கின் றன. தான் விட்ட தவறை உணர்ந்துசர்வதேச மூகத் துடன் இணைந்து சர்வதேச சுயாதீன விசார ணைக்கு இந்தியா உதவட்டும். தமிழீழத்தில் நடப்பது இனப்படுகொலையா இல்லையா என்பதை சர்வதேச விசாரணை மூலம் தீர்மானிக்க ஐக்கிய நாடுகள் சபையில் ஆதரவாக செயற்பட இந்தியா முன் வரத் தவறினால் இந்திய முன்னெடுப்புக்கள் அத்தனையும் சிறீலங்காவுக்கு முண்டு கொடுக் கும் சதி நடவடிக்கைகளே.

மேலே விபரிக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப் பந்த 1.1, மற்றும் 2.16 டி) பிரிவுகளின் துரோகத்தை மறைக்க வீசப்பட்ட நச்சு புகைக் குண்டு தான் (poisonous smoke bomb) தான் 13 ஆம் திருத்தச் சட்டம் என்ற மாயமான் அது தமிழர்களுக்கு எந்த உரிமையும் வழங்கவில்லை. நிறைவேற்று அதி காரம் கொண்ட சிறீலங்கா ஜனாதிபதியின் விருப் பங்களை பூர்த்தி செய்யவும் இந்திய நலனுக்காக வும் மட்டும் உருவாக்கப்பட்ட பொறிமுறை அன்றி வேறில்லை. எனவே தமிழீழ மக்களுக்கு துரோகம் இழைத்த இந்திய இலங்கை ஒப்பந்த மும் அதன் உப பிரிவுகளும் 13 ஆம் திருத்த சட்டமும், ஆயுதக் குழுக்களும், அரசியல் எடுபிடி களும் அடியோடு நிராகரிக் கப்படவேண்டியவை என்பதற்கு இதற்கு மேல் ஆதாரம் தேவையா?

ஒப்பந்தத்தில் உள்ள மற்றொரு முக்கிய விடயம் பற்றி அடுத்த பதிவில் பார்ப்போம்.

வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

வெற்றியில் ஏமாந்து விடாதீர்கள்!

தோல்வியில் துவண்டு விடாதீர்கள், தன்னம் பிக்கை இழந்து விடாதீர்கள், முயற்சியை நிறுத்தி விடாதீர்கள் என்று எல்லாம் பலர் அறிவுரை சொல் லக் கேட்டிருக்கிறோம். ஆனால் வெற்றி பெற்றவர் களுக்கு யாரும் அதிகம் அறிவுரை சொல் வதில்லை. காரணம் வெற்றி பெற்றவர்கள் அறிவுமி க்கவர்கள், நல்ல உழைப்பாளிகள், எல்லாம் தெரிந் தவர்கள் என்ற அபிப்பிராயம் பலர் மனதிலும் இருப் பது தான். அதெல்லாம் மற்றவர்கள் மனதில் இருந் தால் பரவாயில்லை. வெற்றி பெற்றவர்கள் மனதி லேயே அந்த அபிப்பிராயம் உறுதியாகத் தோன் றும் போது அது எதிர்கால ஆபத்திற்கு அஸ்தி வாரம் போடுகிறது. வெற்றி எப்பேர்ப்பட்டவரை யும் ஏமாற்ற வல்லது. அது மூன்று குணாதிசயங் களை வெற்றியாளர்களிடம் ஏற்படுத்த வல்லது.

1) கர்வம்
2) அலட்சியம்
3) எந்த அறிவுரையும் கேளாமை

முதலாவதாக, வெற்றி ஒருவரிடம் "என்னை மிஞ்ச ஆளில்லை" என்ற கர்வத்தை ஏற்படுத்தலாம். கர் வத்தைப் போல வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் ஒரு குணாதிசயம் வேறொன்று இருக்க முடியாது. புராணங்களில் அரக்கர்கள் கடவுளிடம் வரம் பெற்று பெரும் சக்தி பெறுவார்கள். பெரும் சக்தி பெற்ற அவர்களது கர்வம் அவர்களை சும்மா இருக்க விடாது. பலரைத் துன்புறுத்த முனைவார்கள், எங் களை எதிர்க்க யாரிருக்கிறார்கள் என்று அறை கூவல் விடுப்பார்கள். முடிவு அவர்கள் அழிவு தான் என்பதை நாம் புராணங்களில் படித்து இருக்கி றோம். கர்வம் ஒரு மனிதனை உள்ளதை உள்ளது போல் பார்க்க விடாது. அறிவுக் கண்ணை அது அழகாக மறைக்க வல்லது. நன்மைகளை செய்ய கர்வம் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. தான் செய்வதே சரி என்கிற எண்ணம் ஒருவரை எதையும் சீர்தூக்கிப்பார்க்க வைப்பதில்லை. அதன் விளைவு அவர்களை பெரும் வீழ்ச்சி காண வைக்கிறது.

உலக வரைபடத்தில் உகாண்டா என்ற ஆப் பிரிக்க நாட்டை சிரமத்திற்கு இடையே தான் கண்டு பிடிக்க முடியும். அத்தனை சிறிய நாட்டில் சர்வாதி காரியாக இருந்த இடி அமீன் சென்ற நூற்றாண்டில் தன்னை கிட்டத்தட்ட கடவுளாகவே நினைத்துக் கொண்டு நடந்து கொண்ட விதத்தை வரலாற்றின் பார்வையாளர்கள் மறந்திருக்க முடியாது.

இன்றைய கால கட்டத்திலும் அரசியலைக் கூர்ந்து பார்ப்பவர்களுக்கு இதற்கு எத்தனையோ சான்றுகளைக் காண முடியும். சில இமாலய வெற்றி பெற்றவர்கள் தங்களை நிரந்தர தலைவர் களாக தாங்களாக நினைத்துக்கொண்டு செயல்பட்டு அடுத்த தேர்தலில் காணாமல் போவது சர்வ சாதார ணமாக நிகழ்கிறது அல்லவா?

இரண்டாவதாக, வெற்றி அலட்சியத்தையும் உண்டு பண்ணக் கூடியது. அதுவும் தொடர்ந்து சில வெற்றி கள் கிடைத்து விட்டால் தங்களை ஒரு அபூர்வ மனி தராக ஒருவர் நினைத்துக் கொள்ள வாய்ப்பு அதி கம். இனி எனக்கு தோல்வியே கிடைக்க முடியாது என்று ஒருவன் நினைக்க ஆரம்பிக்கும் போது அவனுடைய முயற்சிகள் தரத்திலும் அளவிலும் குறைய ஆரம்பிக்கின்றன.

இதை விடப்பெரிய விஷயங்களில் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறேன், இது என் திறமைக்கு முன் எம் மாத்திரம் என்ற எண்ணத்தோடு இறங்கி சிறிய விஷயங்களில் தோற்று மூக்குடைந்த மேதாவி களை நாம் அனைவரும் பார்த்திருக்க முடியும்.

மூன்றாவதாக, வெற்றி பெற்றவர்களுக்கு யாரு டைய அறிவுரையும் தேவை இல்லை என்ற எண் ணம் மேலோங்கி நிற்க வாய்ப்பு உண்டு. ஒருவன் எத்தனை தான் புத்திசாலியானாலும் அவன் அறிந் திராதவையும் எத்தனையோ இருக்கக்கூடும். அந்த அறிந்திராத விஷயங்கள் அவனுடைய எதிர்கால வெற்றிக்கு முக்கியமானவையாக இருக்கக் கூடும். ஆனால் எல்லாம் எனக்குத் தெரியும், தெரியாமலா இத்தனை வெற்றிகள் கண்டிருக்கிறேன் என்று நினைக்கிற சில வெற்றியாளர்கள் அறிவுரை கூற வருபவர்களை ஏளனமாகப் பார்க்க முற்படுகிறார் கள். அவர்களுக்கு அறிவுரை வேம்பாகக் கசக் கிறது. எனவே தோல்வி அடையும் சமயத்தை விட அதிகமாய் வெற்றி அடையும் சமயத்தில் எச்சரிக் கையாக இருங்கள். தோல்வி அடையும் போது இருப்பதை விட அதிகமாய் வெற்றி அடைகை யில் அடக்கமாய் இருங்கள். கர்வமும், அலட்சிய மும், அடுத்தவர்களைத் துச்சமாய் நினைக்கும் தன் மையும் உங்களை அண்ட விடாதீர்கள். அப்படி கவனமாய் இருந்தால் மட்டுமே வெற்றியை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும். வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறுவதும் அப்படி இருக்கும் போது மட்டுமே சாத்தியமாகும்.

- என்.கணேசன்

இலக்குத் தவறிச் செல்லும் தமிழ் அமைப்புகள்

கோபி
ஒரு பேப்பர்

தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் செயற்படும் தமிழத்தேசிய அமைப்புகளின் செயற் பாடுகள் அல்லது செயற்பாடின்மை, அதன் உறுப் பினர்கள் வெளியிடும் கருத்துகள் என்பனவற்றில் விமர்சனம் கொண்டுள்ளவர்களும்,இவை அனைத் தினதும் இறுதி இலக்கு ஒன்று என்றே நம்புகிறார் கள். ஆதலால், அரசியல் பணிகளை இவ்வமைப் புகளிடம் விட்டுவிட்டு, தமது அன்றாட வாழ்வில் கவனம் செலுத்துகிறார்கள்.

அவ்வப்போது நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், அரசியல் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சிறுதொகையிலான மக்களும் அத்துடன் தமது பணி முடிவுற்று விட்டதாக எண்ணுகிறார்கள். தம்மை பிரதிநிதித்துப்படுத்துவதாகக கூறிக் கொள்ளும் அமைப்புகள், ஒரு குறித்த இலக்கு நோக்கி நகர்கின்றவா, அல்லது வெளிச்சக்தி களின் செல்வாக்குக்கு உட்பட்டு அதற்கேற்ப முடிவு களை எடுத்து செயற்படுகின்றனவா என்பது பற்றி பரந்தளவில் மக்கள் சிந்திப்பதாகத் தெரிய வில்லை. அதேசமயம் சில தமிழ்த் தேசிய அமைப்பு கள், தமது செயற்பாடுகள் விடயத்தில், தமிழ் மக்கள் முன் ஒரு தோற்றத்தையும், பிற அதிகார பீடங்களின் பிரதிநிதிகளின் முன் இன்னொரு தோற்றத்தையும் காட்டும் இரட்டை நிலைப் பாட்டைக் கொண்டிருக்கின்றன. இதனையே 'இராஜதந்திரம்' என்று வேறு கற்பிதம் செய்யப் படுகிறது.

தமிழ் அமைப்புகளை கொள்கையளவில் இணங்க வைப்பதற்கான தேவை தமிழ்தேசிய அரசியலில் அக்கறை கொண்டவர்களுக்கு மட்டுமல்ல வெளித் தரப்பினருக்கும் இருக்கிறது. ஆனால் இவ் விரண்டு தரப்பின் எதிர்பார்ப்புகளிலும் பாரிய வேறு பாடுகள் உண்டு. தமிழ்மக்களைப் பொறுத் தவரையில், தாயக மக்களின் உடனடி வாழ்வா தாரப்பிரச்சனைகள் மற்றும் தொலை நோக்கில், நிலம், பாதுகாப்பு, பொருண்மியம், மொழி, கலாச் சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணும் வகை யிலான சுயாட்சி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஆகியவிடயங்களில் தமிழ் அமைப்புகள் ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

வெளித்தரப்பினரோ, தமிழ் மக்களின் பிரச் சனையினை பயன்படுத்தி சிறிலங்கா அரசாங் கத்தை தமது ஒழுங்கிற்குள் கொண்டு வர தாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்துத் தமிழ் அமைப்புகளும் உறுதுணையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இவ் எதிர் பார்ப்புகளில் பரஸ்பரம் இருதரப்பு நலனும் சந் தித்துக் கொள்ளும் சாத்தியபாடுகள் உள்ளன. எனினும் இங்கு பாதிப்புக்கு உள்ளாகும் தரப்பு தமது கோரிக்கைகளில் உறுதியாக இல்லாது விடின், பலம் வாய்ந்த வெளித்தரப்புகளின் இழுப் பிற்குள் சென்றுவிடும் நிலையே உருவாகும். இவ்வாறு இழுபட்டு செல்லும் நிலையில் சில தமிழ் அமைப்புகள் காணப்படுவதை அண்மைய சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

உலகத் தமிழர் பேரவை கடந்த ஆண்டு தமது வேலைதிட்டமாக ஒரு நான்கு அம்சத்திட்டத்தை அறிவித்திருந்தது. அவற்றுள் முக்கியமாக தமிழ் அமைப்புகளை இணைத்து ஒரு பொதுப்பிரகடனம் ஒன்றை வெளியிடவிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. பெரும்பாலும் மேற்குலக அதிகார மையங் களின் ஆலோசனையின்படி செயற்படும் உலகத் தமிழர் பேரவையின் முயற்சிக்கு அவற்றின் ஆதரவு இருக்கும் என்று எதிர்பார்த்ததில் தப் பில்லை. அதனை உறுதிப்படுத்தும் வகையில் இம் முயற்சிக்கு அனுசரணையாளராக ஜேர்மனியை தளமாகக் கொணடு இயங்கும் Berghof Foundation செயற்படுகிறது,அதற்கான நிதியுதவியினை சுவிற் சலாந்து அரசாங்கம் வழங்குகின்றது.

மேற்படி பொதுப்பிரகடனம் தொடர்பான செய்தி கள் வெளியானதிலிருந்து, அதன் சாத்தியப் பாடுகள் தொடர்பான ஐயம் பொதுப்பரப்பில் வெளிப்படுத்தப்பட்டது. தாயகத்தில் இயங்கும் அமைப்புகள் அங்குள்ள சட்டவரையறைக்குள், குறிப்பாக சிறிலங்கா அரசியல் அமைப்பின் ஆறாம் திருத்தச்சட்டத்திற்கு உட்பட்டதாகவே தமது கோரிக்கைகளை வைக்க வேண்டிய நிர்ப்பந்தத் தில் உள்ளன. அதேசமயம், புலம்பெயர்நாடுகளில் இயங்கும் அமைப்புகள் அவ்வாறான கட்டுப்பாடு களுக்கு உட்பட வேண்டிய அவசியம் கிடையாது. அலைந்துழல்வு சமூகத்தில் செயற்படும் தமிழ்த் தேசிய அமைப்புகளில் பெரும்பாலானவை தமிழீழக் கோரிக்கையை தமது இலட்சியமாகக் கொண்டு செயற்படுவதாகக் கருதப்படுவதனால், அனைத்து தமிழ்த் தேசிய அமைப்புகளையும் கொள்கை ரீதியாக பொது இணக்கப்பாட்டுக்கு கொண்டு வருவது சாத்தியமற்றது என்ற கருத்தை இப்பத்தி முன்னர் வெளிப்படுத்தியது.

1985ம் ஆண்டு தமிழ் அமைப்புகள் இணைந்து வெளியிட்ட தாயகம் - தேசியம் - தன்னாட்சி உரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட திம்புப் பிரகடனத்தை உள்ளடக்கியதாக குறைந்த பட்ச அடிப்படையிலாவது ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது சிரமமானது அல்ல என யாராவது எதிர் பார்த்திருந்தால் அதில் தவறிருக்க முடியாது.

ஏனெனில் 2010ம் ஆண்டு நடைபெற்ற பாரளு மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம், திம்புப் பிரகடனத்தைத் தழுவியதாகவே அமைந்திருந் தது. இருப்பவற்றுள் மிதவாத அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமானால், மற்றயவை இவற்றை ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்ப்பது தர்க்கரீதி யாக சரியாகவே காணப்படுகிறது. ஆனால் Berghof Foundation இன் அனுசரணையில் நடை பெறும் பொதுப்பிரகடன முயற்சி இக்கருத்தினை மறுதலிப்பதாகவே அமைந்துள்ளது. இதுவிடயத் தில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக Berghof ஏற்பாடு செய்த பட்டறைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திம்புப்பிரகடனத்தை மீறும் கருத்துளையே வெளியிட்டுள்ளது. மேற்படி பட்டறை களில் உலகத்தமிழர் பேரவையின் சார்பில் கலந்து கொண்ட கனேடிய தமிழ் கொங்கிரஸ், அவுஸ்திரே லிய தமிழ்கொங்கிரஸ் என்பனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரித்து நின்றதாகத் தெரியவருகிறது.

மேற்படி பொதுப்பிரகடன முயற்சிக்கான பட்டறை களில் அத்துலக மக்களவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலகத்தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு பற்றி வருகின்றனர். தமிழ்த் தேசிய அமைப்புகளான இவற்றிடையே இதுவரை குறைந்தபட்ச விடயங் களில் கூட இணக்கப்பாடு ஏற்படவில்லை. இனி, இவற்றிடையேயான முரண்பாடுகளைப் பார்ப்போம்.

◆ தேசியம் இனம்

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படை யிலேயே தமிழ்த் தேசிய அரசியல் கட்டப்பட்டுள் ளது. ஆனால் இதனை ஏற்க மறுக்கும் வெளிசக்தி கள் தமிழ் மக்களை சிறுபான்மை சமூகமாகவே (ethnic minority) பார்க்கின்றன. இவர்களுக்கு ஏற்ற முறையில் தமிழ் மக்களை தேசிய இனமாக குறிப்பிடுவதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவிர்த்து வருகிறது.

கடந்த வருடம் நாச்சியப்பன் கூட்டிய கூட்டத்தின் பின்னர் அங்கு பங்குபற்றிய தமிழ்க்கட்சிகள் கூட்டாக வெளியிடப்படவிருந்த அறிக்கையிலும் இம்முரண்பாடு வெளிப்பட்டது. கூட்டமைப்பு தமிழ் மக்களை 'peoples' என்று குறிப்பிட முனைந்தது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 'nation' என்று குறிப்பிட வேண்டும் என வாதிட்டது.

இதே முரண்பாடு அண்மைய Berghof பட்டறை யிலும் வெளிப்பட்டுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு தமிழ்மக்களை ஒரு தேசிய இனம் என அழைக்கமுடியாதுஎன வாதிட்டுள்ளது. கூட்டமைப் பின் இந்நிலைப்பாட்டை உலகத்தமிழர் பேரவை யில் சார்பில் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய தமிழ் கொங்கிரஸ், கனேடிய தமிழ் கொங்கிரஸ் ஆகியற்றின் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டனர். நாடுகடந்த அரசாங்கம், அனைத்துலக மக்களவை என்பன தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன.

◆ சுயநிர்ண்ய உரிமை

தமிழ் மக்கள்ஒரு தேசிய இனம் என்ற அடிப் படையில் சுயநிர்ணய உரிமையை கொண்டிருக் கின்றனர். தமிழரசு கட்சியின் ஆரம்பத்திலி ருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டை ஒற் றையாட்சி முறையில் 'உள்ளக சுயநிர்ணய' உரிமை யாக தரக்குறைப்பு செய்து இப்போது கூட்டமைப்பு முன்வைக்கிறது. இதற்கு துணைாக,இறுதியாக நடந்த பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளும் உள்ளக சுயநிரண்ணய உரிமையை ஏற்றுக்கொண்டார்கள் என்ற வாதமும் முன்வைக் கப்படுகிறது. தமிழ் தேசிய மக்கள் முன்ணணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னமபல் உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதனை என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை. அவர் பிரிந்து செல்லக் கூடிய சுயநிர்ணய உரிமையே வலியுறுத்திவருகிறார்.

◆ இனப்படுகொலை (Genocide)

தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக் கப்படுகிறார்கள் என்பதனை அனைத்துத்தரப் பினரும் ஏற்றுக்கொண்டாலும், சர்வதேச சக்கதி கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் அதனை பொதுப்பிரகடனத்தில் சேர்த்துக் கொள்ள கூட்மைப் பும் உலகத்தமிழர் பேரவையும் உடன்படவில்லை.

◆ இடைக்காலத் தீர்வு

வடக்கு கிழக்குப் பகுதிகளை இணைத்து அங்கு சர்வதேசத்தின் மேற்பார்வையில் நிலைமாற்று அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகத்தினை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகிறது.

அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் கூட்டமைப் பினர் பதின் மூன்றாம் திருத்தச்சட்டத்தின் அடிப் படையிலான மாகாண சபைகளை இடைக்காலத் தீர்வாக ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

தமிழ்த் தேசிய அமைப்புகள் தமக்கான கொள் கைகளை அமைத்துக்கொள்வதற்கான முழு உரிமை களையும் கொண்டிருக்கின்றன. ஆனால் இவை அவை பிரதித்துவப்படுத்துவதாகக் கூறும் மக் களின் கருத்துகளை பிரதிபலிக்கின்றவா என்பதனை மக்கள் தான் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil 020 8795 4258
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS 020 8297 9432
Best Food 020 8692 9811

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Akilan Enterprise 020 8548 0033

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan 020 8514 1744
Angels 020 8553 0490

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
Eelavan 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Duvaraka C & C 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret 020 8571 4434

Most Trusted and Reliable Name in the Trade Since 1985

Collection from £ 10 within London

GlenCarriers
Laksiri Seva

(Glen Carriers Forwarding Limited)

Services We Offer;

- **இலங்கை** மற்றும் உலகத்தின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக **குறைந்த விலையில்** பொதிகள் அனுப்பும் சேவை
  - தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
    - பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Worldwide Courier Services
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with **FREE** Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள்

Laksri Seva Customs Bonded Warehouses

Colombo Warehouse	Eastern Province Warehouse
Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo +94 1129 177 29-31	Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. T: 0672 0510 50-51

Collection from your door point in any part of UK or Europe

Conditions Apply

2 x Tea Carton for

£ 19.50 Only..

அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: With prior appointment only

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS

இயக்குனர் ஹரி, சூர்யாவுடன்
இணைந்து படைக்கும்
4வது வெற்றிப்படைப்பு

SINGAM II

STARRING:
SURYA, ANUSHKA,
HANSHIKA, VIVEK,
SANTHANAM, DANNY SPANI
ANJALI.

DIRECTION: HARI
MUSIC: DEVI SRI PRASAD

JOIN US - YouTube WWW.YOUTUBE.COM/AYANGARAN facebook WWW.FACEBOOK.COM/AYANGARAN
VISIT US:WWW.AYANGARAN.COM

FROM **FRI 05TH JULY 2013 –** CINEWORLD – DAILY SHOWS

ILFORD | WANDSWORTH | FELTHAM | STAPLES CORNER
LIVERPOOL | SHEFFIELD | STOCKPORT | MILTON KEYNES
LUTON | BRADFORD

SUNDAY / MONDAY ONLY: IPSWICH, CARDIFF, BRISTOL, BOLDON

COMING SOON: MIDDLESBOROUGH, CAMBRIDGR, HULL, BEXLEYHEATH, ASHFORD

ADVANCE BOOKING: **ONLINE – WWW.CINEWORLD.COM OR CALL 0871 220 1000**

AT BOLEYN CINEMA

THURSDAY 4TH JULY AT 7:00 PM, 10:00 PM
FROM FRIDAY 5TH JULY DAILY SHOWS
1:0 PM, 4:00PM, 7:00PM, 10:00PM
TEL : 020 8426 0303

AT VUE CINEMAS

FROM 12TH JULY 2013
VUE BIRMINGHAM, VUE CROYDON PURLEY WAY
TEL : 080712 240 240

AT HARROW SAFARI

FROM 05TH JULY – DAILY SHOWS
1:30 SAT/SUN ONLY
5.00 PM, 8.00PM (11.00PM FRI / SAT ONLY)
TEL: 020 8426 0303

AT BELFAST

SAT 6TH & 7TH OF JULY 2013 IN MOVIE HOUSE AT 11.00
SRIKANTH - 07972798393

FOR FURTHER DETAILS: **020 8540 1500, 020 8903 3300**
SUBJECTED TO CHANGES INN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD

பதின்மூன்றாம் திருத்தம், வடமாகாணசபைத் தேர்தல்

– தமிழ் குடிசார் சமூகத்தின் நிலைப்பாடு

பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் சிறிலங்காவில் சூடு பிடித்து வருகின்றன. இந்நிலையில், அங்கிருந்து வெளிவரும் தமிழ் ஊடகங்கள் இவ்விடயத்தில் அடக்கிவாசித்து வருகின்றன. இவை பற்றிய காட்டமான விமர்சனங்கள் இந்திய மத்திய அரசை கோபப்படுத்திவிடும் என்ற அச்சத்தில், பதின்மூன்றாம் திருத்தத்தை ஏற்க மறுக்கும் தமிழ் அரசியல்வாதிகளினதும் செயற்பட்டாளர் களினதும் கருத்துகளை வெளியிடுவதனை தவிர்த்து வருகின்றன. தமிழ் குடிசார் சமூகத் தின் பிரதிநிதியும் யாழ் பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளருமான திரு. குமாரவடிவேல் குருபரன் அவர்கள் மேற்படி இருவிடயங்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்துகளை இங்கு பிரசுரிக்கிறோம்.

சிவில் சமூகத்தினுடைய நிலைப்பாடு வட மாகாண சபை தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் எங்களு டைய கொள்கை நிலைப்பாடு தமிழ் தேசிய அரசியலில் இருக்கும் எந்தவொரு கட்சியும் நேரடியாக மாகாண சபை தேர்தலில் போட்டி யிடக் கூடாது என்பதாகும். இந்த நிலைபாட்டை நாம் 2010 முதலே எடுத்து வந்துள்ளோம். 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக கொண்ட ஒரு தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்கும் நடவடிக்கைகளை மறுக்கும் வகையிலேயே இந்த நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய அரசியலில் இருக்கும் கட்சிகள் எடுக்க வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுத்திருந் தோம். தமிழ்த் தேசிய கட்சிகள் அனைவரும் ஆதரிக்கும் சுயேட்சைக் குழுவொன்றின் மூலமாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இந்த முன்மொழிவை தமிழ் தேசியக் கூட்ட மைப்பு ஏற்றுக் கொள்ளாத நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களுக்கு முன்பதாக 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை மற்றும் பிரிந்த வடக்கு கிழக்கை நிராகரித்து தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளி யிட்டு அவ்விஞ்ஞாபனத்திற்கு ஆணை கேட்டு கிழக்கு மாகாண சபை தேர்தல்களில் போட்டி யிட வேண்டும் என்று சிவில் சமூகம் வெளிப் படையாக கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்தி ருந்தது. கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை முன்வைக்கமாலையே அத்தேர்தலை சந்தித்தது என்பது துரதிட்டவசமானது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புதாம் வடமாகாண சபைத் தேர்தல்களில் நேரடியாக போட்டியிடப் போவதாக கடந்த 11 மே 2013 நடைபெற்ற சிவில் சமூகத்திற்கும் கூட்டமைப்பிற்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான சந்திப்பில் தெரிவித்திருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாகாண சபை தேர்தல்களில் தாம் பங்கு பற்ற போவதில்லை என்ற நிலைப் பாட்டை எடுத்துள்ளது. இந்த நிலையில் மாகாண சபையை கைபற்றி அதில் உண்மை யிலேயே எந்த அதிகாரங்களும் இல்லை என் பதைக் காட்டுவதற்காக மாகாண சபை தேர்தல் களில் பங்குபற்ற வேண்டும் என்ற கருத்து சொல்லப்படுகின்றது. இது ஏலவே வரதராஜப் பெருமாள் தலைமையிலான வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நிரூபிக்கப்பட்டது என்பது ஒரு புறமிருக்க, இது தான் போட்டி யிடுவதற்கான உண்மையான நோக்கம் என்றால் அதனை சுயேட்சை குழு ஊடாகவேமீதிறனோடு செய்ய முடியும். அதற்கான விளக்கத்தைப் பார்ப்போம்.

13ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை உச்சமாகப் பயன்படுத்தி அதில் உள்ள போதாத்தன்மையை உலகத்துக்கு குறுகிய காலத்தில் வெளிக்காட்டக் கூடியவர்கள் நிர் வாகவியலில் ஏற்கனவே அனுபவம் உடையவர் களாக இருந்தால் விரும்பத்தக்கது என்பது எமது நிலைப்பாடு. அதற்காக மாகாண சபை என்பது ஒரு மேட்டுக் குடி நிறுவனமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்ல வில்லை. துறை சார்ந்து இயங்குபவர்களை அறிமுகப் படுத்த வேண்டும் என்று தான் சொல்லுகின் றோம். சட்டம், விவசாயம், மீன்பிடி, அபிவிருத்தி நிர்வாகவியல் ஆகியவற்றில் அனுபவம் உள் ளவர்கள் மாகாண சபை ஒரு வெற்றுப்பாத்திரம் என்பதை தெளிவாக தமது செயற்பாடுகளின் ஊடாக வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருப் பார்கள் என நாம் கருதிகிறோம். மேலும் மத்திய அரசாங்கத்தோடும் ஆளுநரோடும் ஒரு அதிகார பேச்சுவார்த்தையை நடத்தக் கூடியவர் களாகவும் இவர்கள் இருக்க வேண்டும். மாகாண சபைக்குரிய சட்டமூலங்களை, உரிய அபிவிருத்தி வேலை திட்டங்களை முன் வைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இவற்றை ஆளுநரும் மத்திய அரசாங்கமும் தமது அரசியலமைப்பு அதிகாரங்களைக் கொண்டு தடுத்து நிறுத்துவார்கள் என்பது வேறு. ஆனால் 'முயற்சித்துப் பார்த்தோம், 13ஆவது திருத்தத்தின் போதாத்தன்மையால் தோல்வி அடைந்தோம்' என்பதை நிரூபிக்கப் போகின்றோம் என்றால் அதற்குரிய வேலைத் திட்டம் எம்மிடம் இருக்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று நேரடி அரசியலில் ஆர்வம் இல்லாத அனுபவசாலிகளை ஈர்க்க முடியாத உள்ளகக் குழப்பம் நிறைந்த ஒரு அமைப்பாகவே இருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று நேரடி அரசியலில் ஆர்வம் இல்லாத அனுபவசாலி களை ஈர்க்க முடியாத உள்ளகக் குழப்பம் நிறைந்த ஒரு அமைப்பாகவே இருகின்றது. தரமான வேட்பாளர்களை ஈர்க்கக் கூடிய வல்லமை இன்று அதனிடம் உள்ளதா என்ற கேள்வியும் இருகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை குறை கூற வேண்டும் என் பதற்காக இவற்றை கூறவில்லை. யதார்த் தத்தை சொல்லுகிறோம். இன்று கூட்டமைப் பின் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள குளறுபடிகளை வைத்துப் பார்க்கும் போது அத்தகையவர்கள் தான் மாகாண சபையிலும் இருப்பார்கள் என்றால் அதிகாரங்கள் இல்லாத தால் வட மாகாண சபை தோல்வி அடைந்தது என்ற செய்தியை வெளிக் கொண்டு வர முடி யாது. தமிழனுக்கு ஒரு நிர்வாகத்தை கொடுத் தால் அவனால் அதனைக் கொண்டு நடத்த தெரியாது என்ற அவப் பெயரே வந்து சேரும். இதனை நாம் நேரடியாக தமிழ் தேசியக் கூட்ட மைப்பினரிடம் சொல்லி இருக்கிறோம். ஆகவே நேரடியாக தமிழ் தேசியக் கட்சிகள் 13 ஆவது திருத்தத்தின் கீழான தேர்தல்களில் பங்கு பற்றவில்லை என்ற நோக்கத்தை எய்துவதற்கு மேலதிகமாக மாகாண சபை முறைமையில் ஒன்றுமே இல்லை என்பதை வெளிக் கொணரக் கூடிய தரமான வேட்பாளர்களை நிறுத்துவதற் கும் சுயேச்சை குழு என்ற பொறிமுறை உதவக் கூடும். அனைவரும் ஒற்றுமைப்பட்டு அத்தகைய குழுவை உருவாக்குவதற்கு திடசங்கற்பம் பூண்டால் அதனை நிச்சயமாக செய்து காட்ட லாம், வெற்றி பெறவும் வைக்கலாம், தமிழ் தேசிய அரசியலையும் தக்க வைத்துக் கொள்ள லாம், 13ஆவது திருத்தம் ஒரு ஆரம்பப் புள்ளி அல்ல என்பதையும் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டலாம். இதற்கிடையில் வித்தியாசமாக, 'பெட்டிக்கு வெளியே' சிந்தித்து எமது மக்களின் அனுதின அவலத்தை போக்குவதற்கான வழி வகைகளையும் கண்டறிய வேண்டியவர்களாக உள்ளோம்.

நன்றி: குளோபல் தமிழ் நியுஸ் இணையத்தளம்

உயிரை நெருப்பாகி உடலை வெடியாக்கி உதாரணமானோரே..!

உயிரை நெருப்பாகி
உடலை வெடியாக்கி
உதாரணமானோரே..!
உயிரென மதித்த மண்ணின்
உடனடித் தடைகள் நீங்க
உருகி வீழ்ந்த கண்மணிகளே...

பதவியும் வேண்டாம்
பட்டமும் வேண்டாம்
தாரமும் வேண்டாம்
தராதரமும் வேண்டாம்
விடுதலை ஒன்றே வேண்டும்..
கட்டளை கேட்டு துள்ளிக் குதித்து
தேச எல்லையில்
ஆக்கிரமிப்பாளனை
ஆக்கிரமித்த வீரரே...

தலைவனைக் காத்திடுங்கள்
தாய் தேசத்தை மீட்டிடுங்கள்
நாங்கள் சாவிலும்
வாணிருந்து நோக்குவோம்
நட்சத்திர ஒளிகளாய்
சுதந்திர தமிழீழத்தை
ஒளிர்விப்போம்
ஆசை வளர்த்துச் சென்ற
ஆருயிர்களே..

இன்று நாம் கண்பது
உங்கள் கனவினின்றும்
உருமாறிய உண்மைகளையே..!

உங்கள் உயிர் மூச்சிழுத்த
தோழர்கள் சிலர்
உருமாறித் தடம்மாறி உலாவர...
உங்கள் காற்தடம் பற்றியோர் சிலர்
காட்டிக் கொடுப்பில் கருமமாய்
காரியமாற்ற..
உங்களைப் போற்றியே
தாம் தப்பித்த மக்களோ
உண்மைகள் மறந்து
ஆடி மகிழ்கின்றார்
அடிமை வாழ்வில் அவர் சுதந்திரம்
பகிர்கிறது..!

இருந்தும் தர்மம் வெல்லும்..
வேளை வரும் நெருப்பாகி
உடலை புகையாக்கி தேசக்காற்றில்
கலந்திட்ட தீரரே..
நீங்களே எம் நீரை
நிலத்தை வானை..
ஆக்கிரமித்திட்ட எதிரி மூச்சிலும்
கலந்து நிற்கிறீர்..!

வாழ்வு வரும் உங்கள் கனவும்
நனவாகும் காலம் வரும்..!
தர்மம் காக்கும் உங்கள்
வீழாத நினைவது
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
என்றே சத்தியம் செய்யும்..!

~ தெருக்காலபோவான் (யாழில்)

குடும்பத்திற்கு ஒன்றா ?
குடும்பத்தில் ஆளுக்கொன்றா ?

சுகி

(ஒரு பேப்பருக்காக)

எங்களின் சமூகத்திற்கு, மற்றைய இடம் பெயர்ந்த சமூகங்களைச்சார்ந்தவர்கள் போன்று, எமது இங்குள்ள சமூகத்திற்கோ, அல்லது தாய்நாட்டில் சொல்லொண்ணா அடங்கு முறைக்குள் புழுப்போல வாழும் எங்களின் சமூகத்திற்கோ உதவவேண்டும் என, ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதலில் ஆளுக் கொரு நிறுவனமோ, உதவி நிறுவனமோ, கோயிலோ, பள்ளிக்கூடமோ என்று பலவித மான சமூக சேவையில் ஈடுபட்டுக் கொண்டு, அதிலேயே அவர்களுக்கென தனியாக இருக் கும் நேரத்தில் (Me-Time) பெரும் பகுதியையோ அல்லது முழுநேரத்தையுமோ இதற்கெனச் செலவு செய்கிறார்கள்.

முன்பு ஒருவர் ஒரு குடும்பத்தில் ஒரு சமூக சேவையில் ஈடுபட்டார் என்றால் மனைவி, பிள்ளைகள், மாமன், மச்சான், ஒன்றவிட்ட சகோதரங்கள் என்று எல்லோருமே இப்படி நல்ல வேலை செய்கிறார் என்று உதவ முன் வருவார்கள். இப்போ காலம் முன்னேறிவிட் டதோ, பிள்ளைகள் வளர்ந்து அவர்களும் ஏதாவது செய்யவேண்டும் என்று நினைகிறார் களோ, அல்லது பிரச்சனை கூடித் தேவைகளும் அதிகரித்து விட்டதோ என்னவோ, ஒரு குடும் பத்தில் பிள்ளை ஒரு உதவிநிறுவனத்திற்கென வேலை செய்தால், மனைவி இன்னொரு கோயிலோ, நிறுவனமோ என்று நிற்க, கணவர் வேறு ஒரு உதவிநிறுவனமோ, பள்ளிக்கூடமோ என்று நிற்க, மாமன் மச்சான்மாரும் ஆளுக் கெடு பழையமாணவர் சங்கம், ஊர் சங்கம் என்று நிற்க ஆகமொத்தம் ஒரு குடும்பத்தி லேயே பல நிறுவனங்களில் ஈடுபாடாக இருக்கி றார்கள். அதனால் என்ன நட்டம், ஊருக்கும், நாட்டுக்கும் நன்மைதானே என்று சொல்ல லாம். எங்கு பிரச்சனை வருகிறது என்றால், குடும்பத்தின் பொது நேரம் (Family Time) இல் லாமலோ, குறைந்தோ போய்விடுகிறது.

அத்தோடு ஆளுக்கொரு நேரத்தில், இடத்தில் அலுவலாக இருப்பதால் ஒரு பொதுவான குடும்ப விடுமுறையைக் கூட சிந்திக்க முடியாது இருக்கும். அதைவிட கொடுமை, சில நேரம் ஒரு குடும்ப உறுப்பினருக்கோ, அல்லது கணவன், மனைவியில் ஒருவருக்கோ இதில் ஒன்றிலும் ஈடுபாடு இல்லாவிட்டால் அவர் மனதளவில் தனி மையை அனுபவிக்க வேண்டியிருக்கும், அது குடும்ப பிரிவுக்கு இட்டுச்செல்லலாம். அவரின் உடலளவில் அதாவது வெளியே பார்க்கும் பொழுது, குடும்பத்தில், அவர் ஒருவர்தான் அதிக நேரம் உள்ளவராக படுவதால் குடும்பத் தில் உள்ள மற்றவர்கள் தங்கள் விடையங் களுக்கு அல்லது நிகழ்வுகளுக்கு வரும் படி வற்புறுத்தலாம் அல்லது குடும்பத்தில் உள்ள எல்லா வேலையையும் அவரே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கலாம் அல்லது குடும்பத்தில் பெறுமதி இல்லாத உறுப்பினரான நடத்தலாம்.

இது ஒருபக்கம் இருக்க நிகழ்வுகளுக்கு பணம் சேகரிப்பதுவும் இப்போ கடினமாகி வருகிறது. வியாபார நிறுவனங்கள் வைத்திருப் பவர்களும் எத்தனைக்கென்று கொடுப்பது, எதை விடுவது. ஆளுக்கொரு நிகழ்வு வைப்பதால், நிகழ்வுகளுக்கு மக்கள் வருவது குறைவாக உள்ளது, மானாட, மயிலாட போன்ற ஒரு செய்தியும் இல்லாத நிகழ்வுகளைத் தவிர. பல வேலைத்திட்டங்கள் உள்ளதால், ஆளுக் கொரு வேலைத்திட்டத்தை எடுத்துச் செல்வது நல்ல விடையம் என்றாலும், பொது நோக்கத் தையும், இலக்கையும் பற்றி சிந்தித்து எது இந்த சமூகத்தின் உடனடித்தேவை, எது உடனடித் தேவையில்லாவிட்டாலும் எமது வருங்காலத் திற்கு அவசியமானது என்று தீர்மானிப்பது அவசியம். வெள்ளைகாரன் எமக்கெனச் செய் வதால் எதுவும் எமக்கு நன்மையாகத் தான் இருக்கும் என நினைப்பதுவும் முட்டாள் தனம், குதிரையில் பணத்தைக் கட்டுமுன் குதிரை எவ் வளவு தூரம் ஓடும் என்று பார்க்க வேண்டும்.

சிலபேர் நேரடி அரசியல் இல்லாத எவற்றுக் கும், முக்கியமாக NGO போன்ற அரசாங்க சார் பற்ற நிறுவனங்களுக்கு நன்றாக வாரிக் கொடுப் பார்கள். அரசாங்கங்களின் அரசியல் வேலைக ளுக்கான ஒரு உபவிளைவுதான் (sub product) இந்த NGO கள் என்பதையும் அறிந்து வைத் திருத்தலும் அதுபற்றிய அறிவும் அவசியம்.

அத்தோடு இன்னொரு விடையம் யாராவது வெள்ளைக்காரர் எங்களின் பிரச்சனையைப் பற்றி புத்தகம் வெளியிட்டால் போதும் புத்தகத் தில் முதல் பக்கத்தைக்கூட வாசித்திருக்க மாட்டார்கள், அதை எழுதியவருக்கு கோயில் கட்ட எங்கு நிலம் வேண்டலாம் என்று யோசிக்க வெளிக்கிட்டு விடுவார்கள். அவருக்கு எப்பிடி புத்தக வருவாய்யைக் கூட்டலாம், எங்கு சிலை வைக்கலாம் என்று, இப்படி யோசிப்பதை விட்டு சின்னனாக ஒரு, அந்த புத்தத்தை பற்றி எமக் கிடையே, முதல் ஒரு கலந்துரையாடலை வைத்து, உண்மையா அதை வாசித்து முடித்து, அது பற்றி ஏன் இதை இப்படி சொல்கிறார், இந்த விடையம் எவ்வளவு தூரம் உண்மை தன்மை வாய்ந்தது. இந்தப் புத்தகம் எமது சந்ததிக்கு சொல்லும் செய்தி என்ன? என்பது பற்றி வருகால எமது இளைய தலைமுறையையும் (அவர்களிடம் வெள்ளை என்றவுடன் எழுந்து சலாம் போடும் தன்மை இல்லை) உள்வாங்கி விமர்சிக்கலாம். அதற்கு பிறகு அவருக்கு மாலை போடுவது யார்? மைக் பிடிப்பது யார்? என்று யோசிக்கலாம். 'இவர்தான் எங்களைப் பற்றி எல்லாம் எழுதியிருக்கிறார், நல்லவர். அப்பிடியா? என்ன எழுதியிருக்கிறார்? தெரி யாது.. ஆனால் ஒரு வெள்ளை இனத்தவர்..எங் களைப்பற்றி எல்லாம் எழுதியிருக்கிறார்.....'

எங்கள் எல்லோருக்குமே நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று துடிப்பிருப்பதும், இன் னும் சிலர் குற்றவுணர்வில், தேவைப்பட்ட நேரத் தில் எம்மால் உதவ முடியாமல் இருந்தது, இப்போ செய்ய கூடியதாக இருக்கின்றோம் ஆனால் என்ன செய்வது என்று தெரிய வில்லை என்று ஏதாவது இயன்றவரை செய்ய வேண்டும் என்று விரும்புவது, எல்லாம் செய்து விட்டோம் இனி செய்வதற்கு ஏற்றமாதிரி ஒருவரும் இல்லை என்ற விரத்தியில் இருப்பது, என பலதரப்பட்ட பின்னனியிலும், சிந்தனையிலும் எமது மக்கள் வாழ்கிறார்கள். அத்தோடு ஒரு போராட்டத்தின் மக்கள் அழிவின் பின் உள்ள சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள், ஏமாற்றங்களோடு வாழ்பவர் களை திசை திருப்புவதும், பிரிந்தாளுவதும், சுலபம் என, மிகக்கவனமான எங்களில் சிலரைக் கொண்டே எங்களையே புத்தகம் போல எங்கு பலம், எங்கு பலவீனம் என ஆராய்கிறார்கள்.

வெள்ளைகாரன் எமக்கெனச் செய்வதால் எதுவும் எமக்கு நன்மையையாகத் தான் இருக்கும் என நினைப்பதுவும் முட்டாள் தனம், குதிரையில் பணத்தைக் கட்டுமுன் குதிரை எவ்வளவு தூரம் ஓடும் என்று பார்க்க வேண்டும்.

அதற்கு போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் தீவிரமாக இருந்து பின்பு காணாமல் போய் இப்போ எம் மக்களின் அழிவுக்கு 5,6 வருடங் களுக்குள் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசித்த வர்களை இன்னும் கூடுதலாக கையாளுகிறார் கள். அவர்களுடன் கலந்துரையாடினால், காணா மல் போய் இருந்த காலப்பகுதி குற்றவுணர்வை மறைக்க, வேறு ஒரு திசையில் உரையாடலை திசை திருப்பி விடுகிறார்கள. 5,10 பேர் களுக்கு குறைய உள்ள ஒரு நிறுவனத்தையே சரியாக நடத்த முடியாமல் ஆளுக்கொரு பக்கமாக தள்ளாடும் நாம், ஒரு அரசையே கட்டி ஆண்டு இந்த உலகத்தையே திருப்பி பார்க்க வைத்தவர்களிடம் எங்கு பிழைபிடிக்கலாம், என்று பூதக் கண்ணாடி கொண்டு பார்த்து, அதைப்பற்றி பேசி தமது குற்றவுணர்வுக்குத் தீனி போடுகிறார்கள். இப்படி உள்ளவர்களா லும் எம் மத்தியில் புதிது புதிதாக பெயரில் நிறு வனங்கள் முளைகின்றன, ஏனெனில் அவர்கள் எலிக்கு தலையாக இருக்கவேண்டும் என்றே விருப்புவார்கள். ஊருக்கும் தெரியாமல், தாய்க் கும் தெரியாமல் காற்றாகி போனவர்கள் மத்தி யில் இப்படிப்பட்ட பதர்களும் ஊருக்கு பாரமாக இருக்கத்தான் செய்கிறார்கள்.

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

* Packers * Movers * Shippers

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

Special rates for Containers and Machinery

4 Collection Points :
Harrow
Watford
Knightsbridge
Croydon

T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

ESOL Citizenship Class & Test £150

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்.

Understand the knowledge of life in the UK.
We provide combined intensive English language (ESOL) with Citizenship classes & Exam.
We provide the following courses and services:

Citizenship test and life in the UK test
For 'indefinite leave to remain'&
British passport - A1 Spouse visa test

We also provide:
ILETS, B1, B2&C1 for Higher Education and Business visa

* Courses from Only £ 150.00 with no hidden cost, one payment until you pass (limited offer)

Peel House, 32-44, London Road, Modern, SM4 5BT
Tel: 020 3305 6439 Mob: 07828764222
www.ukcitizenshiptest.org (Walking distance from Morden Station)

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ராஜ்ய சபா தேர்தல் முறைமையும் கருணாநிதியின் கயமையும்



வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

வடமொழியில் ராஜ்ய சபா என்றழைக்கப் படும் இந்திய மாநிலங்களவை இந்தியாவின் மூதவையாகும். அதில் இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிக்கும் 12 பேரும் இந்திய மாநில சட்டசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யும் 238 பேருமாக 250 உறுப்பினர்கள் இருக்கின்றனர். குடியரசுத் தலைவர் விஞ்ஞானம், கலை, இலக்கியம், விளையாட்டுத் துறை போன்றவற்றில் சிறந்து விளங்குபவர்களை மாநிலங்களவை உறுப்பினர்களாக நியமிப்பார்.

ஜெயலலிதா கனிமொழிக்கு அளிக்கும்படி தனது கட்சிக்காரர்களை இரகசியமாக வேண்டிக் கொண்டதாகக் கருதப்படுகிறது. தி.மு.காவும் அண்ணா திமுகாவும் அவ்வப்போது ஒரு மூன்றாம் தலைமை தமிழ்நாட்டில் உருவாகாமல் இருக்க அடிக்கடி திரைமறைவில் இணைந்து செயற்படுவதுண்டு.

வடமொழியில் லோக் சபா எனப்படும் மக்களவைக்கு உறுப்பினர்கள் மக்களால் வாக்களிப்பு மூலம் தேர்ந்த்தெடுக்கப்படுப்படுவார்கள். இந்தச் சபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கலைக்கப்படும். ஆனால் மாநிலங்களவை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய வகையில் உறுப்பினர்களின் தேர்வு முறைமை வகுக்கப்பட்டுள்ளது. ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர் ஆறு ஆண்டுகள் பதவியில் இருக்கலாம். மாநிலங்களவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கின ருக்குசுழற்ச்சிமுறையில்இரண்டுஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும். இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றில் ஒரு பகுதியினர் ஆறு ஆண்டுகள் பதவியில் தொடர்வார்கள். ஏற்கனவேபதவியில் உள்ளவர்களில் அரைப்பங்கினர் (மொத்த உறுப்பினர்களில் மூன்றின் ஒரு பங்கினர்) இரண்டு ஆண்டுகளுக்கும், எஞ்சிய வர்கள் நான்கு ஆண்டுகளுக்கும் பதவியில் இருப்பார்க்ள்.

ஒரு மாநிலத்தில் இருந்து எத்தனை உறுப்பினர்கள்தேர்ந்தெடுக்கப்படுவார்கள்என்பதுஅந்த மாநிலத்தின் மக்கள் தொகையைப் பொறுத்தது. அதிக மக்கள் தொகையைக் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் இருந்து 31 உறுப்பினர்களும், மஹாராஸ்ட்ராவில் இருந்து 19, தமிழ்நாட்டில் இருந்து 18. பாண்டிச் சேரியில் இருந்து 1 இப்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முறை தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கினரான 6 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு தேர்தல் நடை பெற்றது.

◆ வாக்களிப்பு முறைமை

இந்திய மாநிலங்களவைக்கான உறுப்பினர்களை மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் 'மாற்றத்தக்க ஒற்றை வாக்கு' முறைமை மூலம் தேர்ந்தெடுப்பார்கள். இம்முறை தமிழ்நாட்டிற்கு 6 உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. 234 சட்ட மன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களாக இருந்து 6 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்து எடுத்தனர். இந்த ஆறுடன் ஒன்றைக் கூட்டி ஏழு ஆக்கி அந்த ஏழால் 234ஐ வகுத்து 100ஆல் பெருக்கி வரும் தொகை 3343. இதை 3400 ஆக்குவார்கள். ஒரு வேட்பாளர் 3400 புள்ளிகள் எடுத்தால் வெற்றி பெற்றவர் ஆவார். ஒரு சட்டமன்ற உறுப்பினரான வாக்காளர் அளிக்கும் வாக்கிற்கு 100 புள்ளிகள் வழங்கப் படும். ஒவ்வொரு வாக்காளர்களும் கொடுக்கப் படும் வாக்குச் சீட்டில் போட்டியிட்ட 7 வேட் பாளர்களினதும் பெயர்கள் இருந்தன. வாக்களிக்கும் போது விருப்பத் தெரிவு அடிப்படையில் ஆகக்கூடியவிருப்பமுள்ளவேட்பாளருக்கு 1 என்றும், அடுத்த தெரிவுக்கு 2 என்றும் இப்படியே மற்றவர்களுக்கு விருப்பத் தெரிவு அடிப் படையில் இலக்கம் கொடுக்க வேண்டும். வாக்குச் சீட்டு எண்ணும் போது முதலில் முதல் தெரிவு ஆன இலக்கம் 1 ஐப்பெற்ற வேட்பாளர் களுக்கு ஒன்றுக்கு 100 என்ற அடிப்படையில் புள்ளி வழங்கப்படும். ஒருவர் 3400 புள்ளிகள் பெற்றால் அவர் வென்றவராவார். 3400இற்கு அல்லது அதிலும் கூடப் புள்ளிகல் பெற்றவர்கள் முதலில் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப் படுவர். ஒரு வேட்பாளர் 3800 புள்ளிகள் பெற்றால் அவரது மிகையான 400 புள்ளிகள் அவர்க்கு வாக்களித்தவர்களின் இரண்டாம் தெரிவு பெற்ற வர்களுக்கு மாற்றப்படும்.

இப்படி வெற்றி பெற்றவர்கள் 6 என்று வரா விட்டால் மூன்றாம் தெரிவு அடிப்படையில் எஞ்சிய வேட்பாளர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

◆ கருணாநிதியின் மொழிப்போராட்டம்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் நெடுமாறன் ஐயா, வைக்கோ ஐயா, தோழர் சீமான் போன்ற தமிழின உணர்வாளர்கள் திமுக-காங்கிரசுக் கூட்டணிக்கு எதிராக கடுமையான பிரச்சாரம் மேற்கொண்டதால் 234 தொகுதிகளில் கருணாநிதியின் திமுக 23 இல் மட்டுமே வெற்றி பெற்றது. தெலுங்கரான நடிகர் விஜயகாந்தின் தேதிமுக 29 இடங்களில் வெற்றி பெற்றது அதில் 7 பேர் ஜெயலலிதாவின் ஆளும் கட்சிக்குத் தாவி விட்டனர். கருணாநிதி தனது மனவிகளில் ஒருவரான ராஜாத்திஅம்மாளின்மகள்கனிமொழியைவெற்றி பெறச் செய்யப் படாத பாடுபட்டார். பாட்டாளி மக்கள் கட்சியிடம் மண்டியிட்டார். அவர்கள் முதலில் ஒத்துக் கொண்டு விட்டுப் பின்னர் காலைவாரி விட்டனர். விஜயகாந்திடம் மண்டியிட்டார் அவர் இந்த முறை தனது மைத்துனனை வெற்றி பெறச் செய்யுங்கள் அடுத்த முறை உங்கள் மகளை வெற்றி பெறச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டார். இப்படி எல்லாக் கட்சிகளிடமும் மன்றாடி ஒன்றுமே கிடைக்காததால் கடைசியாக மனைவி ராஜாத்தி அம்மளின் நச்சரிப்புத் தாங்காமல் டி. ஆர் பாலுவை சோனியா காந்தியிடம் அனுப்பி ஆதரவு கேட்டார்.

அங்கு அவர்களுக்கு முகத்தில் அடித்தாற் போல் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டன. ஒன்று எம்மை பொறுத்த நேரத்தில் கைகழுவி விட்டுப் போன நீங்கள் இப்போது எப்படி வந்தீர்கள்? இரண்டாவது கேள்வி எல்லாரிடமும் ஆதரவு கேட்டு எல்லோரும் மறுத்த பின்னர் வந்தீருக்கிறீர்கள் ஏன் முதலில் வரவில்லை? ஜி.கே.வாசன் உட்படச் சில தமிழ்நாட்டு காங்கிரசுக்காரர்கள் காங்கிரசுக் கட்சியுடன் உறவை முறித்து விட்டு அறிவாலயத்தில் பட்டாசு கொழுத்தியும் லட்டு கொடுத்தும் கொண்டாடிய வர்கள், இனிக் காங்கிரசுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்றவர்கள் இப்பொது திரும்பி வந்திருக்கிறார்கள் எனக் குதித்தார்கள்.

தி.மு.கவுடன் நல்ல உறவில் இருந்த ப. சிதம்பரம் அண்ணாச்சி திமுகவிற்கு ஆதரவு கொடுப்பதை விரும்ப வில்லை. ஆனாலும் சோனியா கனிமொழிக்கு ஆதரவு கொடுக்க சம்மதித்தார். 2014 நடக்க விருக்கும் பாராள மன்றத் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி ஏற்படுத்த வாய்ப்புக் கிட்டலாம் என நம்பி சோனிய சம்மத்தித்திருக்கலாம். அல்லது தேர்தலில்தனித்துஒருவரை ஒருவர் கடுமையாக எதிர்க்காமல் போட்டியிட்டுவிட்டு தேர்தலின் பின்னர் இணையும் உத்தியும் சோனியா விடமும் கருணாநிதியிடமும் இருக்கிறது.

விஜயகாந்தும் காங்கிரசின் ஆதரவு தனது மைத்துனருக்கு வேண்டும் என்று ஒரு தெலுங்குப் படத் தயாரிப்பாளரின் உதவியுடன் பேச்சு வார்த்தை நடாத்தி இருந்தார்.

தி.மு.க. வேட்பாளர் கனிமொழிக்கு 5 சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ், 2 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மனித நேய மக்கள் கட்சி, 2 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் ஆதரவு அளித்திருந்தன. இவர்களின் ஓட்டுகளை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைக் 23 பேரின் ஓட்டுகளுடன் சேர்த்தால் கனிமொழிக்கு மொத்தம் 32 வாக்குகள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ஒரு வாக்காளர் ஒன்று என்று எழுதியது 7 போல் இருந்ததால் அது நிராகரிக்கப்பட்டது. 31 வாக்குக்கள் பெற்ற கனிமொழி இரண்டாம் தெரிவு அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் தெரிவு வாக்குகளை ஜெயலலிதா கனிமொழிக்கு அளிக்கும் படி தனது கட்சிக்காரர்களை இரகசியமாக வேண்டிக் கொண்டதாகக் கருதப்படுகிறது. தி.மு.காவும் அண்ணா திமுகாவும் அவ்வப்போது ஒரு மூன்றாம் தலைமை தமிழ்நாட்டில் உருவாகாமல் இருக்க அடிக்கடி திரைமறைவில் இணைந்து செயற்படுவதுண்டு.

தனது அப்பாவின் மூன்றாம் தாரத்திற்குப் பிறந்த தனது தங்கை வெற்றி பெற்ற பின்னர் கருணாநிதியின் இரண்டாம் தாரமான தயாளுவின் மகனான ஸ்டாலின் காங்கிரசுக் கட்சியிடம் ஆதரவு வாங்கினோமே தவிர அவர்களுடன் 2014இல் வரவிருக்கும் தேர்தலில் கூட்டு இல்லை என்று அறிவித்தார்.

தனது அப்பாவின் மூன்றாம் தாரத்திற்குப் பிறந்த தனது தங்கை வெற்றி பெற்ற பின்னர் கருணாநிதியின் இரண்டாம் தாரமான தயாளுவின் மகனான ஸ்டாலின் காங்கிரசுக் கட்சியிடம் ஆதரவு வாங்கினோமே தவிர அவர்களுடன் 2014இல் வரவிருக்கும் தேர்தலில் கூட்டு இல்லை என்று அறிவித்தார்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

உங்களுக்கு வரும் இடர்களைச் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்...

Immigration Law Specialists

- Asylum & Immigration
- Bail application (Immigration detention)
- Removals, Deportations
- Judicial Review & emergency Injunction
- Filing of Appeals & Representations
- Visas for spouses & family members
- Joining their relatives in UK

Family Law

- Divorce Proceedings
- Consent Orders
- Custody of children

Civil Litigation

Immigration
Asylum
Family
Civil Litigation

ICS SOLICITORS

ICS Solicitors

28-24 Clements Road, Ilford, Olympic House, 6th Floor London, IG1 1BA

Email: **icsimmigration@gmail.com** Web: **www.icssolicitors.co.uk**

Tel: **020 8478 5478** Fax: **020 8514 7923**

HOTLINE - **07941 881 934 / 07804 042 792**

Community Legal Service

We are authorised and regulated by the Solicitors Regulation Authority

THE LAW SOCIETY ACCREDITED Immigration Law

Is India party to Sri Lanka's refusal of power to the Tamils?

By G Pramod Kumar

The bitter voices against the provincial council election in the North of Sri Lanka, which is home to majority of the country's Tamils, betray yet another treacherous design of the MahindaRajapaksa government to further marginalise Tamils and homogenise the country into a Sinhala Buddhist nation.

These voices, most of which appear to be state-sponsored, are also a ploy to renege on the Rajapaksa government's promise to the world that it would devolve power to Tamils as part of the 13th amendment that it had agreed with India under the 1987 Accord.

> The most outrageous was from his defence-secretary brother and the principal war-triumphalist GotabhayaRajapaksa.

Ironically, the implementation of the 13th amendment has been a promise that President Rajapaksa has been brandishing since 2006, particularly to redeem some respectability for his blood-stained government after the end of the war in 2009. He had promised among others, the UN Secretary General Ban Ki Moon that implementation of the 13th amendment was part of the political solution his government planned.

This claim was repeated several times in several parts of the world, including Delhi.

But, when it comes to actual implementation, Rajapaksa changes colour, which curiously coincides with a sudden upsurge of acrimony, primarily from his own camp and his proxy-reserves. The most outrageous was from his defence-secretary brother and the principal war-triumphalist GotabhayaRajapaksa.

Gotabhaya said the proposed election will pose a security threat to the nation because the Tamil National Alliance (TNA) is likely to win. The TNA is a political party that is considered to be a vestige of the LTTE. So in effect he didn't want a democratic election because a party that he doesn't like will certainly win.

Minister and leader of the National Freedom Front WimalWeerawansa, another hardliner, made an equally bizarre demand – take the police and land powers from the provincial council before holding elections. His reasoning was equally strange – according to him, other provincial councils are run by national parties and they haven't claimed these powers.

Here again, the grouse is against the devolution to an area, which the 1987 Accord clearly mentions as "historical habitation of Tamil speaking people".

And that is not all.

The government also wants the 13th amendment to be diluted by introducing a 19th amendment to the constitution. The secretary to the President LalithWeeratunga said that the 13th Amendment was imposed by India and Sri Lanka accepted it in the "face of an invasion."

He said the country's administrative process had changed and hence there had to be another look at the provincial council system. "President Rajapaksa always gives clear directives to us to close down establishments which do not provide the expected services to the people," he said hinting that there was no place for a provincial council in the government's scheme of things. The majority of Sri Lanka's nationalist political commentators have also aired similar views, which range from an absolutenoto provincial councils in Tamil areas, to advo cating a highly truncated version, which can be puppetered from Colombo.

So, the summary of the story is that Sri Lanka doesn't want to implement its long-held promise of devolution of power to the Tamils or accept the cultural and ethnical identity of the North and the East. They are also worried that the North and the East will decide to merge, a move that will effectively then account for 30 percent of the country.

Since the war-triumph, the government has been trying to force a demographic transition to make the North less Tamil – by settling Sinhalese, acquiring large tracts of land, militarising the area etc. Activists allege that even the exodus of Tamils to countries such as Australia is state-engineered because it is aided by smugglers with support from the government.

The fact is that even the death of about 40,000, a large number of displaced and the fact that many people are continuing to leave the country is not enough to change the demography of the North because it is the homeland of Tamils. That is precisely what the Rajapaksa government and his agents cannot seem to stomach.

The elections to the provincial council also appeared to be a pre-condition to the heads of commonwealth nations agreeing to meet in Colombo in November. Human rights groups across the world had warned them that Sri Lanka would misuse the CHOGM (Commonwealth Heads of Government Meeting) summit to whitewash its war crimes and rights violations.

Despite all his promises and grandstanding, Rajapaksa going back on the 13th amendment and the devolution of power is not surprising because duplicity and subterfuge have been the essential characteristics of his foreign policy. Making promises with a clear objective not to implement them has been his proprietary strategy while mobs, whether in the diplomatic circuit in Geneva or on the streets in Sri Lanka, set out to silence critics.

It's not just Sri Lanka that needs to account for the promises on the 13th Amendment, but also India. India is the architect of the 1987 Accord, which had said the following:

Sri Lanka is a 'multi-ethnic and a multi-lingual plural society" consisting, inter alia, of Sinhalese, Tamils, Muslims (Moors) and Burghers (section 1.2)

Each ethnic group has a distinct cultural and linguistic identity which has to be carefully nurtured (section 1.3),

Northern and the Eastern Provinces have been areas of historical habitation of Sri Lankan Tamil speaking peoples, who have at all times hitherto lived together in this territory with other ethnic groups (section 1.4)

It also said that there will be a referendum to enable the people of the eastern province to decide whether they want to remain linked with the Northern Province or remain separate.

> So, the summary of the story is that Sri Lanka doesn't want to implement its long-held promise of devolution of power to the Tamils or accept the cultural and ethnical identity of the North and the East.

Now the issue is, where does India stand?

What happens to the promises the UPA government has made to the people of India, particularly in Tamil Nadu? In all probability, Sri Lanka will renege on its commitment to India and the rest of the world. What will India do in such a situation?

> Is it a case of Sri Lanka fooling India or both of them together fooling the rest of the world?

All these years, whenever the UPA government came under criticism for non-action in Sri Lanka, it held aloft the 13th Amendment. As late as January 2012, the then foreign minister SM Krishna had said that Sri Lanka had conveyed its commitment to a political settlement based on the full implementation of the 13th Amendment.

Is it a case of Sri Lanka fooling India or both of them together fooling the rest of the world?

Only India's deeds, not words, can answer this critical question.

- Courtesy: First Post

கடன் சுமையால்
கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
Accountancy / Audit
Tax Solutions
Company Formation
Confidential Tax Consultancy
Investigations / Tax Mitigation
Bankruptcy / IVA
Liquidations
Business Startup & Consultancy
Solicitors Rules Audit
Payroll / VAT / Bookkeeping
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Attention NRIs and PIOs

www.hdfc.com

The experts make sure you don't have to look anywhere else.

HDFC'S INDIA HOMES FAIR

The mega Indian homes fair in London. Now, for the 6th year.

Dates: 13th & 14th July, 2013
Time: 10 am to 7 pm

Venue: Hilton London Metropole Hotel, 225 Edgware Road, London W2 1JU. (5 mins walk from Paddington Station)

Nearest Tube Stations: Edgware Road on District, Circle & Hammersmith Line; Paddington on Bakerloo, District, Circle & Hammersmith Line

FREE ENTRY **PARKING AVAILABLE**

• Over 35 leading developers from Bengaluru, Chennai, Coimbatore, Delhi/NCR, Gujarat, Goa, Hyderabad, Jaipur, Kolkata, Kerala, Mumbai, Pune, Punjab and many other cities • More than 30,000 properties from INR 20 lakh onwards

FEE DISCOUNT*
OFFERED ONLY TO REGISTERED VISITORS AT THE VENUE

XPERT ease | XPRESS ELIGIBILITY | XCLUSIVE NRI ASSIST

HDFC HOME LOANS
WITH YOU, RIGHT THROUGH

Call: 020 7872 5536/62 | **e-mail:** ihflondon@hdfc.com | Pre-register on www.hdfc.com/ihflondon2013 to avoid queues.

HDFC Office: 403, 1 Northumberland Avenue, Trafalgar Square, London, WC2N 5BW. Tel: 0044 (0) 20 7872 5536/40. ***Disclosure:** The discounted processing fee (50%) is brought to you by HDFC Ltd., India and can be availed by making home loan application at the HDFC UK branch with requisite credit documents on or before 12th August, 2013, and availing the first disbursement before 31st January, 2014. The discounted processing fee (50%) will be offered to only registered visitors at the venue and will be adjusted towards the Pre-EMI/EMI interest of the loan being availed by the customer under this offer. All loans at the sole discretion of HDFC Ltd. **Disclaimer:** This is merely a convenience for awareness and information about Indian properties for NRIs and PIOs and should not be construed as an inducement or offer or invitation to offer for property and/or loan to buy any property in India by HDFC UK branch and/or HDFC India. Any interest expressed will be processed in India by HDFC India, and will be subject to HDFC India's Internal Credit, Technical and Legal Clearance/s. *Terms & conditions apply.*

NETWORK HDFC670-13

Sri Lanka Govt Shuns Reconciliation With Move To Annul Constitutional Provisions



By J. S. Tissainayagam

The government of Sri Lanka is leaving no stone unturned in an attempt to annul provisions of the country's constitution that are key to implementing post-war reconciliation. By seeking to rescind the 13th amendment, long held by the international community as the starting point for a political solution for the conflict between Sinhalese and Tamils, the Government has clearly demonstrated its cavalier disregard to UN resolutions and international treaties and therefore is an unreliable international actor.

A spokesperson to India's Ministry of Foreign Affairs was candid when he said, "[t]he proposed changes raised doubts about the commitments made by the Sri Lankan government to India and the international community, including the United Nations, on a political settlement in Sri Lanka that would go beyond the 13th Amendment."

The 13th amendment to Sri Lanka's constitution was introduced as an instrument to share power between the Sinhalese and Tamils through devolution to the country's provinces. The amendment flowed from the Indo-Lanka Accord, negotiated and signed as a treaty between the governments of India and Sri Lanka in 1987, in a bid to end the armed struggle between rebels supported by India and the Sri Lanka government.

Devolution to share power between Sinhalese and Tamils was to soon encounter snags. The fundamental reason was that Tamils realised that devolution proposed under the 13th amendment would be hobbled by the very thing it was supposed dismantle – power wielded in Sri Lanka's legislature by Sinhalese members of parliament.

This constraint was due to the unitary character of the Sri Lankan state. This means that the central government, in which the executive presidency and parliament are key institutions, remains constitutionally supreme. Under a unitary system even when power to legislate over subjects of local importance is devolved to subunits such as provinces, parliament can override those powers either by a simple majority or a two-third majority. This contrasts with federal constitutions where powers that the constituting units enjoy are so entrenched that they cannot be tampered with by central governments so simply. Needless to say in the real world constitutions mostly fall in between the unitary-federal continuum.

Despite devolution under the 13th amendment being hobbled by control from the central parliament, most of the Tamil political parties and armed rebel groups accepted the Accord and the brand of power sharing it proposed. Despite backing by Colombo and New Delhi, devolution to the PCs under the 13th amendment, which became law in 1988, was only implemented selectively. For instance, elections to the Northern Provincial Council (NPC) where a majority of Tamils live, was never held. Second, a clause to merge the Eastern PC which has over 60% Tamils and Tamil-speaking Muslims with the NPC to strengthen common demands was temporarily implemented but later struck down by the Supreme Count as unconstitutional.

Following the military defeat of the LTTE in May 2009, devolution of power came back into currency as a practical mechanism of devolving power and thereby promoting reconciliation between the Tamils and Sinhalese. At the same time the international community – especially India and the US – expanded their role in promoting conflict resolution in Sri Lanka.

Citing the provisions of the Accord, the treaty between Sri Lanka and India, New Delhi called for the full implementation of the 13th amendment, which was echoed by the US and other sections of the international community. But buoyed by its military victory and elements of Sinhala nationalist elites, the Sri Lankan government prevaricated. Following three years of intensifying misery for the Tamils due to militarisation, widespread allegations of disappearances, torture and rape, loss of livelihood and parlous conditions of resettled IDPs, the United States moved two resolutions in the UN Human Rights Council. The second resolution, adopted in March this year, "welcomed" provincial elections for the NPC.

Faced with mounting international pressure the government has indicated its intention to hold polls for the NPC this year, although it is yet to be officially announced at the time of writing. However fearing that such elections would strengthen the Tamils in the North the government has on the backs of Sinhala nationalist groups begun to demand dismantling of even the vestiges of devolved governance. It has therefore proposed a 19th amendment to ensure that provincial governance is in name only. The government's group of Sinhala representatives in Parliament is expected to back this bill and pass it with ease.

The Sri Lankan government's move to dilute the 13th amendment only reiterates its indifference to reconciliation. It also shows up very clearly the inadequacies in the strategy of the international community. The international community expects Colombo to respect international laws or conventions – such as UN resolutions and treaties – and that meaningful sharing of power will come from within Sri Lanka under the present political structures.

But that is not forthcoming. The international community should therefore strengthen the Tamils within and outside Sri Lanka and use other diplomatic tools available to it to resolve the Sri Lankan conflict. A delay will only exacerbate Tamil desperation and see a further erosion of international order.

KIDS பேப்பர்

Volcanoes Affect

The eruption of a volcano affects our weather mostly by the big cloud of dust that it sends high up into the air. At first the dust cloud may darken the earth for miles around the volcano. Then the cloud gradually gets thinner as it is mixed up by large winds.

A very large cloud of dust came from the eruption of the volcano El Chicon in southern Mexico in April 1982. This was big enough to be seen in photos taken by our satellites. The cloud rose to a height of about 15 miles. There, a wind stream carried it in a narrow path all the way around the earth. Three weeks later, parts of the cloud could still be seen in photos.

Some effects are certain to have happened somewhere, because a dust cloud reflects sunlight and will cause at least small cooling effect.

சிங்கமும் எலியும்

ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்தது. அதனைக் கண்டு மற்றைய மிருகங்கள் பயத்தால் ஓடி ஒளிந்து கொள்ளும். இத னைப்பார்த்துச்சிங்கத்துக்கர்வம்அதிகம் வந்து விட்டன. தானே இக் காட்டு மன்னன் என்று இறுமாப்புடன் வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் சிங்கம் தூங்கிக் கொண் டிருந்தது. அருகில் பொந்தில் இருந்த சுண்டெலி சிங்கம் என்று தெரியாமல் சிங்கத்தின் மேல் ஏறி விளையாடியது. இதனால் தூக்கம் கலைந்த சிங்கம் கோபத்துடன் எலியைப் பார்த்து முறைத் தது. சுண்டெலி நடுங்கியது. பயந்து கொண்டு மன்னிக்கவும் தெரியாது பிழை செய்துவிட்டேன் என்றுகூறியது. எலியைப் பார்த்த சிங்கத்திற்கு சிரிப்பு வந்தது. மன் னித்தேன். தப்பி ஓடி விடு என்று சிங்கம் சொன்னது. எலிசந்தோஷத்துடன் நன்றி ஐயா என் உயிர் தப்பியது உங்கள் தயை. எனவே எப்போதும் இந்த உதவியை நான் மறக்கமாட்டேன். எப் போதும்உங்களுக்குஉதவமுடியுமானால் நான் உதவுவேன் என்றுகூறிக் கொண்டு ஓடி மறைந்தது. சிங்கம் எலியை ஏளன மாகப் பார்த்து இச்சிறு எலி எனக்கு உதவுகிறேன் என்கின் றது. இதனால் எனக்கு என்ன செய்ய முடியும்? என்று நினைத்தது. சில நாட்கள் கழிந்தன. சிங்கம் உணவு தேடிச் சென்ற பொழுது வேடன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டது.சிங்கம்வலையிலிருந்துவெளி வர முடியாமல் கோபத்தில் கர்ஜித்தது. காடே அதிர்ந்தது. பொந்திலிருந்த எலிக்கு இந்தச் சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தது. சிங்கம் வலைக்குள் இருந்த தைக் கண்டு கொண்டது. தனக்கு உதவிய சிங்கம் என்று எண்ணிக் கொண்டு ஓடி வந்து வலையைத் தனது கூரிய பற்களால் வெட்டி வெட்டி வலை யை அறுத்துவிட்டது. சிங்கம் வெளியில் வந்து எலிக்கு நன்றி கூறியது. தனது கர்வத்தை அடக்கிக் கொண்டு எலி யுடன் கைகோர்த்து சிங்கம்.

'நன்மை செய்தவர்களை மறக்கக் கூடாது. நன்மை செய்யாது தீமை செய்த வர்களையும் உடனே மறந்து விடவும்'

Colouring - 197



Word Search

B	P	O	E	M	A	V	D	O	Z
I	A	A	M	W	B	A	M	X	O
A	N	A	U	M	H	D	A	C	H
D	I	S	R	V	A	A	K	Z	M
A	Y	D	U	J	G	I	A	N	A
K	A	J	K	E	C	S	H	Y	S
U	R	Q	K	R	V	X	T	R	A
L	A	I	U	X	V	L	O	L	Y
O	M	I	Y	L	X	C	M	O	A
K	N	H	I	A	T	Z	O	F	P

Words: MURUKKU, PANIYARAM, VADAI, MOTHAKAM, KOLUKADAI, PAYASAM

படித்ததில் பிடித்தவை

நீ யாரையாவது ஏமாற்றிவிட்டால் அவர்கள் ஏமாந்து விட்டதாக அர்த்தம் இல்லை. உன்னை அளவுக்கு அதிகமாக நம்பியிருக் கிறார்கள் என்று அர்த்தம்.

விட்டுக் கொடுங்கள் - விருப்பங்கள் நிறை வேறும். தட்டிக் கொடுங்கள் - தவறுகள் குறையும். மனம் விட்டுப் பேசுங்கள் - அன்பு பெருகும்.

1618 மொழிகள், 30 மாநிலங்கள், 6400 சாதிகள், 6 இனங்கள், 6 மதங்கள், 29 பெரிய பண்டிகைகள் ஒரு நாடு இந்தியா

உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளை விடச் சிறந்தது.

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளி களும்உப்பாகஇருக்கலாம்.ஆனால்,அவை தான் வாழ்வை இனிமையாக மாற்றும்.

Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

Visit our Web: www.facebook.com/ orupaper



Issue 196 Winner
Mr. Jeyathas

The Two Goats

Over a river there was a very narrow bridge. One day a goat was crossing this bridge. Just at the middle of the bridge he met another goat. There was no room for them to pass. Two Goats "Go back," said one goat to the other, "there is no room for both of us".

"Why should I go back?", said the other goat. "Why should not you go back?"

" You must go back", said the first goat, "because I am stronger than you."

"You are not stronger than I", said the second goat.

"We will see about that", said the first goat, and he put down his horns to fight.

"Stop!", said the second goat. " If we fight, we shall both fall into the river and be drowned. Instead I have a plan- I shall lie down, and you may walk over me."

Then the wise goat lay down on the bridge, and the other goat walked lightly over him. So they passed each other, and went on their ways.

If you liked this story, please let other people know

Vigaashan

Jacintha, 5 Yrs

Rehasan Asokan

M.Santhosh, 9 Yrs

M.Saraniya, 7 Yrs

Mazneen, Age 9

Mary, 8 Yrs

T.Lakshivinee

M. Sarangan

M. Sharuka, Age 6

Roshini



Ramya Sutharsan

Nilani Sutharshan

Bharathwaj (5Yrs)

T.Ashwinie

GOLD FACTORY
LONDON

Opening Soon HIGH WYCOMBE, SOUTHAMPTON & SOUTHALL



வாடிக்கையாளர்களுக்கு எங்கள் வணக்கங்கள்...

நாங்கள் தற்போது எங்கள் நிறுவனத்தை SLOUGH க்கு மாற்றம் செய்துள்ளோம் என்பதுடன் SOUTHHALL இல் மிகப் பிரமாண்ணமாய் திறக்கவுள்ளோம் என்பதையும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

Gold Factory என்ற எம் நிறுவனம் வாடிக்கையாளர்களான உங்களது ஆதரவாலும் ஒத்துழைப்பாலுமே மிகச்சிறந்த ஓர் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுகின்றோம்.

உங்களுக்குத் தேவையான நகைகளை நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

GOLD LOANS are also now offered for business at the best interest rates. **1.5%** per month if you borrow **£50,000.**

Second-hand Jewellery is also available from **£27** per gram and if we don't have what you are looking for, we will secure it from our network across the UK.

GOLD LOANS online | SONALOANS | AsianGold LOANS

நீங்கள் தெலைபேசியில் அழைக்கும் தூரத்திலேயே நாங்கள் இருக்கிறோம். மேலதிக விபரங்களுக்குத் உடன் அழையுங்கள்.....

Call Bobby (owner) now:

020 8813 8979 or

01753 536 800

Free phone – **08000 337 489**

Email : Sales@goldfactory.co.uk

Web : www.goldfactory.co.uk

Now Buying
DIAMOND JEWELLERY

Certified Diamonds & Birthstones supplied
IN HOUSE Gemmologist

Investors Required
We offer a minimum return per month.
Earn £1000's

Contact us:-
sales@goldfactory.co.uk

REPAIRS & ENGRAVINGS

GOLD BARS

BEST PRICES

உத்தரவாதம்
Highest Gold Prices Paid

மிகக் குறைந்த வட்டியில்
Example: Monthly interest rates on

£50,000 Gold Loan

Albemarle & Bond - **£1495** p/m
H&T Pawnbrokers - **£2000** p/m
GOLD FACTORY - **£750** p/m

AGENT REQUIRD

Huge Selection of Engagement & Wedding Rings

Register online today 100's of discounted items

facebook | twitter

£100 VOUCHER

Borrow **£ 2000** for one Month
– No Interest Charge
£ 100 OFF ANY DIAMOND JEWELLERY from **£ 400**
£ 100 OFF ANY GOLD JEWELLERY ORDER WORTH **£ 700**

Expires 01/09/13 Voucher only valid for one Customer

Extended & Improved

LycaFly
Travel the world for less

£40*

LYCAMOBILE TOP-UP FOR YOUR SriLankan Airlines TICKETS

PLUS

LYCAMONEY PREPAID DEBIT CARD
ABSOLUTELY FREE

SriLankan Airlines

SRI LANKAN AIRLINES
COLOMBO

from
£573
including taxes

Direct flights from
Heathrow
30kg Baggage

*Offer valid until 31st July 13. Minimum two Sri Lankan Airlines, adult return tickets to be purchased together. £40 will be given as £20 Lycamobile top-up per person limited to maximum of two top-ups booking.

WORLDWIDE HOLIDAYS

Next time you book your flights to Colombo why not…

Extend your holiday to
Singapore ★★★★
from **£165** pp ~~£175~~
2 nights, twin sharing
Inclusive breakfast
Excludes flights & transfers

Extend your holiday to
Kuala Lumpur ★★★★
from **£63** pp ~~£73~~
2 nights, twin sharing
Inclusive breakfast
Excludes flights & transfers

WORLDWIDE HOLIDAYS AND TOURS



Package tour
Sri Lanka Tour
from **£435** pp ~~£450~~
6 days, twin sharing
Incl breakfast, transfers & tour. Excludes flights

Accommodation
Dubai ★★★★
from **£56** pp ~~£66~~
3 nights, twin sharing
Inclusive breakfast
Excludes flights & transfers

To book your holidays, please call **Sheetal** on **020 7536 6450** Ext **7309**

Flights to INDIA / FAR EAST		Including Taxes
CHENNAI	from	£440
MUMBAI	from	£438
DELHI	from	£461
BANGKOK	from	£505
DUBAI	DIRECT from	£275

Flights to US/CANADA		Including Taxes
NEW YORK	DIRECT from	£449
TORONTO	DIRECT from	£465
MIAMI	from	£477
BOSTON	DIRECT from	£470
ORLANDO	DIRECT from	£468

Flights to AUSTRALIA/NZ		Including Taxes
BRISBANE	from	£721
PERTH	from	£686
AUCKLAND	from	£786

020 7536 6575
Lycafly.com

14 Ealing Road
Wembley HA0 4TL
United Kingdom

*£20 Lycamobile credit is not exchangeable, transferrable or redeemable for cash or other credit. For full terms and conditions and eligibility, please visit Lycafly.com or call us on 020 7536 6575. Fares subject to availability and conditions apply.

IATA

ATOL 9624 PROTECTED

உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!

- ✓ 25 க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிச் சேவைகளை ஒரேதளத்தில்
- ✓ 7 நாட்களுக்குரிய பதிவினை அனைத்துச் சேவைகளிலும் பதிவு செய்து கொள்ளத்தக்க வசதியானது
- ✓ சட்டைடல்டிகளைப் பொருத்த தேவை இல்லை
- ✓ Broadcast Quality Picture

LIMITED OFFER

ஒரு வருட சந்தா

£149

Aarti TV Movies

Over 500 Tamil Movies Available Instantly!

- ✓ New movies added every week
- ✓ Movies are available 15 days after theatre release
- ✓ Movies are available before the DVD release
- ✓ Digital DVD quality broadcast
- ✓ Watch movies without adverts or breaks

Aarti TV சந்தா செலுத்துவது மிகச் சுலபம்!

வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

0203 318 2004 / 0203 514 2436

0759 105 8813 / 0742 481 2089

WWW.AARTITV.TV

100% LEGAL

15 Days Money Back GUARANTEE

அடுத்த கட்டம் என்ன ?

தேவை மதியுரைஞர்களின் ஒருங்கிணைந்த சேவை
Need of Integrated Advocates for Tamil Affairs (IATA)

சாணக்கியன்

எதை எவன் முடிப்பான் என்று அறிந்து அதை அவன் பால் விடல் சரியான தலைமைத்துவப் பண்பு என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவன் தந்த உலகம் பொது மறை திருக்குறளின் கூற்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிகக்குறைந்த வளங்களை வைத்துக் கொண்டு மிகப்பெரிய வெற்றிகளை ஈட்டியதற்கு மூலகாரணம் இதன் பால் அமைந்த எமது தேசியத் தலைவரும், அவரது பண்பும் தான்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் அவ்வமைப்பு முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் சரியானவையா? அல்லது வெறும் ஏட்டிக்குப் போட்டியான நிகழ்வுகளா? என்பது விமர்சனத்துக்குள்ளாகிறது.

நெருக்கடியான காலகட்டங்களில் கலங்கரை விளக்காக நின்று உறுதியுடன் வழிகாட்டக் கூடிய வர்களையே மக்கள் நம்புகிறார்கள். அவர்கள் வைக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கையின் அளவைப் பொறுத்தே விடுதலை நோக்கிய போராட்டத்தின் அடுத்த கட்ட அசைவும் நிகழ்கிறது.

இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழினம் இராணுவ ரீதியாக அடக்கப்படும் ஜனநாயக ரீதியாக முடக்கப்பட்டு இருக்கும் வேளையில் அவர்களுக்காக குரல் கொடுக்கும் புலம்பெயர் தமிழர் சக்தி தனது போராட்டத்தை சரியான திசையில் நகர்த்திச் செல்கிறதா? நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், உலகத்தமிழர் பேரவை, அனைத்துலக மக்களவை என்றும் முப்பெரும் வடிவங்களில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங் களுக்கு ஆலோசனை வழங்குபவர்கள் யார்? இவற்றில் உள்ள சரி, பிழைகளை காய்த்தல், உவத்தல் இன்றி ஆராய்ந்து எல்லோருக்கும் பொதுவான முறையில் ஆலோசனை வழங்கக் கூடிய ஒருங்கிணைந்த மதியுரைஞர் குழாம் ஒன்று எம்மிடம் உண்டா?

சமீபகாலமாக அவதானித்த ஒரு சில நிகழ் வுகளை மேற்கோள் காட்டி, எமது இனத்தின் நீண்டக கால நலன் நோக்கி எமக்காக போரா டும் எல்லா பிரதான அமைப்புகளும் ஏற்றுக் கொண்ட திறனாளர்களை ஒருங்கிணைத்த சுயாதீனமான மதியுரைஞர் குழாம் ஒன்று உட னடியாக உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையை உங்கள் முன் வைக்கிறேன்.

முதலாவது விடயம் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதால் போர்க் குற்ற விசாரணைகளுக்கு ஏற்படும் பின்னடை வையும் அதுவே மகிந்த அரசாங்கத்தின் ஆட் சியை பலப்படுத்தி நீடிப்பதற்கு காரணமா யுள்ளது பற்றியது. பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதை தவிர்த்து இடம் மாறும் இலங்கையில் மாநாட்டை புறக்கணிக் குமாறும் முன் எடுக்கப்பட்ட எமது போராட்டங் கள் பொதுநலவாயத்தின் விதிகள், அக்கூட்ட மைப்பில் உள்ள பெரும்பாலான நாடுகளின் அரச தலைவர்களின் நிலைப்பாடு பற்றிய தெளிவின்மையால் பெரிதாக வெற்றியளிக்க வில்லை.

மாறாக இலங்கையை தற்காலிகமாகவேனும் பொதுநலவாயத்திலிருந்து விலத்தி வைப்பதற் கான வலுவான காரணங்கள் இருந்தும் எமது போராட்ட அமைப்புக்கள் அதை முதன்மைப் படுத்திசெயற்திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

அதற்குரிய ஆலோசனைகள் வழங் கப்பட்டு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டிருந்தால் அதுவே, இலங்கையி லிருந்து மாநாடு மாற்றப்படுவதற்கும், மற்றைய நாடுகள் இலங்கையை பகிஷ்கரிப்பதற்கும் காரணமாயிருக்கும்.

அத்துடன் பிரித்தானிய பிரதமர் இலங்கை விஜயம் குறித்து முடிவு எடுப்பதற்கு முன்னர் பொதுநலவாயத்திற்கு பொறுப்பான மந்திரி இலங்கை சென்று நிலைமைகளை அவதானித் தார். ஆனால், அவரை இங்கு பிரித்தானிய தமி ழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அமைப் பும் நேரில் சந்தித்து எமது மக்களின் நிலைப் பாட்டை எடுத்து விளக்கவில்லை. முடிவு எடுக் கப்பட்ட பின்னர் பிரித்தானிய தமிழர் பேரவை அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கள் சகிதம் அவரை சந்தித்து தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தமை வெறும் எதிர்வினையாக வும், காலம் பிந்திய செயற்பாடாகவுமே அமைந் தது. பாராளுமன்றத்தில் கூட இது குறித்து இன் னமும் ஒரு காத்திரமான விவாத ஒழுங்கு செய் யப்படவில்லை. போராட்டங்களின் மைய சக்தி யாக விளங்கும் பிரித்தானிய தமிழர் பேரவை இது குறித்து கவனத்தில் எடுக்கும் என நம்புவோம்.

இரண்டாவது நாடு கடந்த அரசாங்கத்தின் சுதந்திர சாசனம். தமிழ் மக்கள் ஜனநாய கத்தை அடிப்படையாக கொண்ட தேச விடுத லையில் அர்ப்பணிப்புடன் உள்ளனனர் என் பதை சர்வதேசத்துக்கு நிரூபிக்க நாடுகடந்த அரசாங்கம் எனும் பரீட்சார்த்த அமைப்பை குழு மோதல்களையும் கடந்து வெற்றிபெற செய்வது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். அதேசமயம் அவ்வமைப்பு தவறான முடிவு களை தவறான நேரங்களில் எடுக்கும்போது அதை காய்தல் உவத்தல் இன்றி தட்டிக் கேட்கும் எமக்கும் தவறுகளை திருத்திக்கொள்ள அவ் வமைப்புக்கும் கடப்பாடு உண்டு.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் ஒவ்வொரு ஆண்டின் நிறை விலும் அவ்வமைப்பு முன்னெடுக்கும் செயற் திட்டங்கள் சரியானவையா? அல்லது வெறும் ஏட்டிக்குப் போட்டியான நிகழ்வுகளா? என்பது விமர்சனத்துக்குள்ளாகிறது.

உதாரணமாக கடந்த ஆண்டு நாடு கடந்த அரசாங்கம் அறிவித்த தாயகம் நோக்கிய வானொலி சேவைக்கு என்ன நடந்தது? என் பதை மீள்பரிசீலனை செய்யவேண்டும். இந்த வருடம் அவசர அவசரமாக அறிவித்த சுதந்திர சாசனம் இன்றைய காலத்திற்குப் பொருத்த மானதா? என்பது கேள்விக்குறி.

ஸ்ரீலங்கா மீதான காலக்கெடு முடிந்துகொண் டிருக்கும் வேளையில் சர்வதேச விசார ணைக்கான காலம் கனிந்துள்ளபோது, பொது நலவாய மாநாடா? மாகாணசபை தேர்தலா? ஜனாதிபதிதேர்தலா? என இலங்கை தடுமாறும் தருணத்தில் சரியான அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு இனப்படுகொலையை நிரூபிக் கும் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு அதன்பின்னர் எல்லா அமைப்புக்களும் இணைத்து செய்ய வேண்டிய சுதந்திர சாசனத்தை இப்போ அரை குறையாக செய்து சிங்களத்தின் தற்போதைய தாயக மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு தடி எடுத்துகொடுப்பதுபோல் செயற்படுவதுதவிர்க் கப்படவேண்டும்.

மேற்கூறிய காரணங்களால், எமது அமைப் புக்களுக்கு ஆலோசனை கூறவும், மக்களுக்கு உறுதியான வழியை காட்டவும் சுயாதீனமான, பக்கசார்பற்ற திறனாளர்களை உள்ளடக்கிய மதியுரைஞர் குழாம் ஒன்று உடனடியாக அமைக்கப்படவேண்டும். இவ்வமைப்பு பிரித் தானியாவிலுள்ள Chatham House போல் தனக் கென கட்டுப்பாடான விதிகளை கொண்டதாக வும், அனுபவம் வாய்ந்த உயர் திறனாளர் களை ஒருங்கிணைந்ததாகவும், சாதாரண மக்கள் மற்று விமர்சகர்களது கருத்துக்களை உள் வாங்குவதாகவும் இருக்க வேண்டும்.

ஈழத்தின் இன்றைய தலைமுறையினர் விஞ் ஞானிகளாகவும், சர்வதேச நிபுணர்களாகவும் வளர்ந்துவரும் இவ்வேளையில் இவ்வமைப் பின் வழிகாட்டல் ஒரு நீண்டகால தொடர்ச்சி யானதும், உறுதியானதுமான செயற்பாடுக ளுக்கு வித்திடுவதுடன் வேற்றுமையில் ஒற் றுமை காணும் ஒருங்கிணைந்த தளத்தையும் அனைவரும் பங்காற்றும் போராட்ட களத் தையும் திறக்கும் எதிர்காலத்தில் எமது சந்த தியை மேம்படுத்தும் ஒரு பல்துறை ஆராய்ச்சி கூடத்தைக் கூட இதன்மூலம் புலம்பெயர் மண் ணில் நிறுவ முடியும்.

ஆகவே, இதுகுறித்து முப்பெரும் அமைப்புக் களில் இருப்பவர்களும் சுயநலத்தை விட்டு கூடி ஆராயவேண்டும் என்பது எமது அவா ! உங்கள் முயற்சிகள் வெற்றி பெறின் எமது மண்ணின் விடுதலைக்காக உயிர்நீத்த அத்தனை மாவீரர் களின் ஆத்மாக்களும், எமது மண்ணில் இன் றும் உயிர் வதைப்படும் அத்தனை சீவன்க ளும் உங்களை வாழ்த்தும்.

இரட்டைவேடம் போடும் பொதுநலவாயத்தின் முகமூடியை கிழிக்க இக் கறுப்பு யூலையை சரியாக பயன்படுத்துவோமா? பொதுநலவாயத்தை எல்லா வழிகளிலும் முற்றுகையிட்டு எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

இறுதியாக இது யூலை மாதம் 83 இனப்படு கொலையின் 30ஆவது நினைவாண்டு. நாம் மீண்டும் வீதிகளில் இறங்கி, பாரிய பிரச்சாரங் களை செய்ய வேண்டிய தருணமும் மாறும் களநிலைமைகளை கற்று இலங்கையை பொது நலவாயத்திலிருந்து தற்காலிகமாகவேனும் விலத்திவைக்க உச்ச அழுத்தம் கொடுக்க வேண்டிய காலமும் இதுதான்.

சனல் 4இன் செய்திகளும் Terminal 4 போராட்டங்களும் தான் வரலாற்றை மீண்டும் எப்பக்கம் திசை திரும்பியது ICC துடுப்பாட்ட புறக்கணிப்பு நல்லதோர் அனைத்துலக பிரச் சாரமாகியது. மக்களோடு மக்களாக போராடும் மூன்றாவது சக்தியான தமிழர் ஒருங் கிணைப்பு குழுக்களும் அவை சார்ந்த உலக ளாவிய மக்களவைகளும் அவர்களது செயற் பாடுகளுக்காக போற்றப்படவேண்டியவை அதே நேரம் வாழும் நாட்டின் சட்ட திட்டங்களை மீறா மல் தவறான வன்முறை மூலம் சாதாரண சிங்கள மக்களை பேரினவாதிகளாக மாற்றிவிடாமல் கட்டுக்கோப்புடன் செயற்படவேண்டும்.

இரட்டைவேடம் போடும் பொதுநலவாயத் தின் முகமூடியை கிழிக்க இக் கறுப்பு யூலையை சரியாக பயன்படுத்துவோமா? பொதுநலவா யத்தை எல்லா வழிகளிலும் முற்றுகையிட்டு எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..
Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring
Maths & English Teaching for 4-16 years olds
FREE Assessment
We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics

LEARNA
because every child is unique
Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட ஆயுதப்போராட்டமும் கறுப்பு ஜூலையும்

பாகம் 136

சரித்திரத்தின் போக்கில் இலங்கைத் தமிழரின் அரசியல் வாழ்வு பல்வேறு ஏற்ற இறக்கங்களுடனேயே போய்க் கொண்டிருக்கின்றது. தமிழர் பிரதேச சங்களுக்கென தனியான நிர்வாக அலகுகள் தருவதாக ஒத்துக்கொள்ளப்பட்ட சமஷ்டியமைப்பை மையப் படுத்திய பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் தொடங்கி இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட 13ம் திருத்தச்சட்டம் வரை எல்லா வற்றிலும் சிங்கள அரசுகளின் ஏமாற்றுத்தனங் களுக்கு முகம்கொடுத்த நீண்டகால வரலாறு எமக்குண்டு. 1957 இல் பண்டா செல்வா ஒப் பந்தம் கிழித்தெறியப்பட்டது. பின்னர் 1965 இல் ஏற்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தத்தின்மூலம் உரு வாக்கப்பட்ட மாவட்ட சபைகள் சட்டமூலத் திற்கான வெள்ளையறிக்கை 1968 இல் கிழித் தெறியப்பட்டது. இந்த ஏமாற்றத்தினால் அப் போது தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக விருந்து டட்லி அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த ராணி அப்புக்காத்துதிருச் செல்வம் அவர்கள் பதவியை ராஜனாமாச் செய்தார். இந்த இரண்டு வரலாற்று நிகழ்வுகளி லும் நாம் பிரதேச சபைகளிலிருந்து மாவட்ட சபைகளுக்கு இறங்கி வந்தோம். அப்படி இறங்கி வந்தும்கூட சிங்கள ஆளும்வர்க்கம் எங்களது உரிமைகளை அறவே மதிக்கவில்லை.

சீனா இலங்கையுடன் செய்யும் வர்த்தகத்தைப்போல பல மடங்கு வர்த்தகத்தை இந்தியாவுடன் செய்துகொண்டிருக்கினறது

ஓர் தாயகப் பிரதேசத்தில் மொழிவாரி மாநில மொன்றில் நாம் வாழ்ந்திருந்தும் அந்தப் பிர தேசத்தின் உள்ளூர் ஆட்சியுரிமையைத் தர மறுத்து தங்களின் ஆழுகையின் கீழேயே தமிழ்ப்பிரதேச மக்கள் நிரந்தர அடிமைகளாக வாழவேண்டுமென்று பெரும்பான்மையினர் நினைத்ததோடல்லாமல் ஜனநாயகரீதியில் தமி ழர்கள் ஆரம்பித்த போராட்டங்களையும் வன் முறைகொண்டு அடக்கினார்கள். சிங்களம் மட்டும் சட்டத்திற்கெதிராக தமிழர் பிரதிநிதி கள் 1956 இல் நடத்திய சத்தியாக்கிரகப் போராட் டத்திற்கெதிராக அப்போதைய பண்டாரநாயக்கா அரசின் ஆதரவுடன் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1958 இல் பெரும்பான்மையினரின் இனவன்முறை தமி ழர்களுக்கெதிராக முடுக்கிவிடப்பட்டது.

மாவட்ட சபைகளும் தரப்படாமல் ஏமாற்றப் பட்ட பிறகு ஜேஆர் அரசாங்கத்தின் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அதைத் தலைமை தாங்க மாட்ட அமைச்சர்கள் என்கின்றவோர் போலி நாடகம் அரங்கேறியது. எந்தவித அரசியல் நிர்வாக உரிமைகளும் கொடுக்கப் படாத அந்தச் சபைகளுக்கும் தமிழ்த் தேசிய வாதிகள் தமது ஒத்துழைப்பைக் கொடுத்தார் கள். பலர் அந்த அபிவிருத்திச் சபையில் அங் கத்துவம் பெறத் தேர்தலிலும் பங்கு பற்றினார்கள். உப்புச் சப்பற்ற அந்தச் சபைகள் செத்தே போய்விட்டன. அந்த ஒத்துழைப்புக்கெல்லாம் தக்க பதில் தமிழர்களுக்குக் கிடைத்தது. 1985இல் கிடைத்த அந்தப் பதில்தான் நாம் தற் போது அனுஷ்டிக்க விருக்கும் கறுப்பு ஜூலை. அந்தக் கொடிய இனவன்முறை தமிழர் மனதில் நீங்காத இடம் பெற்றுவிட்டது.

பாண்டவர்கள் தங்கள் அரசைத் தோற்றுப் பதினாறு ஆண்டுகள் முடிவடைந்தபின் துரி யோதனனிடம் தங்களுக்கு நாடு எதுவும் வேண் டாம் ஐந்து ஊர்களைத் தா அல்லது அதையும் தரமுடியவில்லையாயின் வாழ ஐந்து வீடுகளை யாவது தா என்று கண்ணனைத் தூதுவிட்ட போது கௌரவர்கள் அவர்களது அந்த மிகக் குறைந்த உரிமையைக்கூடத் தரமறுத்தனராம். நாங்களும் மாவட்ட சபைகளை ஏற்றுக் கொண்டு சமாதானமாகப் போகிறோமென்று எவ்வளவோ தாழ்ந்து போனோம், பின்னர் மாவட்ட அபிவிருத்திச் சபையையாவது தாருங் கள் நாங்கள் எங்கள் அபிவிருத்தியைப் பார்த் துக் கொள்கிறோமென்று மேலும் கீழிறங்கி னோம் எங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படவு மில்லை உரிமைகள் மதிக்கப்படவுமில்லை. எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுத வழிப் போராட்டமாக வடிவெடுத்ததற்கான காரணங்களின் இன்னொரு பக்கம் இப்படித் தான் இருக்கிறது. அதன் மறுபக்கம் சிறீமா வோ பண்டாரநாயக்காவின் காலத்தில் உரு வாக்கப்பட்டது.

கல்வியமைச்சர் பதியுதீன் மகமூதினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையின் கீழான பல்கலைக்கழக அனுமதி, கல்விச் சமூக மான யாழ்ப்பாணத்தின் இளைய தலை முறையை நீதி நியாயமற்ற முறையில் பாதித் ததும், எமது அறவழிப் போராட்டங்கள் வன் முறைகொண்டு அடக்கப்பட்டதும். சமாதானத் திற்காக நாம் எவ்வளவோ விட்டுக் கொடுத்துப் பணிந்து போயும் எந்த வகையிலும் இலங்கை யின் ஒற்றையாட்சியமைப்பு தமிழரின் பிரதேச உரிமைகளை விட்டுத்தர இடமளிக்காததும், உரிமைகளைக்கேட்ட போதெல்லாம் அரசியல் வாதிகள் அப்பாவிகள் என்று பாராது அனைவர் மீதும் வன்முறை பிரயோகிக்கப்பட்டதும்தான் ஆயுத வன்முறையில் தமிழ் இளைஞர்கள் இறங்க முக்கிய காரணங்களாகும். யாரும் வீம்புக்காக ஆயுதம் தூக்கவில்லை.

ஆக, ஆடிக்கலவரத்தைத் தமிழர்களே தோற்றுவித்தார்கள். அதன் விளைவாகத்தான் யுத்தமென்றால் யுத்தம் சமாதானமென்றால் சமாதானமென்ற ஜேஆரின் எழுச்சியுரையுடன் சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கினார்க ளென்று பேரினவாத அரசியல் விமர்சகர்கள் முன்வைக்கும் வாதம் ஒருதலைப்பட்சமானது. அவர்கள்முழுப்பூசனிக்காயைச்சோற்றில்மறைக்க முயல்கிறார்களென்பது வெளிப்படை.

மேற்சொன்ன அவ்வளவு ஏமாற்றங்களுக் கும் உட்பட்டுப் போய் ஓர் ஆயுத எழுச்சியை உருவாக்கி அதில் தோல்விகண்டு துவண்டு நிற்கிறது தமிழ்ச்சமூகம். தமிழர் மத்தியில் உருவான ஆயுத வன்முறை சார்ந்த அரசியல் எழுச்சியின் பெறுபேறாக அண்டைநாடான இந்தியாவின் தலையீட்டினால் உருவாக்கப் பட்டதுதான் 13வது அரசியல் திருத்தச் சட்டம். தற்போது ஆளும் வர்க்கம் அதையும் கிள்ளிப் பார்க்க முயல்கிறது. இத்தனைக்கும் அந்தத் திருத்தச் சட்டமும் தமிழர்களுக்கு எவ்வித ஆட்சியதிகாரப் பங்களிப்பையும் வழங்கி விடவில்லை. நாமோ விடுதலைபெற்ற நாடொன் றைப்பெற முப்படைகளும் கொண்டவோர் சக்தி யாகத் திரண்டெழுந்து அடக்கியொடுக் கப்பட்டு, தற்போது உப்புச்சப்பற்ற 13ம் திருத்தச் சட்டத்தையாவது நடைமுறைக்குக் கொண்டுவர உதவுங்களென்று இந்தியாவை யும் உலகத்தையும் கெஞ்சிக்கொண்டிருக் கிறோம். மொத்தத்தில் பிச்சை வேண்டாம் நாயைப்பிடியென்கின்ற நிலைக்கு நாம் தள்ளப் பட்டிருக்கிறோம். அது வேறு விடயம்.

ஆனால், பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வாவா ஒப்பந்தம் போன்றவற்றைக் கிழித் தெறிந்த பெரும்பான்மையினத்தின் கரங்கள் ராஜீவ்ஜேஆர் ஒப்பந்தத்தையும் கிழித்துவிடலா மெனக் கனவு காண்கின்றன. அது எந்த அள வுக்குச் சாத்தியமென்பது தெரியவில்லை. அப்

அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

படிக் கிழித்துப் போட்டால் இலங்கையின் அரசியற் தலைமை எத்தகைய அரசியல் ராஜ தந்திரச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுமென்பதையிட்டு அதைக் கிழிக்க முயல்வோர் சிந்திப்பதாகத் தெரிய வில்லை. அது எளிதான செயல் அல்ல. இலங் கையின் சிறுபான்மைத் தமிழரை ஏமாற்றியது போல இந்தியாஎன்னும்பெருநிலப்பரப்பில்வாழும் மக்களை அவமதிப்பதுஎன்பதுசிறியவிடயமல்ல.

சீனாவிலிருந்து ஒருயுத்தக்கப்பல் நங்கூரமிடு வதையோ, பாகிஸ்தானிலிருந்து ஒரு ராணுவ அதிகாரி கொழும்புக்கு விஜயம் செய்வதையோ நமது மீடியாக்கள் அறிவிக்கும்போது அதை வாசிப்பவர்கள் அதனைப் பெரிதுபடுத்தி, ஏதோ இலங்கை அரசியல் ராஜதந்திர ரீதியில் பெரிய வெற்றிகளைப் பெற்று இந்தியாவை மிஞ்சிப் போய்க்கொண்டிருக்கிறது, தமிழர்களின் எதிர் காலம் இனிக் கேள்விக்குறிதான். எமது தாயகம் அழிந்துவிடும் என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட வேண்டிய அவசியமில்லை. ஒரு கற் பனையில் அப்படித் தப்புக்கணக்குப் போட் டாலும் நிஜத்தில் நடப்பவை நடக்கப் போகின்ற வையெல்லாம் நாம் நினைப்பதுபோல் இருக் கப் போவதில்லை.

இந்தியா என்னும் பெரிய அரசியற் சக்திக்கு உட்பட்டதுதான் இலங்கை. அந்தச் சக்தியை மீறி இலங்கை செயற்பட முடியாது. சீனா இலங்கை யுடன் செய்யும் வர்த்தகத்தைப்போல பல மடங்கு வர்த்தகத்தை இந்தியாவுடன் செய்து கொண்டிருக்கினறது. பாகிஸ்தானும் அப்படித் தான். அந்த நாடு இந்தியாவின் பகைநாடாக இருந்தாலும் இந்தியாவுக்கு எதிராக இலங் கையுடன் நட்புப் பூண்டு பெரிய நலன்களைப் பெற முயற்சிக்கப் போவதில்லை. அப்படிப் பெரிய நலன்கள் காணப்படவுமில்லை. எல்லா நாடுகளுக்கிடையிலும்நடைபெறும்வியாபாரப் போட்டிகளைப் போலத்தான் வங்காளவிரி குடாவிலும் நடக்கிறது.

தெரிந்தோ தெரியாமலோ இலங்கை இந்தியா வென்னும் பிராந்திய சக்தியின் ஆளுகைப் பரப்பினுக்குட்பட்டுத்தான் இருக்கிறது. இந்தி யாவின் அந்தப் பிடியிலிருந்து இலங்கையால் தப்பமுடியாது. எவ்வளவுதான் போக்குக்காட்டி னாலும் ஒரு எல்லைக்குமேல் இலங்கையின் சக்தி இந்தியாவை மீறிப் போகப் போவ தில்லை. கிட்டத்தட்ட இருபத்திரண்டுமைல்களுக் கப்பால் உள்ள இலங்கையின் இராணுவக் கேந் திர நிலைகள் எல்லாமே இந்தியாவை அண் மித்திருப்பதால் அதற்கு அச் சுறுத்தலான எவ் வித நடவடிக்கைகளையும் இலங்கையால் எடுக்கமுடியாது. அதற்கு வேறு எந்தநாடும் துணைபோகவும் முடியாது.

தெரிந்தோ தெரியாமலோ இலங்கை இந்தியா வென்னும் பிராந்திய சக்தியின் ஆளுகைப் பரப்பினுக்குட்பட்டுத்தான் இருக்கிறது. இந்தியாவின் அந்தப் பிடியிலிருந்து இலங்கையால் தப்பமுடியாது

அமெரிக்காவின் அண்மையிலிருப்பதால் கியூபாவுக்கு எவ்வாறு சோவியத் யூனியனின் இராணுவத்தளத்தை நிறுவமுடியாமற்போனதோ அதேபோலத்தான் இந்தியாவுக்கு மிக அருகி லுள்ள நாடான இலங்கையில் சீனாதளம் அமைப்பதென்பது நடக்கவே போவதில்லை. இலங்கைக்கு இந்தியாவைப் பகைத்துக் கொண்டுதான் அதனுடன்செய்துகொண்டராஜீவ் ஜே.ஆர் ஒப்பந்தத்தைக் கிழித்தெறியும் நெஞ் சுரம் வரப்போவதில்லை.

நாம் பிரதேச சபைகளிலிருந்து மாவட்ட சபைகளுக்கு இற ங்கி வந்தோம். அப்படி இறங்கி வந்தும்கூட சிங்கள ஆளும்வர்க்கம் எங்களது உரிமைகளை அறவே மதிக்கவில்லை

இதுவரை காலமும் தமிழர்கள் ஆளும் சிங்களவர்க்கத்தினால் ஏமாற்றப்பட்டது உண்மை யேயாயினும் இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட 13ம் சட்டத்திருத்தத்தில் மாற்றங்களையுருவாக்கி அதனைச் செய லிழக்க வைக்கும் நடவடிக்கையில் இலங்கை இறங்குமா அப்படிச் செய்ய அதனால் முடியுமா என்பது கேள்விக்குறியே. அதனால் வாசகர் கள் 13வது திருத்தம் தொடர்பாக ஊடகங்கள் தரும் பல்வேறு எதிர்மறையான அரசியல் அல சல்களையிட்டு அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தொடருவம்...

மோர்சிக்குப் பின் மோசமாகுமா எகிப்து ?

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

அரபு வசந்தத்தின் ஓர் அம்சமான 2011இல் நடந்த எகிப்தியப் புரட்சி மத சார்பற்ற ஒரு குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்களிடை வலிமை மிக்க தலைமையின்மை யாலும் பிளவு பட்ட பல அமைப்புக்கள் இருந்த மையினாலும் எகிப்தியப் புரட்சிக்குப்பின்னர் நடந்த தேர்தலில் மதவாத அமைப்பான இசுலா மிய சகோதரத்துவ அமைப்பு வெற்றி பெற்றது.

உண்மையில் அரபு வசந்தம் ஒரு மத்தியதர வர்க்கத்தின் புரட்சியாகும். அதில் பங்கு பற்றி யவர்கள் சராசரி மக்களிலும் அதிகமாகக் கல்வி கற்றவர்கள். பலர் நல்ல வேலைகளிலும் இருப்ப வர்கள். இவர்களால் பாட்டாளி வர்க்கத்தின ரிடை தமது கொள்கைகளைக் கொண்டு செல்ல முடியவில்லை. ஒரு அரசியல் கட்டமைப்பை அமைத்துக் கொள்ளும் அனுபவமோ திற மையோ இருக்கவில்லை. இவர்களது இந்த பலவீனத்தை மதவாதக் கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன. படிக்காத பாமர மக்களிடை மத வாதிகளுக்கு மதிப்பு இருக்கிறது. இதனால் துனிசியாவில் புரட்சிக்குப் பின்னர் வந்த தேர்த லில் மதவாதக் கட்சியான என்னக்தாவும் எகிப் தியப்புரட்சிக்குப்பின்னர் இசுலாமியசகோதரத் துவ அமைப்பும் வெற்றி பெற்றன.

எகிப்திய மக்கள் 18நாட்கள் நடத்திய 'புரட்சி யின்' மூலம் பெப்ரவரி 11-ம் திகதி ஹஸ்னி முபாரக்கைப் பதவியில் இருந்து விரட்டினர். கைக்குண்டுகள் கண்ணி வெடிகள் அரச வங்கிக் கொள்ளைகள் அரசியல்வாதிகள் கொலைகள் போன்றவை எதுவுமின்றி படைத் துறை ஆட்சியாளர் ஹஸ்னி முபாரக்கை சமூக வலைத்தளங்கள், கைபேசித் தகவல்கள், செய்மதித் தொலைக்காட்சிகள் போன்றவற் றால் பதவியில் இருந்து விரட்டினர் ஆனால் புரட்சி என்பது ஒரு ஆட்சியாளரை மாற்று வதுடன் முற்றுப் பெறுவதல்ல என்பதற்கு எகிப்து ஒரு நல்ல உதாரணமாக அமைகிறது.

◆ இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு

இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் உலகிலேயே செல்வாக்கு மிகுந்த அமைப்பு. கடந்த 86 ஆண்டுகள் திரை மறைவு இயக்கமாக இருந்து வந்த இந்த அமைப்பில் பலர் மன்னர் களாலும் படைத்துறைத் தலைவர்களாலும் சிறைவாசம் அனுபவித்தனர். இது தற்போது எகிப்தில் உள்ள ஒழுங்கு படுத்தப்பட்ட மிகப் பெரிய அரசியல் அமைப்புமாகும். இது மக்களும் அரசும் இஸ்லாமிய மத வழிகாட்டலுக்கு இணங்க நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. எகிப்தில் உள்ள இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு பல மருத்துவ மனைகள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள், வங்கிகள், பரா மரிப்பு நிலையங்கள், மலிவு விலைக் கடைகள் எனப் பலவற்றை நிர்வகித்து வருகிறது. முன்னாள் எகிப்திய அதிபர் அப்துல் கமால் நாசர் கொலையில் இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகித்து அது தடை செய்யப்பட்டும் இருந்தது இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு 1970 முதல் வன்முறை களைக் கைவிட்டு மக்களாட்சியில் நம்பிக்கை யுடன் ஒரு தாராளவாதக் கொள்கையுடைய அமைப்பாக மறி வருவதாக சில ஆய்வாளர்கள் கருதினர். ஆனால் பெண்கள் நம்பமுடியாத வர்கள், உணர்ச்சி வசப்படுபவர்கள், நல்ல மனைவிகளாகவும்தாய்மார்களாகவும்ஆவார்கள் ஆனால் ஒரு போதும் ஆட்சியாளர்களாகவோ அல்லது தலைவர்களாகவோ மாட்டார்கள். தம்மை விரும்பும் கணவன்மார்களுக்குப் பணி செய் வதிலும் அடிபணிவதிலும் இன்பம் காண் பார்கள் என்பதே இசுலாமிய சகோதரத்துவ அமைப்பின் கொள்கையாகும்.

◆ அமெரிக்காவின் புதுப்புது குடியேற்றவாதம்.

2011இல் நடந்த எகிப்தியப்புரட்சியில் இரத்தக் களரியின்றி மிகக் குறுகிய காலமான 18 நாட்களில் ஹஸ்னி முபாரக்கை ஆட்சியில் இருந்துவிரட்டப்பட்டமைக்கு எகிப்தியப்படைத் துறையினரும் முக்கிய பங்கு வகித்தனர். புரட்சியின் போது அவர்கள் நடுநிலைமை வகித்தது அனைவரையும் ஆச்சரியப்படுத் தியது. கிளர்ச்சி செய்பவர்களைக் காவற்துறை யால் அடக்காத போது அவர்கள் மேல் படைத் துறையினரை ஏவிவிடுவது எகிப்தில் நடக்க வில்லை. எகிப்தியப் படைத்துறையில் உயர் பதவியில் இருப்பவர்கள் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்கள். எகிப்தும் இஸ்ரேலும் அமெரிக்காவில் 1979இல் செய்து கொண்ட காம்ப் டேவிட் உடன்படிக்கையின் பின்னர் அமெரிக்கா எகிப்திற்கு ஆண்டு ஒன்றிற்கு இரண்டு பில்லியன் டொலர்களுக்கு அதிமான உதவிகளைச் செய்து வருகிறது. அமெரிக்க உதவியைப் பெறும் இரண்டாவது பெரிய நாடாக எகிப்து இருக்கிறது. இதில் பெரும் பகுதியான 1.3பில்லியன்கள் எகிப்தியப் படைத் துறைக்கே செல்கிறது. இது எகிப்தை தனக்குச் சார்பாக வைத்திருக்க அமெரிக்கா செய்யும் உத் தியாகும். ஹஸ்னி முபாராக்கிற்குப்பின்னர் எகிப் தியப் படைத்துறையின் படையினரின் உச்ச சபைக்கு {Supreme Council of the Armed Forces (SCAF)} அதிக அதிகாரங்கள் இருக்கின்றது.

◆ அமெரிக்க மக்களாட்சித் தத்துவம்

மக்களால் தெரிந்து எடுக்கப்பட்ட மோர்சி தலைமையிலான அரசை அமெரிக்க சார்புடைய படைத்துறையினர் எப்படி பதவியில் இருந்து அகற்றலாம் என்பதே இன்று பெரும் கேள்வி யாக இருக்கிறது. இசுலாமிய சகோதரத்துவ அமைப்பை எகிப்தில் வளர விடுவதை அமெ ரிக்கா விரும்பவில்லையா? சிரியக் கிளர்ச்சியி லும் இசுலாமியசகோதரத்துவ அமைப்பு பெரும் பங்கு வகிக்கிறது. மத்திய கிழக்கில் அதன் பரம் பலும் அமெரிக்காவிற்கு உகந்ததில்லையா?

◆ மோசமான மோர்சி

எகிப்தியப் புரட்சிக்கு வழிவகுத்தவர்களின் எதிர்பார்ப்பான சிறந்த பொருளாதார நிர் வாகம், சமூக நீதி போன்றவற்றை வழங்க மோர்சி தவறிவிட்டார். அதே போல் எகிப்தியப் படைத் துறையினரின் வேண்டுதலான எதிர்க்கட்சிக ளையும் அணைத்துக் கொண்டு அவர்களையும் ஆட்சியில் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதையும் மோர்சி நிறைவேற்ற வில்லை. ஆட்சிக்கு வந்த மோசியிடமோ அவரது இசுலாமிய சகோதரத்துவ அமைப்பி டமோ இசுலாமிய மதச் சட்டங்களை அமூல் படுத்துவதைத் தவிர நாட்டின் பொருளாதரத் தையோ மக்களின் அன்றாடப் பிரச்சனை களான குப்பை அகற்றுதலில் இருந்து வேலை வாய்ப்புவரை எந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான செயல்திட்டமும் இருக்க வில்லை. 'எல்லாப் பிரச்சனைகளுக்கும் இஸ் லாமே தீர்வு' என்ற மதவாதச் சுலோகம் எகிப்திய மக்களைப் பொறுத்தவரை புளித்துப் போன ஒன்றாகி விட்டது.

◆ தமரவுட் அமைப்பும் தஜரவுட் அமைப்பும்

எகிப்பதின் மாற்றத்திற்கான மக்கள் அமைப்பு முபாரக் ஆட்சியின் போது அவரைப் பதவியில் இருந்து அகற்ற ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு 2013 ஏப்ரல் மாதம் மோர்சிக்கு எதிராக தமரவுட் இயக்கத்தை ஆரம்பித்தது. தமரவுட் இயக்கம் மோர்சி பதவியில் இருந்து விலக வேண்டும் என 22 மில்லியன் கையோப்பங் களைத் திரட்டியது. மோர்சியின் ஆதரவாளர் கள் தஜரவுட் என்னும் இயக்கத்தை ஆரம்பித்து மோர்சிக்கு ஆதரவு தெரிவித்து 10 மில்லியன் கையொப்பங்களைத் திரட்டினர். தமரவுட் இயக்கத்தினர் கெய்ரோ நகரவீதிகளில் யாரும் தஜரவுட் இயக்கத்தினரின் கையொப்பப்பத்தி ரத்தை கண்டதில்லை என்கின்றனர்.

◆ மொஹமட் எல் பராடி

முபராக் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் முன்னாள் உலக அணுசக்தி முகவரக அதிபராக இருத மொஹமட் எல் பராடியை ஆட்சிக்கு கொண்டுவர எகிப்தியத் தாராண்மை வாதிகள் விரும்பினர். ஆனால் அவர்களது விருப்பம் நிறைவேறவில்லை. தேச விடுதலை முன்னணி அமைப்பைச் சேர்ந்தவர்கள் படைத் துறையினருடன் மொஹமட் எல் பராடியை அதிகாரத்திற்குக் கொண்டுவரும் பேச்சு வார்த் தையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

◆ மோர்சிக்குப் பின்னால்

மோர்சியை பதவியில் இருந்து தூக்கிய எகிப் தியப் படைத்துறையினர் எகிப்திய அரசமைப் புச் சட்டத்தை இரத்துச் செய்து புதிய எகிப்திய அதிபராக உச்ச நீதிமன்ற நீதியாளர் அட்லி மன்சூரை நியமித்தனர். நிபுணர்களைக் கொண்ட ஒரு அவை இடைக்கால ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் உரிய நேரத்தில் தேர்தல் நடக்கும் என்றும் படைத்துறையினர் அறிவித் துள்ளனர். ஆனால் இதற்கான கால வரையறை எதையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. தமரவுட் இயக்கத்தினர் எகிப்தியப் படைத்துறையினர் மக்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற உறுதி மொழியை எகிப்தியர்களுக்கு வழங்கி யுள்ளனர். மோர்சியும் அவரது முக்கிய ஆதர வாளர்களும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள் ளனர். படைத்துறையினர் 300இற்கு மேற்பட்ட இசுலாமைய சகோதரத்துவ அமைப்பினருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளனர். மக்களின் விருப்பத்தை ஒட்டி ஓர் ஆட்சியாளரை அகற்றி விட்டு மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய ஒருவரைப் பதவியில் அமர்த்திய படியால் இது படைத்துறைப் புரட்சி அல்ல என்கிறது எகிப் தியப் படைத்துறை. ஆட்சியில் இருப்பவரை அகற்றி நாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் மட்டுமே அது படைத்துறைப் புரட்சி ஆகும் என வாதாடுகிறது எகிப்தியப் படைத் துறை. அல் நூர் என்ற மததீவிரவாத அமைப்பும் எகிப்தில் பலமானதாக இருக்கிறது. இது எகிப்தில் இசுலாமிய சட்டங்களைக் கடுமையாக அமூல் படுத்த வேண்டும் என்ற கொள்கையுடையது. சுனி இசுலாமியர்களின் உயர் மத பீட அமைப் பும் எகிப்தில் இருக்கிறது. மோர்சியை ஆட்சி யில் இருந்து விரட்டுவதில் முக்கிய பங்கு வகித்தது எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பான தேசிய விடுதலை முன்னணியாகும். இது பல கட்சிகளை ஒன்றிணைத்த அமைப்பாகும். ஆன னால் ஒன்றுபட்ட அமைப்பா என்பது கேள்விக் குறி. இந்த பல வேறுபட்ட அமைப்புக்கள் மத்தி யில் இசுலாமிய சகோதரத்துவ அமைப்பும் ஒரு பலமிக்க அமைப்பாகும். இவர்களுக்கிடை யிலான மோதல் இனி வலுத்து மோர்சிக்குப் பின்னர் ஒரு மேலும் மோசமான நிலை எகிப்தில் உருவாகுமா அல்லது நாட்டின் முன்னேற்ற தைக் கருத்தில் கொண்டு எல்லோரும் ஒன்று பட்டு செயற்படுவார்களா? மத்திய கிழக்கிற்கும் மக்களாட்சித் தத்துவத்திற்கும் வெகுதூரம் என்ற கூற்றை பொய்யாக்குவார்களா?

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

SURYAA New Improved Taste!

Special packs
900g Curry Powder
with
1kg Flour

Hurry ! Limited Packs Only

Only **£3.99**

Great Offer for a **Great New Taste!**

Niru® BRAND

Quality you can taste

FROZEN CURRIES

4 பேருக்கு போதுமான

- நண்டுக்கறி–£4.99
- விளைமீன் கறி–£3.49

Easy To Cook.
Ready in 15 mins!
100 % NATURAL
NO PRESERVATIVES

Fantastic Taste.....
TRY IT TODAY.

Microwave
தேவையில்லை

Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

சர்க்கரை நோய்

மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

சர்க்கரை நோய் என்பது போதியளவு இன்சுலின் என்னும் திரவத்தை உடல் உற்பத்தி செய்ய தவறினாலோ அல்லது உற்பத்தியாகும் அளவின் பற்றாக் குறைவாலோ அல்லது உற்பத்தியாகும் இன்சுலினை ஒழுங்காகப் பயன்படுத்த உடலால் முடியாவிட்டாலோ தோன்றும் ஒரு கோளாறு.

இன்சுலின் என்பது எமது குடலுக்குப் பின்புறமாக உள்ள கணையம் என்னும் உறுப்பால் உற்பத்தி செய்யப்படும் ஒரு வகை இயக்கு நீர் (hormone). எமது உணவு செரித்து அதிலுள்ள மாச்சத்து எளிய நிலையான குளுக்கோஸ் என்னும் குருதிப்பழ சர்க்கரை நிலையை அடைந்த பின் உயிரணுக்கள் அந்த எளிய சர்க்கரையிலிருந்து ஆற்றலைப் பெறுகின்றன. இந்த இன்சுலினின் உதவியின்றி உயிரணுக்களால் குளுக்கோசிலிருந்து ஆற்றலைப் பெற முடியாது. அதனால் இன்சுலினை ஆற்றலைத் திறந்து விடும் திறவுகோல் என்றும் அழைப்பார்கள். சர்க்கரை நோய் இல்லாதவர்கள் குருதியில் குருதிப்பழ சர்க்கரையின் அளவு இன்சுலினால் கட்டுப் படுத்தப் படுகின்றது.

வகை 1 வகை 2 என சர்க்கரை நோயில் இரு வகைகள் உண்டு. வகை ஒன்றை இன்சுலினில் தங்கியுள்ள சர்க்கரை நோய் என்பார்கள். காரணம் இன்சுலின் உற்பத்தி நடை பெறாத அல்லது அரிதாகக் கிடைப்பதன் விளைவால் குருதியில் உள்ள குளுக்கோஸ் ஆற்றலாக மாறாது குருதிக்குள்ளேயே தேங்கிவிடும்.

அதற்கு முறையான பரிகாரம் செய்யாவிடில் நோயாளிகள் களைப்புணர்வுடன் காணப்படுவார்கள். பயன்பட முடியாமல் குருதிக்குள் உள்ள குளுக்கோஸ் சிறு நீருடன் வெளியேறும். இதனால் வழமையைவிட கூடுதலாய் சிறு நீர் வெளியேறும். அதனால் உடல் வரட்சி உண்டாகி மிதமிஞ்சிய தாகம் உண்டாகும்.

இன்சுலின் உற்பத்தியின்மையே வகை ஒன்றிற்கான காரணி. ஆனால் இன்சுலின் உற்பத்தி ஏன் இல்லாமல் போகின்றதென்பதற்கான முறையான விளக்கம் இன்னும் மருத்துவத்துறையிடம் இல்லை. தேவைப்படும் இன்சுலினை ஊசிமூலமோ அல்லது பம் பண்ணியோ குருதிக்குள் செலுத்தி வகை ஒன்றிற்கான சிகிச்சை தொடங்கும். உடலை உசார் நிலையில் வைத்திருத்தல், உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஆகியவைகளும் தேவைப் படும். எடை குறைப்புக்கான நடவடிக்கைகளும் தேவையேற் படின் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வகை இரண்டை, இன்சுலினில் தங்கிநிற்காத சர்க்கரை நோய் அல்லது வயதுத் தாக்க சர்க்கரை நோய் என்பார்கள். இந்த நோய் வழமையாக எடைகூடிய, நகர்வுகள் குறைந்தவர்கள் மத்தியிலேயே காணப்படும். இவர்களின் ஈரல், உடற்கட்டுத் தசைநார்கள், கொழுப்புத் திசுக்கள் ஆகியன இன்சுலினுக்கு போதிய செயல் மாற்றம் செய்ய மாட்டா. இதற்கும் இன்சுலின் பற்றாக் குறையை காரணங்களில் ஒன்றாகச் சொல்லும் அதே வேளை உற்பத்தியாகும் இன்சுலினை உடலால் ஒழுங்காகப் பயன்படுத்த முடியாத நிலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த சர்க்கரை நோய் வகை இரண்டால் பாதிக்கப் படும் அநேகர் 40 வயதுக்கு மேற்பட்டோர், எடை கூடியோர், நோயால் பாதிக்கப்பட்ட தாய்தந்தையரின் பிள்ளைகள், இரத்த அழுத்தம் கூடியவர்கள் என்று பட்டியல் நீளும். வகை ஒன்றில் கூறியதுபோல் நோயாளிகள் களைப்புணர்வுடன் காணப்படுதல். பயன்பாடு அற்று குருதிக்குள் உள்ள குளுக்கோஸ் சிறு நீருடன் வெளியேறுதல்?. அதன் விளைவாய் வழமையைவிட கூடுதலாய் சிறு நீர் வெளியேறுதல், உடல் வரட்சி உண்டாகி மிதமிஞ்சிய தாகம் உண்டாகுதல் ஆகிய குறிகளுடன் பாலியல் உறுப்புக்களில் சொறிவு, தொடரும் வாய் அவிதல், காயங்கள் ஆற நாட்கள் கூடுதலாய்த் தேவைப் படுதல் ஆகிய வற்றுடன் நோயாளிகளின் உடல் எடையும் தானாகவே குறையும். அத்தோடு பார்வையும் மங்கல் விழும்.

சர்க்கரை நோய் வகை ஒன்றோ, வகை இரண்டோ, தேவையான மருந்து எவ்வளவு அவை என்ன என்ன என்பதை முடிவெடுப்பதற்கு உங்களின் மருத்துவ வரலாற்றைக் கையில் வைத்திருக்கும் குடும்ப மருத்துவர் மட்டுமே முடிவெடுக்கலாம்.

உணவுப் பழக்க வழக்கங்களும் எமது உடல் நலனில் முக்கிய பங்கை வகிப்பதால் அவை பற்றி சிறிது பார்ப்போம். எமது உயரத்தை வைத்தே எமது எடை எவ்வளவு இருக்க வேண்டும் என்று பார்க்கிறார்கள். தேவைக்கதிகமாகச் சாப்பிட்டு எடையைக் கூட்டி நோயையும் கூட்டக் கூடாது. நல்ல சத்துள்ள உணவு என்று சொல்வதிலும் பார்க்க, தேவையான வகை உணவைத் தேவையான அளவு உண்டு எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தான் வகை இரண்டு சர்க்கரை நோய் உள்ளவர்களின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

ஐந்தரை அடி உயரமான ஒருவர் 70 கிலோவிற்கு மேல் எடை போகாது பார்த்தல் இன்றியமையாதது. ஆண்கள் என்றால் நாளாந்தம் 2500 பெண்கள் என்றால் 2000 கலரிக்கு அதிகமான உணவை எடுக்காது எடையைக் கட்டுப் பாட்டில் வைத்திருங்கள் என்று சொல்வது சுலபம் ஆனால் செய்வது கடினம். நாம் செய்தே ஆகவேண்டும். பாதிக்கப் படுவது எமது உடல் நலம் அல்லவா.

எமது நாளாந்த உணவுவில் போதியளவு பழங்கள், மரக்கறி வகைகள் (கீரை வகை உட்பட), பாலுணவுகள், புரத உணவுகள் எல்லாம் சேர மேண்டும். மாச்சத்துக்கள் என்னும்போது அதில்தான் சர்க்கரை வகைகளும் அடங்குகின்றன. இந்தச் சர்க்கரை குருதியில் இருப்பதுதானே சர்க்கரை நோய் என்று நாம் அவற்றை எடுப்பதைக் கட்டுப் படுத்தலாமே அன்றி தவிர்க்க முடியாது. எமது உணவில் மூன்றில் ஒரு பங்கு மாச்சத்தாகவும் இருக்க வேண்டும். எல்லா வகை உணவையும் சேர்த்து அவற்றைக் கட்டுப் பாட்டுடன் உண்பது ஒன்றே சிறந்த வழிமுறை.

சர்க்கரை நோய் என்றதும் கத்தாளை, பாவற்காய் போன்ற சொற்களும் எம் காதுகளில் விழாமல் இல்லை. இப்பொழுது இவை இரண்டும் பயன் உள்ளவை என்பதற்கான ஆதாரங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

பாவற்காயைப் பொறுத்த மட்டில் குருதியில் சர்க்கரையின் அளவு குறைய உதவுவதுடன், மாச்சத்துச் செரிப்பையும் ஆறுதல்படுத்தி குருதியுள் சர்கரை செல்லும் வேகமும் சீர்படுத்தப்படுகிறது. ஆனால் பாவற்காயை அளவோடு எடுக்காவிடில் பக்க விளைவாக குருதிச் சர்கரை குறைவு ஏற்பட்டு நிகழும் வேறு தாக்கங்கள் பற்றி எச்சரிக்கிறார்கள்.

கத்தாளை பற்றி அளவுக்கு அதிகமாகப் புகழ்கிறார்கள். குருதியில் உள்ள சர்க்கரையை குறைப்பதில் சிறந்த பங்காற்றும் இந்த மூலிகை எந்த விதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாதாம். இதுபற்றி கிடைக்கும் எச்சரிக்கை இதுதான். இதில் ஒவ்வாமை தன்மை இருப்பதற்கு எவ்விதப் பதிவும் இல்லாவிடிலும், முதல் முறையாகப் பயன் படுத்துபவர்களை சிறிது சிறிதாக உள் எடுக்கும் அளவைக் கூட்டும்படி கூறுகிறார்கள்.

கிடைத்து வரும் தகவல்களைப் பார்த்தால் எத்தனையோ நோய்களுக்கான நிவாரணியாகக் கத்தாளை மாறும்போல் தென்படுகிறது. மற்றவை எப்படி இருந்தாலும் சர்க்கரை நோய் உள்ள வர்களுக்கு கசக்கும் கத்தாளை ஒரு இனிக்கும் செய்தியை அனுப்புகிறது.

சிதறிப் போனவர்களுக்காக.....

யார் வீட்டுப்
பிள்ளைகளோ
தம்முடலில்
வெடிகொழுத்த...
பட்டாசு கொழுத்தி
மிட்டாசு கொடுத்து
வெற்றிவிழாக்
கொண்டாடிய
தமிழ்ப் பெருமக்களே!

எவர் வீட்டுப்
பிள்ளைகளோ
காற்றோடு கரைய,
உங்கள் வீட்டு வாரிசுகளை
அக்கரைச் சீமைக்கு...
அக்கறையாய்
அனுப்பிவைத்த
அருமைத் தமிழ் மக்களே!

"எரியும் வீட்டில்
பிடுங்கியது இலாபம்"
என...
தன்மானமில்லாமல்
இனமானம் விற்று,
சாக்கடைக் குழிக்குள்
சந்தணக் குளியல்
போடும்...
தமிழ் அரசியல்
பெருந்தகைகளே!

ஊர்பேர் தெரியாமல்
உறவுகளும் அறியாமல்
சிதறிப்போன
தலைகளுக்கும்
உங்களுக்கும்,
என்ன உறவென்று
சிந்தித்தும் பார்க்காத...
சிங்கார தேசங்களின்
நிரந்தரக் குடிமக்களே!

நீங்கள் உண்ணும்
சோற்றில்...
அவர்களின்
தசைத்துண்டங்களும்
சேர்ந்திருக்கும் !
நீங்கள் சுவாசிக்கும்
காற்றில்...
அவர்களின் மூச்சுக்
காற்றும் கலந்திருக்கும் !!
ஒருமுறையேனும்
நினைத்துப் பாருங்கள்!!!

உங்கள் மனச்சாட்சியின்
கதவுகளை
இறுக்கி மூடிவிடாதீர்கள்!
துருப்பிடித்துப் போனால்
திறப்பது கடினம்!!

எல்லாமே வீணென்று ஒரு
போதும் நினையாதீர்!
தியாகங்கள் ஒருநாளும்
வீண்போவதில்லை!
உண்மையான உணர்வுகள்...
எப்போதும் விலைபோவதில்லை!
மற்றவரின் தியாகத்தீயில்
குளிர்காய்ந்தது போதும்!
யாகங்கள் செய்த யாதவச்
செல்வங்களின்
தாயகக் கனவுக்காக,
ஒரு துளியேனும்.... உங்களால்
முடிந்தது,
எதையாவது செய்யுங்கள்!

முடிந்துபோனதென்று ஒடிந்தது
போதும்!
விடிந்து வருமென்று எழுந்து
நில்லுங்கள்!!
உங்களுக்காய் சிதறிப்
போனவர்களுக்காக,
பதறி எழாவிட்டாலும்
பரவாயில்லை! – தயவுசெய்து
சிதறி ஓடாதீர்!
உங்களுக்காக
சிதறிப்போனவர்களின்
தியாகங்களையும் கனவுகளையும்
உங்களின் சுயநலன்களுக்காக
சிதறடித்து விடாதீர்கள்!

அவர்களின் கனவுகளை உங்கள்
மனங்களில் விதையுங்கள்!
அவர்களின் தியாகங்களின் மேல்
முழு நம்பிக்கை வையுங்கள்!
ஒற்றுமையோடு ஓங்கி
முழங்கினால்,
எம் விடியல் என்பது...
வெகுதூரத்தில் இல்லை – புரிந்து
கொள்ளுங்கள்!

மண்ணின் விடியலுக்காய்
விதையாய் விழுந்தவர்கள்
விடியும் தேசத்தில்
மீண்டும் பிறந்து நம்
தாய்மண் மடியில் தவழ்வார்கள்!

தரணி போற்றும்
தனித்துவங்களாய்த் திகழ்வார்கள்!!

~ ஒருவன் (யாழில்)

கோடைக் குளிர்மைக்கு வன்னி

கோடை வெப்பத்தால் கடற்கரையும், பூங்காக்களையும் நாடுகின்ற மக்களின் மனம் குடிபானங்களை குளிராக்கி குடித்தாலும் ஆறாத தாகம், எங்கள் ஊரில் கோடை என்றால் இப்படியா என்ற ஒப்புநோக்கில் நெஞ்சம் ஊஞ்சலாடுகின்றது. இத்தகைய வெப்பம் ஊரில் நாம் உணராத ஒன்றுதானே. ஏன் இப்படி ஆமாம், அடுக்கடுக்கான மாடி வீடுகள், ஒட்டி ஒட்டி தொடராக அமைந்த மனைகள், கள்ளருக்குப் பயந்து வீதிச்சத்தத்தை கட்டுப்படுத்தவும், அடைக்கப்படுகின்ற வீட்டு ஜன்னல்கள் காற்றோட்டத்தையும் மீறிய சூட்டை சுற்றாடலில் வீட்டுக்குள் தருகின்றது. ஊரில் என்றால் ஒவ்வொரு வீட்டையும் சுற்றிய தோப்பு, ஆழாக்கிணற்றில் அள்ளப்படும் ஒவ்வொரு சொட்டு நீரையும் கொண்டோடி வளவு மரங்களுக்கு பருகத் தரும் வாய்க்கால்கள் அடர்த்தியாகப் படர்ந்திருக்கின்ற செவ்வரத்தம் பூ மரங்கள், கிணற்றடி கழிவு நீரில் வளரும் பசளி, பொன்னாங்காணி என்பன நீள் வரிசையிலே கமுகு, வாழை, எலுமிச்சை, தோடை, மாதுளை, கறி, முருங்கை, மா, பலா, வேம்பு என்று பயன் மரங்கள் இல்லாத வீடே இராது அல்லவா?

முற்றத்துப் பந்தலில் மல்லிகை அல்லது முல்லை, கைகளால் கட்டிப்பிடிக்க முடியாத பருமனான முள் முருக்கு மரம், பெற்றோரின் திருமணத்திற்கு சாட்சியாக பொன்னுருக்கு அன்று நடப்பட்டவை. எப்பொழுதும் முற்றத்தில் பரந்து கிடக்கும் எல்லை வேலிகளில் கிடுகுகளைத் தாங்கியிருக்கும் சீமைக்கிழுவை, பூவரசு என்ற குழை மரங்கள், வீட்டு முன்புறம் குறோட்டன் செடிகள், நாலு மணிக்கன்று வர்ணப் பூஞ்செடிகள், கொடிகள் என்பன பசுமை பரப்பியிருக்கும். பூத்துக்குலுங்கும் ரோஜா முதலான பூச்செடிகளும், அழகை அப்பியபடி இருக்கும். கூரை ஓடுகளில் சீமெந்துச் சுவர்களை மோதி நிற்பவை இந்தப் பசுமைக்குள் இருந்து வருபவை தென்றல் காற்றுத் தான். இயற்கை எழிலுடன் குளிரூட்டியாக அமைந்த கிராமங்கள் ஒவ்வொன்றுமே கோடை காலத்தில் குளிர் காலம் தான்.

எங்கள் ஊரில் கோடை என்றால் இப்படியா என்ற ஒப்புநோக்கில் நெஞ்சம் ஊஞ்சலாடுகின்றது. இத்தகைய வெப்பம் ஊரில் நாம் உணராத ஒன்று தானே.

கிராமிய மணம் மாறாத கிழுகிழுப்போடு அண்மைக் காலம் வரை இருந்த பிரதேசங்களில் பூநகரி தான் அனுபவமாக நான் கண்ட அழகிய பசுமை மிகுந்த கிராமம் அது. காடும் காடும் சார்ந்ததான பிரதேசம் அது. 550 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரதேசம். கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இப்பிரதேசம். இரணைதீவு, பல்லவராயன் கட்டு, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சிகளை அடக்கியது பூநகரி. விளைமீன், றால், நண்டு என கடல்வளத்தைக் கக்கும் கிராமம் இரணைதீவு. ஆடு வளர்ப்பையும், மீன் பிடிப்பதையும் வருவாயாகக் கொண்ட சின்னத்தீவு, பெரியதீவு என்ற இரு தீவுகளின் இணைப்பு இரணைதீவு. பல்லவ மன்னன் ஆண்ட மண் பல்லவராயன் கட்டு. பல்லவராயன் கட்டின் பல்லவ மன்னனின் இடி பாடைந்த இராஜதானியின் எச்சங்கள் இன்றும் ஆவணச் சுவடுகளாக அகழ்வு ஆராய் வாளர்களின் கைகளில் என்றும் கிடைத்துக் கொண்டே இருக்கின்றது.

பல்லவ மன்னனுக்கு வீரபாண்டிய கட்டப்பொம்மன் படை அனுப்பி உதவினான் என்றும் அந்தப் படை வந்தி றங்கிய இடம் வீரவில் என்று பெயர் பெற்று இன்று வேரவில் ஆக திரிபடைந்து விட்டதாகவும் சொல்வர். வலைப்பாடு, பொன்னாவெளி, கிராஞ்சி, குமிழமுனை, முழங்காவில் என விவசாயக் கிராமங்கள். பூநகரியை ஒட்டிய ஞானி மடம், செட்டிகுறிச்சி, அக்காய், நல்லூர், தம்பிராய், நாச்சிக்குடா போன்ற கிராமங்கள். அடர்ந்து செறிந்த பாலை மரங்கள். இனிப்பான மஞ்சள் பழங்களை இலைகளோடு போட்டியாக கொப்பைத் தோறும் குலுக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாலைமரங்கள். முதிரை, வீரை மரங்களும் பாரிய வளர்த்தியோடு அடங்கலாக நிறைந் திருக்கும். கரிகாலநாகபடுவான், பல்லவராயன் கட்டு குளங்களை ஒட்டிய வயல்களில் விளையும் மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் நெல்வகைகள் தான்.

காலை தோறும் சந்திகளில் கடை விரிக்கும் இறைச்சி வகைகள், வேட்டைக்காரரின் கட்டுத்துவக்கில் சிக்கிய பன்றி, மான், மரை, முயல் என்பன. வனப்பூக்கள் வடிந்த கொம்புத்தேன், பொந்துத்தேன் எல்லாமே பூநகரி வளச் சிறப்புக்கள். வேரவில், பொன்னாவெளி, கிராஞ்சி என்ற தொடர் கிராமங்களும் பழமையின் எளிமையில் மிளிர்ந்தன. அழகான, நெரியாக அணில் குஞ்சுகள் நுழையாதபடி அடுக்கப்பட்ட அலம்பல் வேலிகள். வாசலில் சங்குப் படலை, உள்ளே நித்தம் சாணம் தெளித்து மெழுகுத் தரையாகி விட்ட முற்றம். முற்றத்தை அலங்கரிக்கும் கோலம் உள்ளே மண்குசை உயர எழும்பிய குந்துக்கள், உட்கார ஏற்றதான வெளிக்கட்டுக்கள், வெறுச்சாணத்தால் மெழுகிய தரை, பனை ஓலையால் வேய்ந்த கூரை, வீட்டுச் சுவராக அமைவதுவும் தென்னோலைத் தட்டுத் தான்.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

வீட்டுக்கு முன்னால் மாட்டுப்பட்டி, வீட்டோடு அருகாக ஆட்டுக் கொட்டில். செவியன் ஆடுகளில் பருத்த முலைகளில் இடித்து இடித்து பால் பருகிய ஆட்டுக்குட்டிகள் வளவில் துள்ளி விளையாடும். அனேக வீடுகள் இவ் வாறான வர்ணசாலைகளாகத் தான் நாற்பது ஆண்டுகள் முன்வரை இருந்தன. தாழ்வான ஓலைக் குடிசை, பசியத் தரை, சுற்றிப் பசுமையான புறச் சூழல் ஆகியன எந்தக் கோடைக்கும் ஈடுகொடுக்கக் கூடிய இயற்கை குளிரூட்டி களாக இருந்தன. இன்றும் இவை இப்படியான என்பது கேள்விக் குறி தான். எளிமையும் போதும் என்ற மனமும், ஆசைகளுக்கு வேலி கட்டி வைத்ததால் இவை ஆனந்தம் விளையாடும் குடிசைகளாக அமைந்திருந்தன.

வாய்க்காலில் குளிக்கின்ற வீட்டு அம்மாவிற்கு இரு வீட்டுச் சேலைகள் தான் இருக்கும், அதுவும் அனேகமாக லங்காச் சேலைகளாகத் தான் இருக்கும். கதியாலின் ஒரு முனையில் ஒரு சேலைத்துண்டு சுற்றியிருக்க அடுத்த சேலைத்துண்டு அம்மாவைச் சுற்றியிருக்க, முழுகிய தலையில் கிழுவந்தடியால் குனிந்து அடித்தபடி இருக்க அந்தச் சேலை காய்கின்ற காட்சிகளும் கூட குளித்து முடிய வளவு தோறும் காண்கின்ற காட்சிகள். தாழ்வான பசியத்தரை, ஓலைக்குடிசை, சுற்றி பசுமையான புறச் சூழல் ஆகியன எந்தக் கோடைக்கும் ஈடுகொடுக்கக் கூடிய இயற்கைக் குளிரூட்டிகளாக அமைந்துள்ளன.

மகாத்மா காந்தி இந்திய சுதந்திரத்தை முன்னெடுத்த போதும், கிராமிய வாழ்வாதாரத்தை கிராமிய மணத்தோடு நிலைநாட்ட தொடர்ந்து உழைத்தார். எழிமை, சுய தேவைப் பூர்த்தி, கை வைத்தியம் என்பனவற்றைக் கற்றுத் தந்தார். வெளிநாட்டு வாழ்வில் இயந்திரமான கோடையிலும், குளிரிலும் புளுங்குகின்ற நாம் இங்கிருந்தே இந்தக் கிராமங்களை நினைப்பதும் கூட மனதிற்கு குளிர்ச்சி தரும் அந்த வகை. அந்தக் கால வன்னிப்புற குளிர்ச்சியை எண்ணத்தில் இருத்தி, மனதைக் குளிரச் செய்வோமாக.

கோர்த்து விடும் செய்திகள்

■ நாச்சியப்பனிடம் நஞ்சுப்பாலுண்டவர்

உமாதேவியிடம் ஞானப்பாலுண்ட சம்பந்தன் வாய் திறந்து பாடினார். இதுவரை வாய்திறக்காமல் இருந்த சத்தியசீலன் புதுடில்லிக்குப் போய் நாச்சியப்பனிடம் என்னத்தை வாங்கிச் சாப்பிட்டாரோ வாயைத் திறந்து விட்டார். இனி அவர் நிறைய நஞ்சுகளைக் கக்குவார் என எதிர்பார்க்கலாம். நிலத்தில் துரோகிகள் எதிரியுடன் நிற்கிறார்கள். புலத்தில் துரோகிகள் எமக்குப் பக்கத்தில் ஈழப் போராட்ட ஆதரவு முகமூடியுடன் நிற்கிறார்கள்.

■ இன்னும் ஒருவர் கிளம்பியுள்ளார்

இலங்கையில் 2008இற்குப் பின்னர் பல இந்தியப் பணமுதலைகள் பல பில்லியன் டொலர்கணக்கில் முதலிட்டுள்ளார்கள். இவர்களின் முதலீடுகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் கொழும்பு ஆட்சியாளர்களை புது டில்லி அதிருப்திக்கு உள்ளாக்கக் கூடாது. இதற்காக தமிழ்நாட்டு அரசியலை ஒட்டி புது டில்லி இலங்கைத் தமிழர்களுக்கு சார்பாக நடக்கக் கூடாது என்ற பிரச்சாரம் இதுவரை பல வட இந்திய ஊடகங்களால் முன்னெடுக்கப்பட்டன. இப்போது தென் மாநிலங்களிலும் இவை பரவத் தொடங்கி விட்டன. சென்ற வாரம் கேரள ஊடகத்தில் நாராயண் சுவாமி என்ற ஒரு மலையாளப் பார்ப்பனர் தமிழ்நாடு வெலிங்டனில் பயிற்சி பெற்று வந்த இலங்கைப் படைத்துறையினரை அகற்றியதைக் கடுமையாகச் சாடி எழுதியுள்ளார்.

■ ஐநாவில் அநாதரவான அறிக்கைகள்

இலங்கை இனக்கொலையின் போது ஐநா கைகட்டிக் கொண்டு இருந்தமை தொடர்பாக மூன்றிற்கு மேற்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. அவற்றின் மீதான எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. கடைசியாக ஜூன் நடுப்பகுதியில் ஒரு அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அது இன்னும் பான் கீமூனின் மேசைக்குப் போய்ச் சேரவில்லையாம். 2014-ம் ஆண்டு முடிவில் பான் கீ மூன் பதவியிழந்த பின்னர் பல உண்மைகள் வெளிவரலாம். தமிழர்களின் நீதிக்கான காத்திருப்பு நீண்டது.

■ ராஜபக்கசவிற்கு தலையிடியான தன்னினச் சேர்க்கை

ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட பெண்ணை நோர்வே கொழும் பிற்கான தூதுவராக நியமித்துள்ளது. பொதுபல சேனா மஹிந்தவைச் சந்தித்து இதற்கு கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. போதாக் குறைக்கு புதிய தூதுவர் தனது வாழ்க்கைத் துணையை இலங்கைக்கு அழைக்க இலங்கை வெளிநாட்டமைச்சருக்கு அனுப்பியுள்ளார். போதாக் குறைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் வேறு இந்த விவகாரத்தில் பலவீனமானவராம்.

-ஊருளவாரி

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்....
இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை
• VEHICLE SHIPPING • RELOCATION SERVICE
• FURNITURE SHIPPING • MAN AND VAN SERVICE
• EXPRESS LETTER SERVICE • PACKING MATERIALS
• PACKING SERVICE • EUROPEAN PARCEL SERVICE
பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
GREENFORD WIMBLEDON VAUXHALL
BIRMINGHAM LEWISHAM
SOUTH HARROW STOKE-ON-TRENT
A-LANKA TRAVELS LTD, TOOTING
Door to Door Delivery
இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்
இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்
இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு
DUNN SHIPPING LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
T : 020 8842 2020
M : 07949 361 434
M : 07949 361 313
info@dunnshipping.co.uk
www.dunnshipping.co.uk
67, Gap Road, SW19 8JA, Wimbledon, London

உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்

எனது நண்பரும், ஊடகவியலாளருமான இதயச் சந்திரன் அவர்களுடன் சமீபத்தில் உரையாடியபோது அவர் தன்னைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார். "முதலில் அடிப்படையில் நான் ஒரு இடதுசாரி, பிறகு தான் தேசியவாதி". அவரது எந்தக் கருத்துக்களிலும் நுழைந்து கொள்ள நான் விரும்பவில்லை. ஆனால், அவை குறித்த என் மனப்பதிவுகளை இதில் பதிய விரும்புகின்றேன். அது அரசியல் ஆரோக்கியம் கருதியே.

முன்னர் ***ஒரு பேப்பர்*** இல் எனது இப்பத்தியில் 'கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்கு தமிழ்த் தேசிய அடையாளம் தொடர்பான உறுதி எப்படி வந்தது?' என்ற கருத்துப்பட சில குறிப்புகளைப் பதிந்திருந்தேன். அதில் நமது தேசியத் தலைவர் அதற்கு முக்கிய காரணம் என்று குறிப்பிட்டிருந்தேன். வேறு சில காரணங்களும் உள்ளன.

ஒரு மனிதரை உருவாக்குவதில் பரம்பரை அலகிற்கும் (ஜீன்), சூழல் அமைவிற்கும் (Environment) முக்கிய பங்குண்டு. அடிப்படையில் பரம்பரை அலகுகளே மனிதரை தீர்மானித்த போதிலும் சூழல் அமைவு அதை மாற்றிக் கொள்வதுண்டு. இதனை விரிவாக எழுதுவது எனது நோக்கமல்ல, கஜேந்திரகுமாரின் அரசியல் ஈடுபாடு என்பது நிச்சயமாக சூழல் அமைவுதான். அவரது தந்தை யாரான குமார் பொன்னம்பலம் காலத்தில் கஜேந்திர குமார் அரசியலில் ஈடுபட்டதாக சான்றுகள் இல்லை. அப் பொழுது அவர் சிறுவயதாக இருந்திருக்கக் கூடும். ஆனால், குமார் பொன்னம்பலத்தின் படுகொலையின் பிறகே கஜேந்திரகுமார் அரசியல் அரங்கிற்கு வருகிறார்.

தந்தையாரின் படுகொலை ஒன்றே போதுமே அவரை அரசியல் அரங்கிற்கு வராமல் துரத்தியடிப்பதற்கு, நான் நம்புகின்றேன். இந்த இடத்தில் அவரது பரம்பரை அலகு அவரது பணியை செவ்வனே நிரவியிருக்கிறது.

கஜேந்திரகுமாரினது பேரனார் ஜி.ஜி.பொன்னம்பலம், தந்தையார் குமார் பொன்னம்பலம் இருவரும் தமிழ்த் தேசியம் குறித்து உணர்வுபூர்வமாக சிந்தித்தவர்கள். இவர்களில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் காலமும் அரசியல் சூழலும் வேறு. தமிழ்த்தேசிய உணர்வை பல இடங்களில் விட்டுக்கொடுத்தவராக ஜி.ஜி. காட்சி தருகிறார். ஆனால், குமார் பொன்னம்பலத்தின் அரசியல் காலம் வேறு. ஆரம்பத்தில் அமிர்தலிங்கத்தால், தன் அதிகாரத்தின் மீதான ஆபத்தை கருதி தறுவறுக்கப்பட்ட அரசியல் குமாரிடம் இருந்தமையால் அவர் தன் திசை வழி மாற்றிச் சென்றார். ஓர் சிறிது காலம் 'திக்குத்தெரியாத காட்டில்' அவர் அலைந்ததைக் காணமுடிந்தது. ஆனால், அதற்கு அதிக காலம் தேவைப்படவில்லை. தமிழ்த் தேசிய விடுதலைப் பேரொளி ஒன்று அவர் கண்ணுக்குத் தெரிந்தது. நம்மில் பலரைப் போலவே அவர், அதனைக் கண்டார். நம்பினார். கரம்பற்றினார். அந்த ஒளியின் பாதையில் அவரது உறுதியான பயணம் தொடர்ந்தது. ஈற்றில் 'மாமனிதர்' ஆனார் குமார் பொன்னம்பலம்.

கஜேந்திரகுமார் அரசியல் அரங்கிற்கு வருகின்ற போது விடுதலைப் பேரொளி தன் பிரகாசத்தை படர விட்டபடி இருந்தது. எனவே, பாதை தெளிவு, அதனால் பயணம் சுலபம். இனி வேண்டுவனவெல்லாம் பயணத்தில் இடம், இலக்கில் உறுதி. அதற்கும் நம் தேசியத் தலைவர் அடியெடுத்து வைத்துவிட்டார். இவ்வாறு இவர்களை உருவாக்கியது அல்லது ஒன்று கூட்டியது என்பது எதனால் கட்டமைக்கப்பட்டது? இடதுசாரி தத்துவத்தினாலேயோ அல்லது தமிழ்த் தேசிய உணர்வாலேயோ? 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்று கொட்டு முழக்கம் இடுவதா அல்லது 'உலகத் தமிழரே ஒன்று படுங்கள்' என்று கொட்டு முழக்கம் இடுவதா என்று எது யதார்த்தமானது? எது நிகழக் கூடியது? எது ஒன்றுபடுத்தக் போகிறது? இப்பொழுது பல கேள்விகளை உங்கள் முன் விசுக்கி விடுகிறேன்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைக்குப் போராடிய அமைப்புக்களை எடுத்துக் கொள்வோம். 1981 இலிருந்து மாவோயிச விடுதலை அமைப்பொன்றில் பணி புரிந்தேன். ஆரம்பத்தில் தேசிய விடுதலை தொடர்பான வளமாக பார்வை கொண்டிருந்த அந்த அமைப்பு பின்னர் வரட்டுத் தனத்தை நோக்கி சடுதியாக நகர்ந்தது. அதற்கு முக்கிய காரணமாக அவர்கள் இடதுசாரியின் கண்ணோத்துடன் தமிழ்த் தேசியத்தை நோக்கியமையேயாகும். ஒடுக்கப்படுகின்ற இனம் என்பதனால், ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என்ற தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பார்த்து பின்னர், அது முழு இலங்கைக்குமான புரட்சி என்பதாக விரித்து அது உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று கோஷத்தை வந்தடைய வேண்டும் என்பது அவர்களின் நம்பிக்கை.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இப்பொழுது அதனைத் திரும்பிப் பார்க்கின்ற போது ஒன்று புரிகின்றது. இடதுசாரித் தத்துவம் பேசிய அமைப்புகளின் தோல்விக்கு அது தான் காரணம். நாங்கள் இலங்கையில் ஒடுக்கப்படுகின்ற இனம் என்பது சரி. ஏன் ஒடுக்கப்படுகின்றோம் என்பதும், எமது இனப் பண்பாட்டின் கூறுகளை விளங்கிக் கொள்வதையும் நாம் தவிர்த்துவிடுகிறோம். மார்ச்சீயச் சூத்திரங்களுக்குள் யாவற்றையும் போட்டுக் குழப்பினோம். எமது சூழலுக்கு ஒவ்வாத நமது மண்ணில் விளையாத நமது பண்பாட்டுடன் ஒத்துவராத பலவற்றை விழுங்கிப் பார்த்தோம். தின்றது செமிக்கவில்லை. வாந்தி எடுத்தோம். அதுவும் பிறர் மேலே. இறுதியில் 'தோற்றுச் சரிவதைத் தவிர இம் மார்க்சீயர்களுக்கு வேறு வழி புலப்படவில்லை'.

ஏலவே எழுதியது தான் ஆனால், இப்போது ஒருக் கால் சொல்கிறேன். 90களின் ஆரம்பத்தில் தேசிய இனங்களின் அடிப்படையில் சோவியத் யூனியன் அரசியல் துண்டு துண்டாகச் சிதறுகிறது. பிரமாண்டமான வல்லரசுமிக்க ஒன்றியம் அது. அதன் சிறுவைக்கு ஒரே ஒரு காரணம் தான் இருந்தது. 'நாம் தனித்த தேசிய இனம்' என்ற ஒரே ஒரு வாக்கியம். செக்கோ சுலாவாக்கிய என்ற சமஷ்டிக் குடியரசு செக் என்றும் சுலாவாக்கியா என்றும் இரு தேசங்களாக இதுவே காரணம்.

அதே காரணம் தான் இருநாடுகளை ஒன்றாக்கியது. ஒரே தேசிய இனம், கிழக்கு யேர்மனி, மேற்கு யேர்மனி என இரண்டு நாடுகளாக பிளவுண்டு கிடந்தமையை 90களின் ஆரம்பம் ஒரு தேசிய இனம் எனும் சுலோகத்தின் அடிப்படையில் ஒருநாடாக்கியது. இவற்றிலிருந்து ஒரு தேசிய இனம் எனும் பதத்தின் வலிமையை நாம் உணர்ந்து விட முடியும்.

அதேபோல, இந்தியா, தமது தேசிய இனங்களுக்கு சுய நிர்ண உரிமையை வழங்காமைக்கும் இந்தியா பிளவுபட்டு விடும் எனும் ஒரே ஒரு காரணமன்றி வேறு ஒன்றுமல்ல. எனவே, 'நான் மனிதன் மற்றும் தமிழன்' என்று சொல்வதில் எனக்கு உவப்பைத் தருகின்றது.

மார்ச்சீயம் காலாவதியாகிப் போனதொன்று அல்ல, ஆனால், காலத்திற்கு ஏற்றவகையில் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் தான் அது உயிர் வாழும் என்பதனையும், ஒப்புக் கொள்வதற்கு நாம் ஏன் தயக்கம் கொள்ள வேண்டும்?

மைதிலி இராமன் அமெரிக்காவின் புதிய பதில் உதவி சட்டமா அதிபராக நியமனம்

அமெரிக்காவின் சட்டத்திணைக்களத்தில் பதில் உதவி சட்டமா அதிபராக சட்டவாளராக திருமதி. மைதிலி ராமன் நியமிக்கப்பட்டுள்ளார். வடமராட்சி புலோலியைச் சேரந்தவரும் உலக வங்கியின் அனைத்துலக நிதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவருமான திரு. அதிர்ஸ்டம் தர்மரத்தினம் அவர்களதுமகளான மைதிலி, அமெரிக்காவின் புகழ்பெற்ற Ivy League பல்கலைக் கழமான Yale பல்கலைக்கழகத்தில் சட்டத் துறை பட்டப்படிப்பை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து 1991 இல் Chicago பல்கலைக்கழகத்தின் பட்டப் பின்படிப்பை தொடர்ந்தார்.

1996 இல் அமெரிக்க நீதித்துறைத் திணைக்களத்தில் இணைந்து கொண்ட மைதிலி குற்றவியல் பிரிவில் போதைப் பொருள் தடுப்பு வழக்குகளில் முன்னிலையாகி வந்தார். 1999 தொடக்கம் 2008 வரை Maryland மாவட்டத்தில் சட்டமா அதிபர் பணியகத்தில் உதவி அமெரிக்க சட்டவாளராக பணியாற்றினார். இதன்போது போதைப்பொருள் தடுப்பு நிதிமுறைகேடு வன்முறைகள் சிறார் கடத்தல் குடியியல் உரிமை வழக்குகளில் பணியாற்றினார்.

2008 ஆம் ஆண்டு முதல் குற்றவியல் பிரிவில் பணியாற்றி வருகிறார். 2009 செப்டெம்பர் 2 ஆம் திகதி தொடக்கம் இவர் பதில் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட அவர் 2013 மார்ச் 1 ஆம் திகதி முதன்மை பிரதி உதவி சட்டமா அதிபர் மற்றும் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது குற்றவியல் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்கும் மைதிலி ராமன் அமெரிக்கா முழுவதிலும் உள்ள சம்ஷ்டி குற்றவியல் வழக்குகளை கையாளும் சுமார் 600 அரச சட்டவாளர்களுக்குத் தலைமை தாங்கவுள்ளதுடன் குற்றவியல் சட்டங்களை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருப்பார்.

அத்துடன் அந்தந்த மாவட்டங்களில் குற்றவியல் விவகாரங்களை விசாரணை செய்யும் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்தும் 93 அமெரிக்க சட்டவாளர்களுடனும் இவர் நெருக்கமாகப் பணியாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மைதிலியின் தாய்வழி பாட்டனார் காலம்சென்ற திரு. சி. லோகநாதன் இலங்கை வங்கியின் பொது முகாமையாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

HDFC இன் INDIA HOMES கண்காட்சி

HDFC'S INDIA HOMES FAIR

இந்தியாவில் வீடு வாங்க விரும்புவர்களுக்காக லண்டனில் 'INDIA HOMES' என்ற இக்கண்காட்சியினை வீடுவாங்குவதற்கான கடன் உதவிகளைச் செய்துவரும் HDFC நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இந்திய குடியுரிமை கொண்டவர்களுக்கும், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவழியினருக்கும் உதவும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சியில் வீடு கட்டி விற்பனை செய்வதில் நிபுணத்துவம் கொண்ட நாற்பது நிறுவனங்கள் பங்கெடுத்து தமது வீட்டுத் திட்டங்கள், மாதிரி வீடுகள் மற்றும் விபரங்களை காட்சிப்படுத்தவுள்ளன.

இக்கண்காட்சியில், பெங்களூரு, சென்னை, குஜராத், கோவா, ஐதராபாத், கேரளா, மும்பை, டெல்லி, பூனே, கொல்கத்தா ஆகிய நகரங்களில் உருவாக்கப்படவிருக்கும் 200 வீட்டுத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் காட்சிக்கு விடப்படுவுள்ளதாக HDFC நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஆண்டாக நடைபெறவுள்ள இக்கண்காட்சி யூலை மாதம் 13ம் 14ம் திகதி சனி, ஞாயிறு தினங்களில் Hilton London Metropole Hotel, 225 Edgware Road, London W2 1JU என்ற முகவரியில் காலை 10 மணியிலிருந்து இரவு 7 மணிவரை நடைபெறும்.

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 49 வயது, 5'4" British citizen divorced working as a supervisor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4614

2. 28 வயது, 5'6" graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4604

3. 31 வயது, 5'8" work permit visa working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4579

4. 39 வயது, 5'9" Permanent residence self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4599

5. 33 வயது, 5'6" British citizen running own shop in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4597

6. 38 வயது, 5'7" British citizen working in a company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4595

7. 29 வயது, 5'6" divorced British citizen, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195

8. 32 வயது, 5'7" Permanent residence in uk working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3866

9. 31 வயது, 5'7" British citizen graduate working in company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3703

10. 43 வயது, 5'5" divorced British citizen,Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4588

11. 38 வயது, 5'5" divorced PR in uk Doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4582

12. 28 வயது, 5'5" born and brought up in uk working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4578

13. 31வயது,5'2"Permanentresidencein Ukworkingasacashierinashopதகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4573

14. 26வயது,5'6"studentvisalivinginuk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4569

15. 38 வயது, 5'10" British citizen accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4567

16. 29வயது,5'2"Businessvisagraduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4566

17. 37 வயது, 6'0" born and broughtup in uk working as a IT consulant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4559

18. 41 வயது, 5'8" Accountant, British Citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

19. 39 வயது, 5'2" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4555

20. 29 வயது, 5'1" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4553

21. 39 வயது, 5'6" British citizen accountant divorced தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4549

22. 31 வயது, 5'11" Australian citizen well educated self employed groom தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4548

23. 34 வயது, 5'7" born and broughup in Uk employed professionals groom தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4547

24. 29வயது,5'7"workpermitvisaliving in Dubai தகுந்தமணமகளைதேடுகின்றனர் Ref: 4546

25. 25வயது,5'8"Britishcitizenrunning business in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4544

26. 29 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4538

27. 38வயது,5'9"Francecitizengraduate working in a IT company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4535

28. 41 வயது, 5'8" PR, British citizen, degree in IT, working in the city தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

29. 30வயது,5'11"Hsmpvisaworkingas a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4533

30. 37 வயது, 5'6" Post graduation visa doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4532

31. 45 வயது, 5'11" British citizen divorced Engineer தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4530

32. 31 வயது, 5'11" PR in uk Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3624

33. 40 வயது, 5'10" British Citizen, Graduate working as a Car Technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4520

34. 27 வயது, 5'6" permanent residence in uk, Graduate, working in a store தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4528

35. 34வயது,5'9"Britishcitizenworking in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4514

36. 23 வயது, 6'2" Permanent residence in Uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4512

37. 33 வயது, 6'2" British citizen graduate working in company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4510

38. 48 வயது, 5'8" work permit visa graduate working in company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4509

39. 29 வயது, 6'2" Asylum seeker living in uk for the past 8 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4506

40. 32 வயது, 5'8" Permanent residence in uk working as a software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503

41. 35 வயது, 5'8" work permit visa living in france working in a restaurant தகுந்தமணமகளை தேடுகின்றனர் Ref: 3840

42. 34 வயது, 5'6" work permit visa graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3676

43. 30 வயது, 5'6" British citizen driver working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

44. 36வயது,5'11"bornandbroughupin uk doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1006

45. 37 வயது, 5'2" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4498

46. 31 வயது, 5'8" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4497

47. 37 வயது, 5'10" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4495

48. 35வயது,5'10"AsylumseekerinUk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4492

49. 40 வயது, 5'6" British citizen manager in a shop தகுந்தமணமகளைதேடுகின்றனர் Ref: 4490

50. 31 வயது, 5'9" PR in Uk Engineer working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3948

51. 28 வயது, 6'2" Canadian citizen finished diploma and working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4482

52. 43 வயது, 5'5" British citizen divorced self employed தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4470

மணமகன் தேவை

1. 21 வயது, 5'3" born and broughtup in Norway student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4607

2. 35வயது,5'5"workingasamanagerin srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

3. 39வயது,5'5"Britishcitizenworking as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

4. 30 வயது, 5'6" British citizen accountant working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

5. 44 வயது, 5'2" divorced, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4576

6. 25 வயது, 5'3" Permanent residence working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

7. 30வயது,5'3"BritishcitizenEngineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4562

8. 32 வயது, 5'10" srilanka, graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4552

9. 32வயது,5'3"Britishcitizenworking in a company as a manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4539

10. 33 வயது, 5'5" Accountant in Singapore தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3947

11. 40 வயது, 5'3" divorced German citizen living in Uk தகுந்தமணமகனை தேடுகின்றனர் Ref: 4542

12. 24 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

13. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4009

14. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519

15. 31வயது,5'4"Canadian,Residingin Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527

16. 33வயது,5'2"bornandbroughtupin Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513

17. 39 வயது, 5'3" widowed living with childrend in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511

18. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496

19. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491

20. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factoryதகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4489

21. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 4488

22. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்தமண மகனை தேடுகின்றனர் Ref: 4487

23. 27வயது,5'2"BritishcitizenTeacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485

24. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484

25. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483

26. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473

27. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

28. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477

29. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471

30. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465

31. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455

32. 27 வயது, 5'4" srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4414

33. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4398

34. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4388

35. 35 வயது, 5'4" British citizen divorced living with the child working in a super market தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4383

36. 33 வயது, 5'8" British citizen divorced working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

37. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

38. 30 வயது, 5'5" Born and Brought up in Uk Accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3316

39. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

40. 23வயது,4'10"Permanentresidence inuk student தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 4362

41. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

42. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

43. 34 வயது, 5'5" British citizen, Separated தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4331

44. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

45. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348

46. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்தமணமகனை தேடுகின்றனர் Ref: 4322

47. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321

48. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4310

49. 26 வயது, 5'3" living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4304

50. 32 வயது, 5'3" British Citizen, Working in an IT consultant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4303

51. 33 வயது, 5'0" Graduate Divorced living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4302

52. 32 வயது, 5'2" Graduate, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4291

53. 29வயது,5'2"Graduateworkingasa Teacher in Srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4281

54. 31 வயது, 5'4" Graduate, Canadian citizen living in canada தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4265

55. 30 வயது, 5'5" working in a supermarket in a workpermit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

56. 29 வயது, 5'5" graduate PSW visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4287

57. 29 வயது, 5'5" Asylum seeker divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4278

58. 31 வயது, 5'4" Doctor in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4277

59. 30 வயது, 6'0" British citizen working as a accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4267

60. 30 வயது, 5'5" born and brought up in uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316

61. 25வயது,5'7"Graduatestudentvisa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4270

62. 26 வயது, 5'3" graduate Permanent visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

63. 35 வயது, 5'6" Accountant in srilanka தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 826

64. 33வயது,5'3"DoctorBritishcitizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248

65. 28 வயது, 5'2" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4247

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

எண்ணெழுத்து இகழேல்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது முதியோர் வாக்கு அதனாலேயே குழந்தைகளுக்கான கல்வியை ஆரம்பிக்கு முன்னர் ஏடு தொடக்குவது என்ற சம்பிரதாயம் தமிழர் சமுதாயத்தில் ஊறிப் போய்விட்ட ஒரு சடங்கு, நாடு விட்டு நாடு மாறினாலும் எமது கலாச்சார முறைப்படி, இன்றும் ஏடு தொடக்கம் வழக்கம் சமயசார விதிகளின்படி, குழந்தைகள் கல்வியை ஆரம்பிக்கும் அணுகுமுறை புலம் பெயர்ந்த நாடுகளிலும் அனுசரிக்கப்படுவது தமிழர் பண்பாட்டுக்குக் கிடைத்த பரிசாகும்.

ஏடு தொடக்கும் வைபவத்தை அவதானித்தால், அதில் எழுத்துக்கு முதன்மை தருவதோடு தொடர்ந்து எண்ணுக்கும் இடமளிக்கப்படுகிறது. எழுத்து இல்லையேல் இலக்கணம் இல்லை. இலக்கணம் இல்லையேல் மொழி இல்லை, மொழி இல்லையேல் தொடர்புஇல்லை. தொடர்பு இல்லாது போனால் சமுதாயம் இல்லை, சமுதாயம் இல்லாது போனால் நாடில்லை. நாடுகள் இல்லாது போனால் உலகமேது. எனவே தான் எழுத்தை மூலாதாரமாகக் கொண்ட இலக்கணத்தை இகழேல் என ஔவை கூறி வைத்தது பொய்க்குமா?

விஞ்ஞானம் விரிவடைந்து, வியக்கத்தக்க முன்னேற்றங்களை மனித சமுதாயம் இன்று காணக்கூடிய விந்தைக்கு மூலகாரணம் கணிதம் கற்றுக் கொடுத்த அறிவுப் பாதை, கற்பதற்கு கணிதம் கடினமாக இருந்தாலும் அது காட்டிய அற்புதமாக கண்டுபிடிப்புகளின் பலனால் தான் குறித்த நேரத்தில் திட்டமிட்டபடி செவ்வாய்க்கிரகத்தை கியூரிசிற்றி (Curiosity) எனும் றோவர் சென்றடையவும், அதன் அத்தனை அசைவுகளையும் பூமியிலிருந்து கொண்டே செயற்படுத்தவும் முடியுமென ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைத் தேவையான கணித வல்லமையை புறக்கணித்திருந்தால் இச்சாதனைகள் சிந்தியடையவாய்ப்பேயில்லை. எனவே தான் எண்ணையும் இகழாதே என ஔவை கூறியது சரிதானே.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால், எண்ணைக் கற்பித்தவன் கடவுள் என்பேன். எண்ணும் எழுத்தும் இரு கண்களாக அமைவதால் கண்களை இழந்த குருடர்கள் போல் ஆகாமல் தவிர்க்க வேண்டுமானால் எத்தனை இடர்கள் வந்தாலும் எமது குழந்தைகளுக்கு எண்ணையும் எழுத்தையும் தவறாமல் கற்பிக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினது கடமையாகும்.

கூடுதல் தூக்கம் நீரிழிவைத் தடுக்கும்

இரண்டாந்தர நீரழிவு நோயினால் மரணமடையும் சம்பவங்கள் அமெரிக்காவில் மட்டும் ஏழாவது இடத்தில் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. நீரிழிவு நோய்கள் உட்பட, இருதய சம்பந்தமான வியாதிகள் போன்ற உயிரைக் குடிக்கும் சம்பவங்கள், உடலுக்குத் தேவைப்படும் போதியளவு உறக்கத்தை தவிர்ப்பதினால் விளையும் ஆபத்தாக கருதப்படுகிறது.

வேலைப்பழு காரணமாகவும், கணனிகளில் செலவிடும் நீண்ட நேரத்தினாலும், களியாட்டங்கள், பொதுவைபவங்கள் போன்ற இரவு நேர பொழுது போக்குகளினாலும் உடலுக்குத் தேவைப்படும் உறக்கத்தை உதாசீனப்படுத்துவதால், சர்க்கரையின் அளவு இரத்தத்தில் சீராகச் செயற்படுவது தடுமாற்றமடைவதாக ஆராய்ச்சியாளர்கள் மூலம் அறிந்துள்ளனர். இதன் காரணமாகவே கணயத்திலிருந்து வெளிவரும் இயக்கு நீர் (Insulin) தனது செயற் பாடுகளை இழக்க வாய்ப்பிருப்பதாக கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவிலுள்ள ஹர்பர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் டேவிட் பீட்டர் என்பவரது குழுவினர் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இழந்த நித்திரையை ஈடு செய்யும் வகையில் வார இறுதியிலோ அல்லது வசதி கிடைக்கும் நேரத்திலோ கூடுதலான உறக்கத்தை தருவித்து உடலில் உற்பத்தியாகும் கணைய சுரப்பு நிலையத்தில் 29 வயது நிரம்பிய நல்ல ஆரோக்கியமான 19 ஆண்களிடம் நடாத்திய பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

எனவே, இழந்துவிட்ட நித்திரையின் குறை பாட்டை நிவர்த்தி செய்ய வசதி கிடைக்கும் போது கூடுதலாக நித்திரை செய்வதினால், இரண்டாந்தர நீரிழிவிலிருந்து பாதுகாக்க முடியுமென ஆராய்ச்சியாளர்கள் கூறுவது இனிக்கும் செய்தியல்லவா?

விசேட கண்ணாடி அணியாமலே திரையில் 3டி காட்சிகள்

தொழில்நுட்பம் ஒவ்வொரு துறையிலும் மாறிவரும் இவ்வேளையில், அதை சினிமா இரசிகர்களும் அனுபவிக்க வேண்டாமா? 3டி தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் சினிமாப் படங்களை செருக வேண்டிய அவசியம் இருப்பது சிலருக்கு சிரமமாக இருப்பதை உணர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அத்தகைய கண்ணாடிகளை அணியாமலே இயற்கையான கண்களுடன் 3டி தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட காட்சிகளை திரையில் காணமுடியுமென தெரிவித்துள்ளனர்.

டாக்டர். டேவிட் பற்றால் தலைமையின் கீழ் இயங்கும் குழுவினருடன், கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் எச்.பி. ஆய்வு கூடத்தில் உருவாக்கிய தொழில்நுட்பத்தின் மூலம் கண்கள் இரண்டுக்கும் வெவ்வேறு விதமான தோற்றங்களைத் தரக்கூடிய வகையில் காட்சிகள் ஒளிபரப்படும். இதுவே, 3டி தொழில் நுட்பத்தின் பொறிமுறையாக இருப்பதினால் விசேடமாக உபயோகிக்கப்படும் மூக்குக் கண்ணாடிகளை அணிந்து கொண்டு திரையில் தோன்றும் காட்சிகளைக் காணவேண்டிய அவசியம் இல்லாது போகும்.

மேற்கூறிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திரையில் ஏற்கனவே நவீன ஸ்மார்ட் போன்களில் பொருத்தப்பட்டு பாவனையில் வந்து விட்டதாகவும், இந்தப் பொறிமுறை, தொலைக்காட்சித் திரைகள், சினிமாத் திரைகள் வரை விஸ்தரிக்கப்படும் வாய்ப்புகள் நெருங்கியுள்ளதாகவும், இதன் பாவனை நடைமுறைக்கு வர சில வருடங்கள் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

மருத்துவத்துறையில் அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளும் வைத்தியர்களுக்கு இந்தப் பொறிமுறை உதவப் போவதாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். இதற்கும் மேலாக விண்வெளியில் நடமாடும் விண்கப்பல்களுக்கு தேவைப்படும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்கும் இப்புதிய பொறிமுறை வருங்காலத்தில் வெகுவாகக் கை கொடுக்கப் போவது நிச்சயமென டாக்டர் டேவிட் அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

3டி தொழில்நுட்பத்தில் வெளிவந்த LITE of PI அதன் தத்ரூபமான அனுபவங்களை, இயற்கையான கண்களுடன் காணக் கிடைக்கவில்லையே என்பது தான் வருத்தம்.

பிரித்து ஆள்: பிரித்து அழி

ச.ச.முத்து

ஆள்வதற்கான பொதுவிதி இது. அதிலும் இன்னொரு இனத்தை ஒடுக்கி அடக்கி ஆளும் ஆட்சியாளர்கள் கட்டாயம் இந்த பொதுவிதியை பின்பற்றியே அதிநீண்டகாலம் தமது ஆட்சியை அந்த மக்களின் முதுகெலும்பின் மீது நடாத்திக் கொண்டிருப்பர்.

நீங்களும் வெல்லலாம் போட்டியில் விடையை கண்டுபிடிப்பதற்காக கொடுக்கப்படும் 'க்ளுக்கள்' போல இருக்கின்றதா?... விடை மிகவும் சுலபம்.

சரியானவிடை: பிரித்து ஆள். என்பதாகும்.

சிங்களதேசம் இந்த பிரித்து ஆளும் கோட்பாட்டை மிகவும் தேர்ந்த முறையில் செயற்படுத்தி எம்மீதான தனது பேரினவாத ஆட்சியை தொடர்கிறது. ஆள்வதற்காக பிரி, பிரித்து வைத்து ஆள், பிரித்து அழி என்ற ஆட்சி விதிகளை நடைமுறைப்படுத்தி முள்ளிவாய்க்காலில் ஒருபெரும் இனப்படுகொலையை நிகழ்த்தி எமது இனத்தை சிதறவைத்துவிட்ட போதும், இன்னும் சிங்கள பேரினவாதத்தின் இனவெறி அடங்கவில்லை.

மகாவம்ச கனவுகளிலும் தொன்மை ஆதிக்க நினைவான துட்டகைமுனு வாளேந்தியபடி வரும் வெற்றிக் கனவுகளிலும் முழுதாக மூழ்கியிருக்கும் சிங்கள இனம் எம்மை இன்னும் இன்னும் பிரிவுகளும் பேதங்களும் பிளவுகளும் நிறைந்த ஒரு மக்கள் கூட்டமாகவே தொடர்ந்து வைத்திருந்து ஆளவே விரும்புகின்றது.

இந்த பிரித்து ஆளும் தத்துவம் மேற்கு நாடுகள் ஆசியாவிலும், ஆபிக்க அமெரிக்காவிலும் நாடுகளை பிடித்து ஆட்சிசெய்தபொழுதில் ஏற்பட்ட ஒரு ஆட்சி அதிகாரத்துக்கான நடைமுறைத்தத்துவம் என்று இருந்தாலும் அதற்கு முன்னரேயே எமது பஞ்சதந்திர கதைகளிலும் வாய்வழியான நீதிக் கதைகளிலும் எமக்கு சொல்லியாயிற்று.

அதிலும் 15ம்நூற்றாண்டின் மிகப்பெரும் தத்துவஞானியும் நவீன அரசியல் விஞ்ஞானத்தின் தந்தை என்று சொல்லப்படுபவருமாகி மாக்கிய வல்லி தனது போர்க்கலை என்ற நூலின் நான்காவது பாகத்தில் இதனை அழகாக சொல்லி வைத்திருக்கிறார். இதெல்லாம் எழுத்திலும் தொகுப்பிலும் வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரேயே சிங்கம் முயல், விறகுக்கட்டு விறகுவெட்டி, வேடன் வலை பறவைகள் என்று உவமான உவமேயங்களுடன் பிரித்து அழி தத்துவத்தும் எம் முன்னோரின் முன்னோர்கள் மூலமாக வாய் வழிக்கதைகளாக எம் காதுகள் வரை வந்தனதான்.

அதே கர்ண பரம்பரைக் கதைகள் சிங்கள இனத்தின் காதுகளிலும் அவர்களின் முன்னோரால் ஓதப்பட்டே இருந்தாக வேண்டும். ஏனென்றால் 2009க்கு பிறகு இந்த இனம் இனி எழவே முடியாது என்று எங்களில் பலரே நினைத்து அடிபணிவு அரசியல்தான் இனி தமிழருக்கான பாதையாகவும் பல்லவியாகவும் இருக்க வேண்டும் என்று கதைத்தும், நகர்ந்தும் வரும் பொழுதில் சிங்களம் என்ன செய்துகொண்டிருக்கிறது பாருங்கள்.

ஏதோ எங்காவது எஞ்சியிருக்கும் கொஞ்சம் மிச்சம் மீதி தேசிய உணர்வும் மீண்டும் தமிழர்களுக்குள் எழுந்துவிடக்கூடாது, எழுந்துவிட அனுமதிக்கவும் முடியாது என்று சிங்களம் இன்னும் செயற்படுகின்றது. தமிழர்களில் இருந்து சிங்களத்துடன் சேர்ந்து நிற்கும் ஒட்டுக்குழுக்களைக்கூட இரண்டு இரண்டாக பிரித்து வைத்து காய்நகர்த்தும் ராஜபக்ச கும்பல் மிக முக்கியமான ஆணிவேரையும் அசைத்து அதனிலும் பிரிவுகளை உருவாக்கி வருகிறார்கள்.

அண்மைக்காலமாக 2009 மே மாதத்துக்கு பின்னர் தமிழீழம் எங்கும் நடைபெற்றுவரும் ஊர்ச்சண்டைகளும் குழுச்சண்டைகளும், ஒரே ஊருக்குள்ளேயே நடக்கத் தொடங்கியிருக்கும் ஒழுங்கைப் போர்களும், வீதிச் சச்சரவுகளும் என்ன விடயத்தை சொல்லி நிற்கின்றன. ஊர்கள், கிராமங்கள் பல ஒரு தொகுப்பாக இணைவதே தேசம் என்றும் தேசிய உணர் வென்றும் உருவெடுக்கின்றது.

இந்த கிராமங்கள், ஊர்கள் ஒன்றுக்கொன்று எதிராக வெறிகொண்டு நின்றால் ஒரு போதும் தேசம் என்ற கட்டமைப்பு உருவாக முடியாது. தேசியம் என்ற உணர்வு எழவே முடியாது. அடக்குமுறைச் சிங்களவனின் கோர வெறியாட்டத்தை விட அயலூரான் மீதான வன்மம் பெரியது என்ற நினைப்பை மிக இலகுவாக எங்கள் கிராமங்கள்தோறும் ஊர்கள் முழுதும் சிங்களத்தின் ஏஜன்டுகள் மெது மெதுவாக ஆனால் திடமாக பரப்பி வருகின்றார்கள்.

வடக்கு-கிழக்கு என்று மாகாண ரீதியான பிரிப்பில் ஆரம்பித்து பின்னர் மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள், ஊர்கள் என்று இன்னும் இன்னும் நெருக்கி நெருக்கி எம்மை பிளவுபடுத்தி இப்போது ஒரே ஊர்களுக்குள்ளேயே வேறுவேறு பகுதிகளுக்கான ரத்தக் களரிகளை செம கச்சிதமாக செயற்படுத்தி வருகிறார்கள். எவ்வளவு ஆழமாக எமக்குள் பிரிவுகளையும் பேதங்களையும் பிளவுகளையும் உருவாக்கமுடியுமோ அவ்வளவு ஆழமாக எமக்குள் பிரிவுகளை தூவுகின்றார்கள். இதற்கு ஏற்றது போல இலகுவில் உணர்ச்சியை விசிறக் கூடிய தாக மதுப்பழக்கத்தை ராணுவத்தினரும் அரச ஒட்டுக்கழுக்களுமே முன்னின்று ஊக்கப்படுத்துகிறார்கள். இவற்றுக்கு எதிராக எதுவுமே செய்ய முடியாமல் வெறுமனே கைகளை பிசைந்த படியே எமது தாய்நிலத்து மக்கள் நிற்கிறார்கள்.

சிங்களத்தின் இந்த பிரித்தாளும் சதியை இனங்கண்டு கொண்டாலும்கூட அதற்கெதிராக எதுவும் செய்யமுடியாத ஒரு வெறுமையான நிலையே அங்கு நிலவுகின்றது. இதனை தடுக்காதுவிட்டால் முப்பது வருடங்களாக எமது மாவீரர்கள் சிந்திய ரத்தத்துக்கும் அர்ப்பணங்களுக்கும் அர்த்தமே இல்லாது அழிக்கப்பட்டு விடுவோம். ஆனால் இந்த நிலை இன்னும் இன்னும் ஆழமாக தொடருமானால் நாம் ஒரே தேசிய இனமென்ற உணர்வும் எம் அனைவருக்காகவுமே ஊர்பேதமின்றி எங்கெங்கோ இருந்து வந்து எமது தேசப்புதல்வர்கள் உயிரையும் அர்ப்பணித்து போராடினர் என்ற நினைப்பும் மறைந்துவிடும்.

இந்த உயிரோட்டமான உணர்வுகள்தான் எம்மை ஒரு இனமாக ஒரு இழந்துவிட்ட தேசமொன்றின் மக்களாக இணைத்து வைத்திருக்கின்றது. இது தூர்ந்துவிட்டால் நாம் வெறுமனே ஒரு நாடோடிக் கும்பல் போலவே ஆக்கப்பட்டு விடுவோம். சிங்களம் எமது தேசியத்தின் மீது தொடுத்திருக்கும் ஒருவிதமான உளவியல் யுத்தமான இதனை நாம் வென்றாக வேண்டும். இதற்கான பொறுப்புகள் தாய்மண்ணிலும், புலம் பெயர் தேசங்களிலும் இருக்கும் அனைத்துதரப் பினரிடமும் இருந்தாகவேண்டும்.

தாய் மண்ணிலும், புலம்பெயர் தேசங்களிலும் செயற்படும் கிராமச்சங்கங்கள், ஊர் அமைப்புகள், பாடசாலை சங்கங்கள், விளையாட்டு கழகங்கள் என அனைத்தும் சிங்களதேசத்தின் இந்த பிரித்தாளும் வேலைத் திட்டத்தினை முறியடிக்கும் முனைப்புகளை முன்னெடுத்தே ஆக வேண்டும். எதிரி எம்மை எப்போதுமே பிரித்து பிரித்து அழிக்கவே முயலுவான். நாம் அதற்கெதிராக எம் ஒற்றுமையை எம் ஒன்றிணைவை இன்னும் இன்னும் அதிகமாக வெளிக்காட்டுவதே எதிரியை தோற்கடிக்கச்செய்யும்.

நாம் தோற்றுப்போகமுடியாது.

வென்றாக வேண்டுமானால் ஒன்றாக வேண்டும் !

ஈழத்து வல்வெட்டித்துறை கடலோடிகள்

அன்னபூரணி 75ஆவது பவளவிழா



- கடல் கடந்து சாம்ராஜ்யத்தை உருவாக்கிய சோழர்கள்-

வல்வை வாசு நேரு

பத்தாம் நூற்றாண்டின் பின் பாதியில் மூன்று சக்தி வாய்ந்த பேரரசுகள் உலகில் உதயமாயின. எகிப்தில் ராட்டிமிட்ஸ், சீனத்தில் சாங் இந்தியாவில் சோழர்கள் மூவருமே இந்திய பெருங் கடல் வணிகத்தில் பெருமளவு ஈடுபட்டனர்.

தமிழர் வரலாற்றில் பொற்காலமாக அமைந்தது புலிக்கொடியுடன் ஆட்சி செய்த இராச இராசன், மகன் இராசேந்திர சோழன். அவர்கள் காலடியில் வட இந்தியா வீழ்ந்தது. அதனை தொடர்ந்து கடல் கடந்து கிழக்காசியாவில் பல நாடுகள் கைவசமாகியது.

தமிழர் வரலாற்றில் பொற்காலமாக அமைந்தது புலிக்கொடியுடன் ஆட்சி செய்த இராசஇராசன். அவர்கள் காலடியில் இந்தியா வீழ்ந்தது.

இராசஇராசன் நிர்வாகமும், கட்டமைப்புக் கொண்ட பெரும் கடற்படையும் மகன் இராசேந்திரனுக்கு ஒரு அடிமைத்தளமாகவும், பெரும் வாய்ப்பை அமைத்துக் கொடுத்தது. இதுவே பரந்துபட்ட தமிழ் இராச்சியத்தை அமைக்க உதவியது. இராசேந்திர சோழனும் அவன் தந்தையும் ராஷ்டிர கூடர்களை போரில் வென்று வடமேற்கு கர்னாடகா, தெற்கு மகாராஷ்ரா வரை விரிவுபடுத்தி பின்பு துங்கபத்ராவை தாண்டி சாணக்கியர்களை வீழ்த்தினார்கள்.

பனலாரி மனயகேடா நாட்டு மன்னர்கள் சோழர் படைகள் வருவதைக் கண்டதும் பயந்து போய் மேற்கு தொடர்ச்சி மலைகளில் ஒளிந்து கொண்டார்கள். வடக்கு ஹதராபாத்தையும் கைப்பற்றினார்கள். பாண்டிய மன்னன் இலங்கை மன்னனிடம் மகுடத்தை ஒப்படைத்து விட்டு ஓடிப் போனான். அதற்காக ஈழத்துக்கு படையெடுத்த மகுடத்தை சிங்கள மன்னன் மகிந்தனிடம் தட்டிப்பறித்து, அவனை கைது செய்து, சோழர் சிறையில் 12 ஆண்டுகள் இருந்து இறந்து போனான்.

இராசேந்திரனுடைய வங்கப் படையெடுப்பு அவனுடைய கடற்படை தெற்காசிய நாடுகளுக்கு படையெடுப்பதற்கான முன்னோட்டமாகவே இருந்தது. இந்திய பெரும் கடலும், வங்காள விரிகுடாவும் பிற்கால சோழர்களின் நிலப்பரப்பாக நினைக்கும் அளவு மாற்றினார்கள். கடலும், காற்றும் அவர்கள் கப்பல் கரைக்கு கட்டுப்பட்டன. சோழர்கள் கடலை தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள். வணிகக் கப்பல்கள் பாதுகாப்பாக சென்று வர இரவும், பகலும் ரோந்துப் பணியில் இருந்து பாதுகாப்புக் கொடுத்தனர். வர்த்தகம் செழிக்க உருவாக்கப்பட்ட பின்னர் சோழர்களின் பெரும் கப்பல் படையாக உருவாகியது. சோழர்கள் கடலின் தோழர்கள் என்ற நிலையில் ஏற்பட்டது.

'நளியிரு முந்நீர் நாலாய் ஓட்டி

வளிதொழில் ஆடை உரவோன் மருக

களியியல் யானை கரிகால் வளர'

என்கிறார் வெண்ணிப்பறந்தலைப் போரில் வெற்றி பெற்ற முதல் கரிகாலனைப் பாடிய செண்பாதப் புலவர் வெண்ணிக்கு யத்தியார்.

இந்த முதல் கரிகாலனுக்கு மிகமிக முன்னோராகிய தமிழ் மன்னன் ஒருவன் காற்றைப் பயன்படுத்தி கப்பல் செலுத்தும் தொழில்நுட்பத்தைக் கற்று நடுக்கடல் ஊடே கப்பலோட்டிச் சென்ற வனாதலால், அது போன்ற புகழ் பெற்ற பரம்பரையில் வந்தவனே என முதல் கரிகாலனை வெண்ணிக்குயத்தியார் புகழ்ந்து பாடுகிறார்.

முதல் கரிகாலனின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு ஆகும். ஆகவே, 3ஆம் நூற்றாண்டுக்கு வெகுகாலம் முன்பே காற்றின் தொழில் நுட்பம் அறிந்து நடுக்கடலில் கப்பல் செலுத்துவதில் தமிழர்கள் திறமையும் வல்லமையும் உடையவர்களாக இருந்தனர் என்பதனை இப் பாடல் எடுத்துரைக்கிறது.

ஆரம்பகால தமிழர் கடல் வணிகம் என்பது இந்தோனேசியத் தீவுகளில் இருந்து தமிழகக் கடல் வழியாக பாரமீக வளைகுடா வரையில் கடற்கரை ஓரமாக மட்டுமே, நடந்து வந்தது. பின்னரே அது நடுக்கடல் வணிகமாக பரிணமித்து அதன் பின்னரே அது மேற்கே எகிப்திற்கும் ரோமுக்கும் கிழக்கே சீனா வரையிலும் பரவியது.

பராமீக வளைகுடாவைத் தங்கள் வணிகத்திற்கான மையமாகக்கொண்டு வணிகப் பொருட்கள் வாங்க, விற்க ஒரு வணிக முறையை உருவாக்கிக் கொண்டனர். அத்துடன் ஆபிரிக்கா நாட்டவருடனும் தொடர்புகள் கொண்டிருந்தனர்.

பழம் தமிழர்கள் ஆமைகளின் வழித் தடத்தை பின்பற்றி கடல் வழிகளைக் கண்டறிந்து உலகம் முழுவதும் கடல்வழி பயணம் மேற்கொண்டனர் என்று ஒருங்கிணைந்த பெரும்கடல் கலாசார, ஆய்வு அறக்கட்டளை தலைவர் சிவ. பாலசுப்பிரமணி என்ற ஓரிசா பாலு தெரிவித்தார். மேலும் ஆமைகள் இனப்பெருக்கத்திற்காக கடல் நீரோட்டத்தைப் பயன்படுத்தி 150, 180 நாட்கள் பயணிக்கின்றன. இதனை அவதானித்த தமிழர்கள் ஆமைகளைப் பின்பற்றி கடல்நீரோட்டத்தைக் கண்டறிந்து மத்திய தரைக்கடல் தென் கிழக்கு ஆசியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கு கடல் வழிப்பயணம் மேற்கொண்டனர். முந்நீர் பழந்தீவு பன்னீராயிரம் சோழர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த 20 ஆயிரம் தீவுகளில் 9000 தீவுகள் நீரில் மூழ்கி விட்டன. இவற்றை சோழர்கள் எப்படி கணக்கிட்டார்கள் என்பது வியப்புக்கும் ஆய்வுக்கும் உரியது.

கப்பல் கட்டுமானத்துக்கு மற்ற நாட்டவர்கள் 2 மரங்களைப் பயன்படுத்த தமிழர்கள் 20 வரையான மரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். பாறைகள் மோதினால் உடையாமல் இருக்க கப்பலின் அடிப்பகுதியில் கழட்டி விடும்படியான கட்டமைப்பைக் கொண்ட தொழில்நுட்பத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தமிழர்கள் பின்பற்றி வந்துள்ளனர். பிற்காலத்தில் தென்னிந்தியர்களிடம் இருந்து ஐரோப்பியர்கள் கற்றுக் கொண்டனர்.

ஆமைகளே தமிழர்களின் கடலோடும் வாழ்வுக்கு பெரும் உதவிக்கரமாக இருந்திருக்கின்றன. பாண்டியர்கள் காளை, மீன் ஆகியவற்றோடு ஆமை இலச்சினைகளையும் பயன்படுத்தியுள்ளனர். தமிழகத்தில் 79 கோயில்களில் கடல் ஆமை சிற்பங்கள் உள்ளன. கிரேக்க பாண்டிய நாணங்களில் ஆமை உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

தமிழகப் பெண்கள் மகப்பேற்றுக்காக தாய் வீடு செல்வார்கள். இந்த வழக்கம் விலங்குகளில் ஆமைக்கும் மட்டும் உண்டு. இனப் பெருக்கத்துக்காக ஆமைகள் தங்கள் பிறந்த பகுதிக்குச் செல்கின்றன. தமிழகத்தில் மட்டும் இந்தப் பண்பாடுக் கூறு உள்ளது, ஆராயத்தக்கது. பிராங்கிளையன், ஜோசப் கொலம்பஸ் ஆகியோர் கண்டறிந்த கடல் வழித்தடங்களும் ஆமைகளின் வழித்தடங்களும் ஒன்று தான். ஆமைகள் இனப்பெருக்கம் செய்யும் கடலோரப் பகுதிகளே பழங்காலங்களில் துறை முகமாகச் செயற்பட்டுள்ளன. பர்மாவிலிருந்து தேக்கு மரங்களை வெட்டிக் கடலில் போட்டால் அவை தாமாகவே தனுஸ்கோடி வந்தடைந்துள்ளன. ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்த கடல் நீரோட்டத்தை தமிழன் பயன்படுத்தியுள்ளான்.

'நளியிரு முன்னிரு நாவாய் ஓட்டி' தமிழல் நாவாய் என்ற சொல் தொன்று தொட்டு கப்பலைக் குறிப்பதாகும். ஆங்கிலத்தில் கையாளப்படும் 'Waval', 'Navy' போன்ற சொற்கள் தமிழ் மொழிலிருந்து பிறந்த வார்த்தை என்ற செய்தி நம்மை தலை நிமிர வைக்கிறது. கப்பலும், கப்பல் வணிகமும் தொன்று தொட்டு தமிழர்களின் கைவந்த கலையாக இருந்து வந்திருப்பதை சரித்திரம்? நமக்கு எடுத்துரைக்கின்றது.

பர்மாவிலிருந்து தேக்கு மரங்களை வெட்டிக் கடலில் போட்டால் அவை தாமாகவே தனுஸ்கோடி வந்தடைந்துள்ளன. ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்த கடல் நீரோட்டத்தை தமிழன் பயன்படுத்தியுள்ளான்

சங்க இலக்கியங்களில் அம்பி, நாவாய், வங்கம், படகு, தோணி, பங்றி, திமில் போன்ற பல வார்த்தைகள் கடற்போக்குவரத்திற்கு பயன் படுத்தப்பட்ட கலன்களை குறிப்பதை நாம் அறியமுடிகிறது. இதில் திமில், அம்பி இவை யிரண்டும் மீன் பிடித்தலுக்கும் பெரிய கப்பலிலிருந்து பொருட்களை துறைமுகங்களுக்கு கொண்டு வரவும் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகிறது. வங்கம், நாவாய் என இவை யிரண்டும் நீண்ட கடற்பயணத்திற்கும் கடல் வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கட்டுமரம் என்ற தூய தமிழ் வார்த்தை 'கட்ட மரான்' (Catamaran) என்ற ஆங்கில வார்த்தையாய் உருமாறிப் போனதைப் போன்று 'நாவாய்' என்ற தமிழ் வார்த்தை Navy, Naval என்று ஆகியிருக்கிறதென்பது நமக்கு நன்கு விளங்குகிறது.

'கப்பல்' என்ற தமிழ்ச்சொல் கூட உலகெங்கிலுமே வெவ்வேறு வகையில் உருமாறி வழங்குகிறது. கப்பல் - Sip – Ship

ஆதித்தமிழர்கள் கடல் வாணிபத்தில் சிறந்தவர்கள் இதற்கான சான்றுகள் உலகெங்கிலும் கிடைக்கின்றன. மலேசியாவில் தமிழ்க் கல்வெட்டு, தாய்லாந்தில் சங்ககால நாணயங்கள், கம்போடியக் கல்வெட்டில் தமிழ் மன்னனின் பெயர் சாதவான மன்னர் நாணயத்தில் கப்பல் படம், ஜாவாவில் கப்பல் சிற்பம் சங்க இலக்கியத்தில் யவனர் பற்றிய குறிப்புகள் ரோமானிய மன்னன் அகஸ்டஸ் அலையில் பாண்டிய மன்னனின் தூதன், நியூசிலாந்தில் கப்பல் மணி, தமிழன் பயணித்த கரையோர நகரங்களின் பெயர்கள் தமிழ்ப்பெயர்கள் இப்படி தமிழன் கடல் வணிகத்தின் சிறப்புக்கு சான்றுகள் நீண்டு கொண்டே போடும்.

- தொடரும்

FM Carpets
விலையில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்
20% OFF
SPECIAL OFFERS FOR LANDLORD & ESTATE
இலவச மதிப்பீடு
இலவச ஃபிட்டிங்
நட்புடனான சேவை
HUGE STOCK VARIETY OF COLOURS FAST FITTING
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
MANY OFFERS IN STORE www.fmcarpets.com
020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, Illford, IG3 8EZ

பராமரிப்பாளர்கள் தேவை
வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு
இரண்டு பணிப்பெண்கள் தேவை
Night Sleep (6.30pm to 9.30am)
Day (10.30am to 1.30pm) 5 Days
Student Visa, Income Support இருக்கும் ஆட்களுக்கும்,
விசா இல்லாதவர்களுக்கும் வேலை இல்லை.
New Malden, Sutton, Croydon, Mitcham, Tooting
ஏரியாவிலுள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
07932790650 / 07861006469
Please Call between 4pm to 8pm

சிங்கம் - சூர்யாவின் படங்களிலேயே TOP 5 படங்களில் ஒன்று ஹரியின். விறுவிறுப்பான திரைக்கதையில் கர்ஜித்து வெற்றி நடை போட்டது. தன்னை வைத்து ஹிட் அடித்த இயக்குனர்களின் படங்களில் திரும்பவும் நடிப்பது சூர்யாவின் வழக்கம். முருகதாஸ் கஜினி, ஏழாம் அறிவு கே.வி.ஆனந்த் அயன், மாற்றான் ஆனால் ஹரி மேற் கூறியவர்களை போல் அல்லாமல் சூர்யாவின் ஆஸ்தான இயக்குனர் வேல், ஆறு, சிங்கம் என ஒரு படமும் தோல்வி அடையவில்லை. இது போதும் சிங்கம்-2 மீதான எதிர் பார்ப்பு ஏவுகணை வேகத்தில் இருப்பதற்கு கண்டம் விட்டு கண்டம் பாய ஹரியால் ஏவப்பட்ட ஏவுகணை குறிக் கோளை அடைந்ததா இல்லையா எனும் ஆவல் காரண மாக வாழ்க்கையிலேயே முதல் தடவையாக முதல் காட்சி பார்க்க போயிருந்தேன்.

சிங்கம் -2 கதை என்று ஒன்றை உங்களுக்கு நான் சொல்லப் போவதில்லை அதற்கான காரணத்தையும் சொல்லுவதாய் இல்லை. ஏனெனில் கதையும் பெரிதாய் இல்லை. மேலோட்டமாய் கதை என்னவெனில் 'நேரம்' படத்தில் வருவது போல இரண்டு குட்டி வில்லன்கள், ஒரு மெயின் வில்லன். சர்வதேச குற்றவாளிகளான இந்த வில்லன்களை இந்தியன் போலீஸ் எப்படி சாமர்த்தியமாக பிடிக்கிறார் என்பதுதான் .

எனக்கு படத்துக்கு போக முன்னரே பெரிய சந்தேகம் அனுஷ்கா இருக்கும் போது ஹன்சிகா ஏன் படத்தில், அது சரி போலீஸ் படம் தானே ஏதாவது வம்பில அனுஷ்கா சாக ஹன்சிகா ஹிரோயின் ஆவார் என்று எந்த பாமர தமிழ் மகனும் ஊகிக்க கூடிய ட்விஸ்ட் வைக்க "மசாலா படம் தானே, எதை வேண்டுமானாலும் காட்டிவிடலாம் என் பதை விடுத்து திரைக்கதையில் எந்த ஓட்டைகளுமின்றி காட்சிகளை அமைத்து சாதனை படைக்கும்" ஹரி என்ன அவ்வளவு அறிவில்லாத பயலா ?

படத்தின் மிகப்பெரிய திருப்பமாக ஹரி வைத்த ட்விஸ்டை இங்கே சொன்னால் படத்தின் சுவாரசியம் குறைந்து விடும் என்பதால் அதை தியேட்டரில் அல்லது தொலைக்காட்சியில் போடும்போது காண்க.

ஹரி படத்தின் வழமையான டாட்டா சுமோ, அருவாள், வெள்ளை வேஷ்டி சட்டையை formality க்கு காட்டியிருந் தாலும், இது இன்டர்நேஷனல் படம் என்பதால் விமானம் கப்பல், நவீன ரக கார் என அடி பின்னுகிறார் படம் ரெண்டே முக்கால் மணி நேர படமாக இருந்தாலும், எந்த இடத்திலும் பார்வையாளர்களை தூங்க வைக்காமல் இருப் பதில் சூர்யாவுக்கு அடுத்த பங்கை படத்தின் செகண்ட் ஹிரோவான சிவப்பு நிற போலீஸ் ஜீப் செய்கிறது.

படத்தில் ஒரு இலங்கை வில்லனும் வருகிறார். ஆம், ஒரு சிங்கள வில்லனை அழைத்து சிங்கத்தை போட்டுத் தள்ளும் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள் வில்லன் குழு. ஆனால் இறுதியில் தாங்களே அவனை போட்டுத்தள்ளியி ருந்தார்கள். ஆஹா.... முருகதாஸ் ஏழாம் அறிவு என்று ஒரு படத்தை எடுத்து விட்டு இதை பார்க்காதவன் தமிழனே இல்லை எனும் அளவுக்கு மீடியா முழுதும் விளம்பரம் செய்ய வேண்டி இருந்தது. ஆனால் ஹரியின் Sweet and Simple 3 நிமிட காட்சி மூலம் தமிழர்கள் புலம் பெயர்ந்து இருக்கும் நாடுகளில் அமோக ஆதரவை பெறுகிறார் ஹரி.

ஹரி தான் இப்படி என்றால், இயக்குனரின் ஒவ் வொரு காட்சிகளுக்கும் குரல் கொடுத்திருக்கிறார் சூர்யா. சூர்யாவின் குரல் பிரமாதம். தமிழ் சினிமா வரலாற்றி லேயே தியேட்டரில் படம் ஓடும் போது ஒரு பய தூங்க முடியாது என்ற மகத்தான சாதனையை சிங்கம்-2 படைத்து இருக்கிறது. எங்கேயாவது ஒரு பாடல் காட்சிக்கு தூங்கு வோம் என முடிவெடுப்பவர்களையும் தனது இனிமை யான குரல் வளத்தால் எழுப்பி விடுகிறார் சூர்யா . அதுவும் இனிமையான ஆங்கிலத்தில் வில்லனுடன் சூர்யா பேசும் காட்சிகளுக்கு உருகாதவர்கள் எவருமே இருக்க முடியாது.

விவேக் படத்தில் நடிக்காமலே விட்டு இருக்கலாம் ஏனெனில் அந்த கரெக்ட்டர் நகைச்சுவை செய்யும் பாத்திரம் இல்ல. முக்கிய ஆபிரிக்க வில்லன் மிரட்டி இருக்கிறார் ஆனாலும் ஹிரோவுக்கு போட்டியாக தானும் ஆங்கிலத்தில் கத்துவது சகிக்க முடிய வில்லை, மேலதி காரியாய் இருக்கும் விஜயகுமார் சூர்யா சொல்லுவதை எல்லாம் ஏன் எதுக்கு என்று யோசிக்காமல் செய்வ தெல்லாம் கொஞ்சம் ஓவரோ என்று தெரிகிறது. படம் முழுவதும் சண்டை படம் முடிந்து வரும் போது மண்டைக் குள்ளே டாட்டா சுமோ ஓடுவது போல் தோன்ற செய்வதில் ஹரி இருக்கிறார்.

இப்படியான படங்களுக்கு நாயகனுக்கு சமனான முக்கி யத்துவம் வில்லனுக்கு கொடுப்பதிலேயே தான் படத்தின் பெறுதி கூடுகிறது. பாட்சா ,கில்லி ஏன் சிங்கம் கூட இதே வகை தான். சிங்கத்தில் என்று பிரகாஸ் ராஜ் கம்பீரமாய் கர்ஜிப்பது எல்லாம் இங்கே மிஸ்ஸிங். முக்கிய வில்லனின் நடிப்பு நன்றாக இருந்தாலும் மற்றைய இரு வில்லன்களும் நகைச்சுவை நடிகர்கள் போல் இருக்கிறார்கள். வில்லனை கைது செய்து சிறையில் அடைத்து விட்டு வில்லன் தப்பிப் பான் என்று தெரிந்தும் திறப்பை கொண்டு செல்லும் காட்சி படு மொக்கை தனம். சிங்கத்தின் (01) இறுதிக் காட்சி களே படு மொக்கையாக இருக்கும். இது ஒரு படி மேலே.. கடைசியில் கப்பல் காட்சி கலாய் படும்.ஆதவன் கிளை மாக்ஸ் மன்னிக்கப்படும்.

சூர்யா - சிறந்த நடிகர் புதுப்புது தன்னை வருத்தி புதுப் புது பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து மக்கள் மனதை கவர்ந்தவர் விஜய் குருவியாய் பறப்பதையும் சுறா வாய் நீந்துவதையும் கண்டு பயந்த மக்களின் அனேகமாக பெண்களின் அபிமான நாயகனாக திகழ்ந்தவர் .இப்போது விஜய் தனது பாதையை மாற்றி இருக்கையில் சூர்யா அந்த இடத்தை கைப்பற்றி facebook போராளிகளின் செல்லப் பிள்ளையாய் மாறி இருக்கிறார்.

ந.அகிலன் - வண்ணப்பூக்கள் வலைப்பதிவு

சினித்துளி

ஜெக ஜால புஜபல தெனாலிராமன்

ஜெக ஜால புஜபல தெனாலிராமன் படத்தில் வடிவேலு வுக்கு 42 மனைவிகள், 56 பிள்ளைகள் இருப்பது போல திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளதாம். இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு வடிவேலு நடித்து வரும் புதிய படம், ஜெக ஜால புஜபல தெனாலிராமன். இப்படத்தை யுவராஜ் இயக்குகிறார். ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக் கிறது. டி.இமான் இசையமைக்கிறார். இதன் முதற்கட்ட படப்பிடிப்பை சென்னையில் நடத்தி முடித்துள்ளதுள் ளனர். கிட்டத்தட்ட 40 சதவீத காட்சிகள் முடிந்து விட்டன.

ஏற்கெனவே அவர் இம்சை அரசன் 23-ம் புலிகேசி படத்தில் நடித்திருப்பதால், அதன் சாயல் இல்லாத மாதிரி நடிக்க பயிற்சி மேற்கொள்கிறார்களாம்.

படமாகும் இளையராஜாவின் வாழ்க்கை !

எஸ்.ஜே.சூர்யா இயக்கி நடிக்கும் 'இசை' படம், முழுக்க முழுக்க இளையராஜாவின் வாழ்க்கையை அடிப் படையாகக் கொண்டு எடுக்கப்பட்டு வருகிறதாம். படத் தில் ஏ.ஆர்.ரஹ்மான் தோற்றத்தில் எஸ்.ஜே.சூர்யா நடித் திருந்தாலும், இளையராஜாவின் கதைதான் அது என அடித்துச் சொல்கிறார்கள். 'இசைஞானி' என்பதில் 'ஞானி' யைத் தூக்கிவிட்டு, 'இசை'யை மட்டும் பெயராக வைத் துள்ளாராம் எஸ்.ஜே.சூர்யா இளையராஜாவைப்பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் படத்தில் இருக்கிறதாம்.

ஒட்டுமொத்தமாக இளையராஜாவின் வாழ்க்கையை அன்று முதல் இன்று வரை அப்படியே பிரதிபலிக்கும் வகையில் படம் இருக்குமாம்.

சுந்தர்.சி இயக்கத்தில் சுந்தர்.சி

'தீயா வேலை செய்யணும் குமாரு' வெற்றிக்குப் பிறகு தன்னுடைய அடுத்த பட வேலைகளில் பிஸியாகி விட்டார் சுந்தர்.சி. இந்த முறை அவரே ஹிரோவாக நடிக்கப் போகிறாராம். பல்வேறு வெற்றிப் படங்களை இயக்கிய சுந்தர்.சி, தான் முதலில் இயக்கிய 'முறை மாமன்' படத்தி லும், அருணாச்சலம் படத்திலும் சிறிய வேடத்தில் நடித் தார். பிறகு இயக்கத்தில் கவனம் செலுத்தத் தொடங் கினார். ஹிரோ வேஷம் கட்டி 11 படங்களில் ஹிரோ வாக நடித்தார்.

இதுவரை நடித்த 11 படங்களிலும் 10 படங்களில் பிறருடைய இயக்கத்தில் நடித்த சுந்தர்.சி, இரண்டாவது முறையாக தன்னுடைய இயக்கத்திலேயே நடிக் கிறார். படத்துக்கு 'அரண்மனை' என பெயர் வைத்திருக்கிறார்கள்.

அக்ஷன் கிங் தனுஸ்

துள்ளுவதோ இளமை, காதல் கொண்டேன் போன்ற படங்களில் நடித்து வளர்ந்து வந்த தனுஷ் சுள்ளான் படத் தில் நடித்து பல்பு வாங்கினார். அதன் பின்பு நம்ம பெண் சில் உடம்புக்கு இந்த பில்டப் ஆகவே ஆகாது என்ற முடிவுக்கு வந்தார். தோல்விக்கு பின்பும் விடாமல் அவர் புஜபலத்தை காட்டிய படங்கள் அத்தனையும் போஸ்ட ருக்கு ஆன செலவை கூட மீட்டுக் கொடுக்கவில்லை. அதன்பின்பு தன் உடல்வாகுக்கு ஏற்ற கதைகளில் நடித்ததால், இந்தி வரை சென்றார்

இந்நிலையில் பிரபல இயக்குனர் கே.வி.ஆனந்த் இயக்கப் போகும் கதையில் தனுஷ் ஆக்ஷன் கிங் அவதாரம் எடுக்கப் போகிறாராம்.

Discover the world with. . . .
SERENDIB Lanka Travels
Serendib Lanka Travels Ltd

Hot Deals to Colombo
Srilankan Airline £548
British Airways.....£490
Qatar Airways.....£520
Emirates £560
Royal Jordanian.....£610
Oman Air £560
Jet Airways.....£505
Kuwait Airways.....£455
Etihad.....£555

Incredible Indians fare
Chennai £410
Cochi £407
Trivendram.....£415
Goa £460
Bengaluru £410
Hydrabad £415

Far East Special
Singapore.....£510
Bangkok £480
Hongkong £475

QATAR KUWAIT AIRWAYS OMAN AIR BRITISH AIRWAYS JET AIRWAYS ETIHAD Emirates SriLankan

அனைத்து உலக விமானச்சீட்டுக்களையும் விசா சேவைகளையும் குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

All fares mentioned are low seasons including taxes

Contact : 020 8318 7775 David : 07454278520
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
EMail - david@serendib-lanka.co.uk
9667 ATOL PROTECTED
IATA

We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property (WE CAN ACT FOR ALL THE LENDERS)
- Immigration Law
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- CRIME (Business Immigration and Regulatory)
- Outsourcing Law
- Partnership Law
- Contract Law
- Serious Fraud

KTS LEGAL Solicitors & Advocates
KTS Legal Solicitors & Advocates
Tel:020 8367 0505
Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk

Lycamobile

Call the world for less



Sri Lanka

5p /min

Landline & Mobile

when you buy

National Bundle just for **£10** /30 Days

250 UK Minutes UNLIMITED

Texts **Data** **Lyca to Lyca**

To buy: dial *139*11044# or text 11044 to 3535

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

TESCO Sainsbury's MORRISONS Martin McColl PC World Budgens Argos LONDIS BARCLAYS Costcutter WELCOMEBREAK Carphone Warehouse Mills ONE STOP SPAR wilkinson currys Simply Drinks Nisa Today's BARGAIN BOOZE BOOKER Simply Food & Drinks

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile National Bundle ('the offer') inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Unlimited usage is subject to a fair usage of 3000 minutes/texts/MB per month per SIM. Usage in excess of your allowance will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Lycamobile's Special International rates for National Bundle customers offer ('the offer') is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £20, £30 or £40 National Bundles (not the £5 bundle). Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), or if it is being used for tethering. Promotional period: the offer is valid from 1st July 2013 until 31st July 2013.

Lycamobile
Call the world for less

Southall Travel

Redefining Travel

Why travel with Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED